## (ஓ) பன்னாட்டு வர்த்தகம்

**1. வர்த்தக நிலுவை**

தற்காலிகமான சுங்கத்தரவுகளின்படியான ஏற்றுமதிகளின் வருவாய்கள் (மீள ஏற்றுமதிகள் உள்ளடங்க) 1973ம் ஆண்டில் ரூபா 26,170 இலட்சங்களாக விளங்க 1974ம் ஆண்டில் ரூபா 34,720 இலட்சங்களாக உயர்வுற்று ரூபா 8,550 இலட்சங்கள் அல்லது 33 சதவீத அதிகரிப்பினைக் காட்டுகிற வேளையில், இறக்குமதிப் பெறுமதிகள் 1973ம் ஆண்டில் 27,150 இலட்சங்களாக விளங்கி 1974ம் ஆண்டில் மிக உயர்ந்த மட்டத்திற்கு ரூபா 45,540 இலட்சங்களாக அதாவது ரூபா 18,390 இலட்சங்களால் அல்லது 68 சதவீதத்தால் அதிகரித்தது. இதன் விளைவாக, இலங்கையின் வர்த்தக நிலுவையில் 1974ம் ஆண்டில் ரூபா 10,820 இலட்சங்கள் மொத்தக் குறைவு காணப்பட்டது. இதுவே இதுகாலவரையில் பதிவுசெய்யப்பட்ட ஆகக்கூடிய மொத்தக் குறையாகும். இதற்கு அடுத்தபடியான வர்த்தகக்குறை 1969ம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்ட ரூபா 6,270 இலட்சங்களாகும். முற்றிலும் மாறுபட்ட நிலையில் 1973ம் ஆண்டில் காணப்பட்ட வர்த்தக நிலுவைக் குறைவானது ரூபா 980 இலட்சங்களாகக் காணப்பட்டது. இக்குறைவானது மொத்த ஏற்றுமதி வருவாய்களின் சதவீதமாகப் பார்க்கையில் 1972ம் ஆண்டில் 2 7 சதவீதமாகவும் 1973ம் ஆண்டில் 3.7 சதவீதமாகவும் 1974ம் ஆண்டில் 31.2 சதவீதமாகவும் காணப்பட்டது.

### அட்டவணை II (ஓ) 1
### வெளிநாட்டு வர்த்தகம் 1960 - 1974

| ஆண்டு | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | குறிகாட்டியின் எண்கள் (1967 = 100) | | | | வர்த்தக மாற்று வீதங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அளவு | | விலை | | |
| | *ஏற்றுமதிகள் (க. எ. பெ.) | இறக்குமதிகள் (கொ.க.கா) | வர்த்தக நிலுவை | முழு ஏற்றுமதிகளும் | முழு இறக்குமதிகளும் | முழு ஏற்றுமதிகளும் | முழு இறக்குமதிகளும் | |
| 1961 | 1733 | 1703 | + 30 | 90 | 107 | 112 | 82 | 136 |
| 1962 | 1808 | 1660 | + 148 | 97 | 108 | 109 | 77 | 142 |
| 1963 | 1731 | 1490 | + 241 | 93 | 93 | 109 | 85 | 129 |
| 1964 | 1876 | 1975 | -- 99 | 102 | 114 | 111 | 105 | 105 |
| 1965 | 1949 | 1474 | + 475 | 105 | 86 | 113 | 100 | 112 |
| 1966 | 1700 | 2028 | -- 328 | 96 | 118 | 107 | 98 | 109 |
| 1967 | 1690 | 1738 | -- 48 | 100 | 100 | 100 | 100 | 100 |
| 1968 | 2035 | 2173 | -- 138 | 103 | 101 | 117 | 126 | 93 |
| 1969 | 1916 | 2543 | -- 627 | 98 | 108 | 117 | 134 | 88 |
| 1970 | 2033 | 2313 | -- 280 | 102 | 102 | 118 | 140 | 84 |
| 1971 | 1947 | 1986 | -- 39 | 99 | 90 | 117 | 150 | 78 |
| 1972 | 2009 | 2064 | -- 55 | 97 | 88 | 118 | 157 | 75 |
| 1973 | 2617 | 2715 | -- 98 | 98 | 79 | 137 | 209 | 65 |
| 1974 | 3472 | 4554 | --1082 | 85 | 56 | 213 | 370 | 58 |

* மீள ஏற்றுமதி செய்யப்பட்டவையும் அடங்கும்.

மூலங்கள்; இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி.

முக்கிய மூன்று மரபுவழி ஏற்றுமதிப் பொருட்களான தேயிலை, றப்பர், பொருட்கள் தெங்குப் பொருட்களின் மொத்த வருவாய்களை ரூபா அடிப் படையில் நோக்குமிடத்து 1973ம் ஆண்டில் காணப்பட்ட ரூபா 3050 இலட் சங்களுடன் ஒப்பிடும்போது இவ்வாண்டில் ரூபா 4970 இலட்சங்களாக அதிக ரித்துக் காணப்பட்டது. 1974ம் ஆண்டில் தேயிலையில் இருந்து பெற்ற வரு வாய் ரூபா 990 இலட்சத்தால் அதிகரித்த வேளையில் றப்பரிலிருந்தும், முக்கிய 3 தெங்குப் பொருட்களில் இருந்தும் பெற்ற வருவாயானது முறையே ரூபா 1460 இலட்சங்களாகவும், ரூபா 2520 இலட்சங்களாகவும் விளங்கின. மேலும் இரத்தினக் கற்கள் தவிர்ந்த ஏனைய உள்நாட்டு ஏற்றுமதிப் பெறுமதியானது - 1973ம் ஆண்டில் ரூபா 3460 இலட்சங்களாக விளங்க 1974ம் ஆண்டில் ரூபா 8430 இலட்சங்களாக விளங்கி கணிசமான அதிகரிப்பினைக் காட்டியது. அத் துடன் 1973ம் ஆண்டு இரத்தினக் கற்களின் ஏற்றுமதி வருவாயானது 1410 இலட்சங்களாக விளங்க, 1974ம் ஆண்டில் இது ரூபா 1090 இலட்சங்களாகக் குறைவடைந்த வேளையில் தெரிந்தெடுக்கப்பட்ட கைத்தொழிற் பொருட்க ளின் ஏற்றுமதியானது ரூபா 2806 இலட்சங்களால் உயர்வடைந்தது. மேலும் 1974ம் ஆண்டில் ஏனைய தெரிந்தெடுக்கப்பட்ட விவசாய, கைத்தொழிலற்ற ஏற்றுமதிகளின் வெளிநாட்டுச் செலாவணி வருவாய் அதிகரிப்பானது ரூபா 446 இலட்சங்களின் அளவிற் காணப்பட்டது.

இறக்குமதிப் பெறுமதியில் ஏற்பட்ட என்றுமில்லாவாறான அதிகரிப்பு, உயர்வான ஏற்றுமதி வருவாய்களால் பெற்ற பலனைக் கணிசமானளவால் எதி ரீடு செய்வதினால், சென்மதி நிலுவையில் பாதகமான நிலைமையே ஏற்பட்டுள் ளது. உதாரணமாக 1973ம் ஆண்டில் ரூபா 16240 இலட்சங்களாக நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிப் பெறுமதியானது இருக்கையில் 1974ம் ஆண்டில் ரூபா 21,380 இலட்சங்களாக உயர்வடைந்தது. இவற்றில் அரிசி, சீனி, மா என்பன மாத்திரமே, 1973ம் ஆண்டில் மொத்த இறக்குமதியில் 38 சதவீதமாக இருந்ததிற்கும் பதிலாக 1974ம் ஆண்டில் இலங்கையின் மொத்த இறக்குமதி யில் 39 சத வீதமாக அல்லது ரூபா 17670 இலட்சங்களாகக் காணப்பட்டது மேலும் நடுத்தரப் பொருட்களின் இறக்குமதிப் பெறுமதியில் கூட ரூபா 11,050 இலட்சங்கள் கொண்ட பாரிய அதிகரிப்பு ஏற்பட்டது. உணவுப் பொருட்கள், முதலீட்டுப் பொருட்கள் தவிர்ந்த இறக்குமதிப் பொருட்களின் கொடுப்பனவுகள் 1973ம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து ஓரளவுக்குப் பெரிய மாற்றமின்றி இருந்தது.

1974ம் ஆண்டில் இறக்குமதியிலான செலவீடு மிக உயர்ந்த மட்டத்தை அடைந்தபோதிலும், இறக்குமதியின் அளவில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட் டது. இலங்கை மத்திய வங்கியின் அளவுக் குறிகாட்டியானது (1967 - 100) 1969ம் ஆண்டில் 108 ஆக இருந்து அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு வருட மும் வீழ்ச்சியடைந்து, 1974ம் ஆண்டில் மாத்திரம் ஏற்பட்ட வீழ்ச்சியானது 23 புள்ளிகள் அல்லது 29 சத வீதமாகும். இதற்கு எதிர்மாறாக, எல்லா இறக்குமதிகளுக்குமான விலைகுறிகாட்டி (1967 - 100) 1966ம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக அதிகரித்து 1974ம் ஆண்டில் மிகவும் உயர்வான புள்ளியாக 370 ஆகியது. இப்புள்ளியானது முன்னைய ஆண்டில் காணப்பட்ட குறிகாட்டியான 209 உடன் ஒப்பிடுகையில் 77 சத வீதமான அதிகரிப்பைக் காட்டியது.

எல்லா ஏற்றுமதிகளுக்குமான அளவுக் குறிகாட்டியானது, குறிப்பாகத் தேயிலை, றப்பர் ஏற்றுமதிகளில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சியால் 13 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்த வேளையில், ஏற்றுமதிக்கான விலைக் குறிகாட்டியானது, 1973ம் ஆண்டில் 137 ஆக இருக்க 1974ம் ஆண்டில் 213 ஆக உயர்வுற்றது. இதற்கு முதல் விளைவுப் பொருட்களின் சர்வதேச விலைகளில் ஏற்பட்ட பொதுவான முன்னேற்றம் குறிப்பிடத்தக்க காரணமாகும். எனினும் ஏற்றுமதி விலைக்குறிகாட்டியில் ஏற்பட்ட அதிகரிப்பானது, இறக்குமதிகளின் விலைக்குறிகாட்டியில் ஏற்பட்ட அதிகரிப்பினை எதிரீடு செய்வதற்குப் போதியதற்றதாகக் காணப்பட்டது. இதன்விளைவாக இறக்குமதி செய்வதற்கான கொள்திறன் அல்லது வர்த்தக மாற்று விகிதம் 1973ம் ஆண்டில் இருந்த 65 க்கு மாறாக 1974ம் ஆண்டில் 58 ஆக வீழ்ச்சியடைந்தது. மேலும் முக்கிய உணவுப்பொருட்களான அரிசி, மா, சீனி, ஏனைய முக்கிய பொருட்களான சுத்திகரிக்கப்படாத எண்ணெய், உரம், ஏனைய வேறுசில நடுத்தரமான முதலீட்டுப் பொருட்கள் என்பனவற்றின் விலைகளில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்புகள் வர்த்தக மாற்று விகிதத்தினை அத்தகைய குறைவான நிலைக்குத் தள்ளுவதற்கு ஏவுதலாக இருந்தன.

**சுங்கத்தரவிலுள்ள முரண்பாடுகள்:**

சுங்கத் திணைக்களத்தினால் வர்த்தகத் தரவுகள் ஒழுங்குசெய்யப்பட்ட முறையில் சில முன்னேற்றம் காணப்பட்டது. அத்தகைய தரவுகள் கூடிய விரைவில் கிடைப்பதற்கு ஒன்று திரண்ட முயற்சி எடுக்கப்பட்டது. எனினும் சுங்கத்தினால் வழங்கப்பட்ட தரவுகள், குறிப்பாக இறக்குமதிபற்றிய எண்தொகைகள் மிகக் கவனத்துடன் விளக்கப்படல் வேண்டும். முதலில் கவனிக்கத்தக்கதென்னவெனின் சுங்கத்தினூடாக உண்மையில் வெளிவந்த இறக்குமதிகளின் பெறுமதி, சுங்கத்தினால் வழங்கப்பட்ட பெறுமதியில் இருந்து கணிசமானளவு வேறுபட்டுக் காணப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட மாதத்தில் பதிவு செய்யப்பட்டவைகளில் இருந்து தரவுகள் பெறப்பட்ட அதேவேளையில், அவ்வாறு பதிவுசெய்யப்பட்ட சில ஏற்றுமதிகளும், இறக்குமதிகளும், பிறிதொரு மாதத்தில், இப்பதிவுகளுக்கு முன்போ அல்லது பின்போ பிறிதொரு மாதத்தில் நிறைவேற்றப்படக்கூடியதாக இருத்தலே இதற்கு முக்கிய காரணமாகும். மேலும் சில தரவுகள் குறைத்தோ அல்லது கூட்டியோ பதியப்பட்டுள்ளன. இதற்கு உண்மையான ஏற்றுமதிகள், இறக்குமதிகளை நிறைவேற்றிய சில வர்த்தக முகவர்களுடன் தொடர்புகொள்வதன்மூலம் இத்தகைய பிழையான பதிவுகளை அளவிடலாம்.

மேலும், மறுபுறத்தில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், உணவு ஆணையாளர் என்பவற்றினால் செய்யப்பட்ட உண்மையான இறக்குமதிகளைப் பொறுத்தளவிலும், கூடியளவுக்குச் சரியான தரவுகள் கிடைக்கக்கூடிய ஏனைய இறக்குமதிகளைப் பொறுத்தளவிலும், சுங்கத் தரவுகள் மாற்றியமைக்கப்படல் வேண்டும். உதாரணமாக, 1974ம் ஆண்டில் உணவு ஆணையாளரினால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, மா, சீனி என்பன சுங்கத்தினால் ரூபா 1995 இலட்சங்கள் கொண்ட தொகையினால் குறைத்துப் பதிவுசெய்யப்பட்டதுடன் பெற்

ரோலியக் கூட்டுத்தாபனத்தின் இறக்குமதிகள் ரூபா 434 இலட்சத்தால் கூட்டிப் பதிவுசெய்யப்பட்டது. சுங்கத்தரவுகளின்படி 1974ம் ஆண்டில் அரிசி, மா, சீனி என்பவற்றின் இறக்குமதிகள் முறையே ரூபா 7205 இலட்சங்கள், ரூபா 8566 இலட்சங்கள், ரூபா 1899 இலட்சங்களாக விளங்க, உணவு ஆணையாளரினால் உண்மையாக இறக்குமதி செய்யப்பட்டதன்படி, இம்மூன்று பொருட்களும் முறையே ரூபா 7978 இலட்சங்கள், ரூபா 9384 இலட்சங்கள், ரூபா 2304 இலட்சங்கள் கொண்ட தொகையாக இருந்தன. சுங்கத்தினால் பதிவு செய்யப்பட்டதன்படி பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி ரூபா 9048 இலட்சங்களாக இருக்கையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பதிவுசெய்த தன்படி, பெறுமதி ரூபா 8614 இலட்சங்களாகும்.

### அட்டவணை II (ஓ) 2

### வர்த்தகத் தரவுக்கான சீராக்கங்கள்

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| | 1973 | 1974 |
|---|---|---|
| 1. மொத்த இறக்குமதிகள் (சுங்கத்தரவு) .. | 2,714.7 | 4,554.3 |
| 2. அரிசி, மா, சீனி இறக்குமதிகள் பற்றி சுங்கத்தினதும் உணவு ஆணையாளரினதும் பதிவேடுகளில் உள்ள வேறுபாடு ... | + 69.4 | + 199.8 |
| 3. பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதி பற்றி சுங்கத்தினதும் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பதிவேடுகளிலுள்ள வேறுபாடு ... | — 21.4 | — 43.4 |
| 4. மொத்த இறக்குமதிகள் (சீராக்கம் செய்யப்பட்டுள்ளது) .. | 2,762.7 | 4,710.7 |
| 5. மொத்த ஏற்றுமதிகள் (சுங்கத்தரவு) .. | 2,617.1 | 3,471.9 |
| 6. இரத்தினக் கல் ஏற்றுமதிகள் பற்றி சுங்கத் தரவிற்கும் இரத்தினக் கல் கூட்டுத்தாபனத்தின் தரவிற்குமுள்ள வேறுபாடு ... | + 12.0 | + 23.1 |
| 7. பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகள் பற்றி சுங்கத்தினதும் பெற்றோலியக் கூட்டுத்தாபனததினதும் தரவிலுள்ள வேறுபாடு .. | + 0.7 | + 7.9 |
| 8. மொத்த ஏற்றுமதிகள் (சீராக்கப்பட்டுள்ளது) ... | + 2,629.8 | 3,502.9 |
| 9. வர்த்தக நிலுவை (சீராக்கப்பட்டுள்ளது) ... | — 132.9 | — 1,207.8 |

மூலங்கள்: சுங்கப்பகுதி, இலங்கை
உணவு ஆணையாளர் திணைக்களம்.
பெற்றோலியக் கூட்டுத்தாபனம்.
அரச இரத்தினக் கல் கூட்டுத்தாபனம்.

மறுபுறத்தில், சுங்கத்தின் ஏற்றுமதி எண்தொகைகள் ரூபா 3421 இலட்சங்களாகும். இது ரூபா 2604 இலட்சங்கள் கொண்ட உள்நாட்டுக் கப்பல் எரிபொருட்கள், ரூபா 5 இலட்சங்கள் கொண்ட இறக்குமதி செய்யப்பட்ட கப்பல் எரிபொருட்கள் ரூபா 812 இலட்சங்கள் கொண்ட ஏனைய பெற்றோலியப் பொருட்களைக்கொண்டிருந்த அதேவேளையில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எண்தொகைகள் ரூபா 3491 இலட்சங்களாக விளங்கின. இவை ரூபா 882 இலட்சங்கள் கொண்ட ஏற்றுமதிகளையும், ரூபா 2157 இலட்சங்கள் கொண்ட கப்பல் எரிபொருளையும் ரூபா 452 இலட்சங்கள்கொண்ட வானூர்தி எரிபொருளையும் உள்ளடக்குகின்றன. மேலும் இரத்தினக்கல் ஏற்றுமதிகளின் பெறுமதிகள் சுங்கத் தரவுகளின்படி ரூபா 1095 இலட்சங்களாகவும், அரச இரத்தினக் கற் கூட்டுத்தாபனத்தின் பதிவுகளின்படி ரூபா 1326 இலட்சங்களாகவும் விளங்குகின்றன.

மேற்கூறப்பட்ட இத்தகைய வேறுபாடுகளினால் மத்திய வங்கியானது சுங்கப்பதிவுகளில் காட்டப்பட்ட இறக்குமதி, ஏற்றுமதிபற்றிய பெறுமதிகளினை மாற்றியமைத்தல் வழக்கமாகும். இவ்வாறு மாற்றியமைக்கப்பட்டதன் விளைவாக, மொத்த இறக்குமதிகள், ஏற்றுமதிகளின் பெறுமதிகள் முறையே ரூபா 47107 இலட்சங்களாகவும் ரூபா 35030 இலட்சங்களாகவும் விளங்குவதுடன், 1974ம் ஆண்டிற்கான மாற்றியமைக்கப்பட்ட வர்த்தக நிலுவை ரூபா 1208 இலட்சக் குறைவினைப் பிரதிபலிக்கும். (இதற்கு எதிர்மாறாகச் சுங்கத் தரவுகளின்படி ரூபா 10,820 இலட்சமாகும்).

## 2. ஏற்றுமதிகள்

அட்டவணை 11 ஓ 3 இல் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான முக்கிய ஏற்றுமதிப் பொருட்களின் வருவாய்கள் பற்றிய விபரங்கள், சீராக்கஞ் செய்யப்படாத சுங்கத் தரவுகளின் அடிப்படையில் தரப்பட்டுள்ளன. இலங்கை ரூபாய்களில் வருவாய்கள் கொடுக்கப்பட்டிருக்கிறமையால் ஏற்றுமதிகளின் உண்மையான இறக்குமதிக் கொள்ளளவினையோ அல்லது அதன் வெளிநாட்டுச் செலாவணிப் பெறுமதியினையோ காட்டாது இருப்பதால், அதே தரவுகள் சிறப்பு எடுப்பனவுகள் உரிமைகளின் அடிப்படையில் (சி. எ. உ.) தரப்பட்டுள்ளது. சி. எ. உ. அடிப்படையில் தரப்பட்டுள்ள ஏற்றுமதிப் பெறுமதிகள் ஒப்பீட்டடிப்படையில் உறுதியானவையாக காணப்படுகிறமையால், மிக உறுதியான அளவுகோலாக விளங்குகின்றன.

ரூபாய்கள் அடிப்படையில் ஏற்றுமதிகளின் எல்லா முக்கிய பிரிவுகளிலுமான வருவாய்கள் இரத்தினக் கற்கள் தவிர, வெவ்வேறு அளவுகளில் அதிகரித்த வேளையில் 1974ம் ஆண்டிற்கான மொத்த ஏற்றுமதி வருவாய்ப் பெறுமதிகள் ரூபா 8550 இலட்சங்களால் அல்லது 33 சத வீதத்தால் அதிகரித்தது சி. எ. உரிமைகள்[1] அடிப்படையில் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் ரூபா 880 இலட்சங்களால் அல்லது 26 சத வீதத்தால் மாத்திரமே[2] அதிகரித்தது.

---

1. இலங்கை மத்திய வங்கியானது கணிப்புகளுக்காகவும் ஒப்பீட்டிற்காகவும் ஒரு சி. எ. உரிமையினை இலங்கை ரூபா 8.05 ஆகக் கொண்டுள்ளது.
2. சி. எ. உரிமையின் அடிப்படையில் இறக்குமதிச் செலவுக்கான வெளிநாட்டுச் செலாவணி ரூபா 5660 இலட்சங்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. அதாவது சி. எ. உரிமையின்படி 2100 இலட்சங்கள் அதிகரிப்பினை அல்லது 59 சதவீத அதிகரிப்பினைக் காட்டுகிறது. எனவே 1974ம் ஆண்டில் இலங்கையின் வர்த்தக நிலவை சி. எ. உரிமையில் 1350 இலட்சங்கள் குறைவினையும் மொத்த ஏற்றுமதி வருவாயில் 31 சத வீதமாக்வும விளங்குகிறது.

## அட்டவணை II (ஒ) 3

## ஏற்றுமதிகளின் அமைப்பு 1970 - 1974

| பண்டம் | பெறுமதி ப. இலட்சம் ரூபாய்களில் | | | | | பெறுமதி பத்து இலட்சம் சி. ஏ. கூ.* | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1970 | 1971 | 1972 | 1973 | 1974 | 1970 | 1971 | 1972 | 1973 | 1974 |
| 1. தேயிலை ... | 1120 | 1144 | 1162 | 1261 | 1360 | 188.16 | 192.19 | 171.39 | 165 27 | 168.94 |
| 2. றப்பர் ... | 440 | 307 | 265 | 592 | 738 | 73.92 | 51.58 | 39.08 | 77.59 | 91.68 |
| 3. தெங்கு உற்பத்திகள் .. | 240 | 280 | 266 | 145 | 397 | 40.32 | 47.04 | 39.23 | 19.00 | 49.32 |
| 3.1 கொப்பரா | 23 | 24 | 52 | 4 | 1 | 3.86 | 4.03 | 7.69 | 0.52 | 0.12 |
| 3.2 தேங்காயெண்ணெய் | 116 | 149 | 132 | 27 | 141 | 19.49 | 25.03 | 19.47 | 3.54 | 17.52 |
| 3.3 தேங்காய்த் துருவல் | 98 | 103 | 78 | 111 | 252 | 16.46 | 17.30 | 11.50 | 14.55 | 31.30 |
| 3.4 தேங்காய்கள் | 3 | 4 | 4 | 3 | 3 | 0.50 | | 0.59 | 0.39 | 0.37 |
| 4. இரத்தினக் கற்களும் | | | | | | | 0.67 | | | |
| அவை சார்பான கற்களும் | 4 | 3 | 12 | 141 | 109 | 0.67 | 0.50 | 1.77 | 18.48 | 13.54 |
| 5. ஏனைய உள்ளூர் ஏற்றுமதிகள் ... | 191 | 196 | 218 | 346 | 843** | 32.09 | 32.93 | 32.15 | 45.35 | 104.72 |
| மொத்தஉள்ளூர்ஏற்றுமதிகள் | 1995 | 1930 | 1993** | 2596** | 3447** | 335.16 | 324.24 | 293.95 | 340.24 | 428.20 |
| மீளஏற்றுமதி செய்யப்பட்டவை | 38 | 17 | 16 | 21 | 25 | 6.38 | 2.86 | 2.21 | 2.88 | 3.11 |
| **மொத்தம்** .. | **2033** | **1947** | **2009** | **2617** | **3472** | **341.54** | **327.10** | **296.31** | **342.99** | **431.30** |

* பாவிக்கப்பட்ட மாற்று வீதங்கள் பின்வருமாறு:-

மூலம்: இலங்கைச் சுங்கம்

1970, 1971 - ஒரு சி. எ. உ. = ரூ. 5.95; 1972 - ஒரு சி. எ. உ. = ரூ. 6.78; 1973 - ஒரு சி. எ. உ. = ரூ. 7.63. 1974 - ஒரு சி. எ. உ. = ரூ. 8.05.

** கப்பல் எரி பொருட்களையும் உள்ளடக்கும்.

உற்பத்தி வீழ்ச்சியுடன் 1974ம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 1973ம் ஆண்டிற்கான ஏற்றுமதியான 4540 இலட்சம் இருத்தல்களிலிருந்து 3870 இலட்ச இருத்தல்களாக வீழ்ச்சியடைந்தது. எனினும் தேயிலைக்கான பன்னாட்டுச் சந்தை விலையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தால் ஏற்றுமதி வருவாய்கள் ரூபா 13 600 இலட்சத்திற்கு அதிகரித்தன. (ரூபா 990 இலட்ச அதிகரிப்பு அல்லது 8 சத வீதமாகும்) றப்பர் ஏற்றுமதியின் அளவும் 1973ம் ஆண்டிற்கான ரூபா 3544 இலட்ச இருத்தல்களிலிருந்து 1974ம் ஆண்டில் 2831 இலட்ச இருத்தல்களாக வீழ்ச்சியடைந்து 713 இலட்ச இருத்தல்கள் அல்லது 20.1 சதவீதக் குறைவினைக் காட்டுகிறது. ஆனால் றப்பரில் இருந்து கிடைத்த ஏற்றுமதி வருவாய் 1973ம் ஆண்டில் ரூபா 5920 இலட்சமாக இருந்து 1974ம் ஆண்டில் ரூபா 7380 இலட்சமாக அதிகரித்தது. (ரூபா 1460 இலட்ச அல்லது 25 சதவீத அதிகரிப்பினைக் காட்டுகிறது)

இவ்வாறு அதிகரிப்பதற்கு முக்கிய காரணம் க.ஏ.பெ. விலை 1973ஆம் ஆண்டில் இருத்தலொன்றுக்கு ரூபா 1.67 ஆக இருந்து 1974 ஆம் ஆண்டில் ரூபா

2.61 ஆக உயர்வடைந்தமையேயாகும். எல்லா முக்கிய 3 தெங்குப்பொருட்களினதும் தேங்காய்களினதும் ஏற்றுமதிப் பெறுமதியானது 1973 ஆம் ஆண்டில் ரூபா 1,450 இலட்சங்களாக இருந்து 1974 ஆம் ஆண்டில் ரூபா 3,970 இலட்சங்களாக உயர்வடைந்தது. (இது ரூபா 2,250 இலட்சங்களாக அதாவது, 174 சத வீத அதிகரிப்பாகும்). எனினும், ஏற்றுமதி செய்யப்பட்ட அளவில் 460 இலட்சம் தேங்காய்களின் அதிகரிப்புக் காணப்பட்டது. இதுமாத்திரமல்லாமல், க. ஏ. பெ. விலையானது, 1973 ஆம் ஆண்டில் ரூபா 0.68 இலிருந்து 1974 ஆம் ஆண்டில் ரூபா 0.85 (சமமான தேங்காய்கள் அடிப்படையில்) ஆக அதிகரித்தமையும், தெங்குப் பொருட்களிலிருந்து பெற்ற வருவாய்கள் அதிகரிப்பதற்குக் காரணமாகும். சிலிர்ப்பு மெத்தைத் தும்பு, சிரட்டைக்கரி உள்ளடங்கிய எல்லாத் தெங்குப் பொருட்களையும் உள்ளடக்கி நோக்குகையில், 1974 ஆம் ஆண்டில் இதனாற்பெற்ற வருவாய் ரூபா 5,370 இலட்சங்கள் அல்லது மொத்த ஏற்றுமதி வருவாய்களில் 15 சத வீதமாகும்.

பெறுமதி அடிப்படையில் இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களின் தொகுதியில் ஒருசில காலத்திற்கு, மரபு வழி ஏற்றுமதிப் பொருட்களின் முக்கியத்துவம் படிப்படியாக வீழ்ச்சியடைந்தது. இப்போக்கு 1974 ஆம் ஆண்டில் மேலும் அதிகரித்தது. உதாரணமாக, முக்கிய 3 மரபுவழி ஏற்றுமதிப்பொருட்களான தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்கள் என்பன ஏற்றுமதிகளின் சத வீத அடிப்படையில் பார்க்கும்போது, 1971 ஆம் ஆண்டிலும் 1972 ஆம் ஆண்டிலும் முறையே 89 சத வீதமாகவும் 88 சத வீதமாகவும் காணப்பட்டு. 1973 ஆம் ஆண்டில் 77 சத வீதமாகவும் 1974 ஆம் ஆண்டில் 70 சத வீதமாகவும் வீழ்ச்சியடைந்தது. மேலும், மரபுவழி ஏற்றுமதிப் பொருட்கள் துறையின் உள்ளேயும், மாற்றம் காணப்பட்டது. மிகவும் குறிப்பிடத்தக்க அம்சமென்னவெனில், பெறுமதி அடிப்படையில் மரபுவழி ஏற்றுமதிப் பொருட்களில், தேயிலையின் பங்கு 1972 ஆம் ஆண்டில் 58 சத வீதமாக இருந்து 1973 ஆம் ஆண்டில் 48 சத வீதமாக வீழ்ச்சியடைய 1974 ஆம் ஆண்டில் இது மேலும் 39 சத வீதமாக வீழ்ச்சியடைந்தது.

மொத்த மரபுவழி ஏற்றுமதிகளில் தேயிலையின் பங்கு வீழ்ச்சியடைந்தமைக்கு, தேயிலை ஏற்றுமதி வருவாய்களின் வீழ்ச்சி காரணமல்ல. உண்மையில், 1973 ஆம் ஆண்டில் ரூபா 12,610 இலட்சங்களாக இருந்த வருவாய், 1974ஆம் ஆண்டில் ரூபா 13.600 இலட்சங்களாக அதிகரித்தன ஆனால் ஏனைய உள்நாட்டு ஏற்றுமதிகள் என்பவற்றின் பெறுமதியானது அதிகரித்த வீதம் கூடுதலாக இருந்தமையினால் தேயிலையில் கிடைத்த வருவாயின் பங்கில் வீழ்ச்சி காணப்பட்டது. மொத்த எண்ணிக்கையில் பார்க்கும்பொழுது றப்பரின் வருவாய்கள் அதிகரித்தன. ஆனால் அதன் வருவாய்ப் பங்கு 23 சத வீதமாக இருந்து 21 சத வீதமாக வீழ்ச்சியடைந்தது. மேலும் தேங்காயெண்ணெய், கொப்பரா, தேங்காயத் துருவல், புதிய தேங்காய்கள், என்பவற்றின் ஏற்றுமதி வருவாய்கள் 1973 ஆம் ஆண்டில் 6 சத வீதமாக இருந்து, 1974 ஆம் ஆண்டில் 11 சத வீதமாக அதிகரித்த வேளையில், இரத்தினக் கற்கள், தவிர்ந்த ஏனைய உள்நாட்டு ஏற்றுமதிகள், குறிப்பாகக் கைத்தொழில், விவசாயப் பொருட்களின் வருவாய்களின் பங்கானது 13 சத வீதத்திலிருந்து 24 சத வீதமாகப் பெரிதளவால் அதிகரித்தது.

(அ) தேயிலை

உற்பத்தி

1974 ஆம் ஆண்டில் தேயிலைக் கைத்தொழிலில் இரண்டு வேறுபட்ட போக்குகள் தெளிவாகக் காணப்படுகின்றன. முதலாவதாகத் தேயிலை உற்பத்தியில் 3 ஆவது தொடர்ச்சியான ஆண்டிலும் தொடர்பான வீழ்ச்சி காணப்பட்டதுடன் தேயிலை விலைகளில் கொழும்பு - இலண்டன் ஏலங்களில் முன்னேற்றம் காணப்பட்டது.

தேயிலை உற்பத்தியானது 1973 ஆம் ஆண்டில் 4657 இலட்சம் இருத்தல்களாக இருந்து, 1974ஆம் ஆண்டில் 4498 இலட்சம் இருத்தல்களாக விளங்கி, 1.59 இலட்சம் இருத்தல்கள் அல்லது 3.4 சத வீத வீழ்ச்சியைக் காட்டியது. 1965 ஆம் ஆண்டு 5030 இலட்சம் இருத்தல்களாக இருந்து அன்றுதொட்டுத் தொடர்ந்து வீழ்ச்சிப்போக்கினைக் காட்டியது. (1968 ஆம் ஆண்டில் 90 இலட்சம் இருத்தல்களால் அதிகரித்ததனைத் தவிர) 1974 ஆம் ஆண்டில் உற்பத்தியானது 4500 இலட்சம் இருத்தல்களாக இருந்தமையே 1960 ஆம் ஆண்டிலிருந்து ஆகக் குறைவாக உற்பத்தி செய்யப்பட்டதாகும். உரப்பாவனை குறைந்தமை, தோட்டங்களைத் துண்டாடியமை, நிலச் சீர்திருத்தங்களால் எழுந்த உறுதியற்ற தன்மை, மேலும் ஓரளவுக்குப் பாதகமான காலநிலைமைகள் என்பன கடந்த ஆண்டிற்கான உற்பத்தியைத் தாக்கிய காரணங்களாகும்.

அட்டவணை II (ஓ) 4

தேயிலை உற்பத்தி — உயர அடிப்படையில்

| | 1973 | | 1974 | | 1973ஐ விட 1974இல் முழுமையான மாற்றங்கள் |
|---|---|---|---|---|---|
| | அளவு (ப.இ. இரு.) | % | அளவு (ப.இ. இரு.) | % | |
| உயர்ந்த பிரதேசம் ... | 177.6 | 38.1 | 177.0 | 39.3 | — 0.6 |
| நடுத்தரப் பிரதேசம் ... | 155.3 | 33.3 | 155.4 | 34.6 | + 0.1 |
| தாழ்ந்த பிரதேசம் ... | 132.9 | 28.6 | 117.4 | 26.1 | —15.5 |
| மொத்தம் | 465.8 | 100.0 | 449.8 | 100.0 | —16.0 |

மூலம்: தேயிலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்.

தரையுயர்ச்சி அடிப்படையிலான உற்பத்திப் பாகுபாட்டின்படி, 1974ஆம் ஆண்டில், ஏற்பட்ட உற்பத்தி வீழ்ச்சியானது, பெருமளவுக்குத் தாழ்நிலப் பிரதேசத்தில் விளைவிக்கப்பட்ட தேயிலையில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாகும். தேயிலை உற்பத்தியின் மொத்த வீழ்ச்சியானது 159 இலட்சம் இருத்தல்களால் வீழ்ச்சியடைந்து காணப்படுகையில், தாழ்நிலத் தேயிலையின் உற்பத்தி 155 இலட்சம் இருத்தல்களால் வீழ்ச்சியடைந்தது. மொத்த உற்பத்தியில் பதிவான இடங்களுக்கான தேயிலையின் பங்கு 1973ஆம் ஆண்டில் 28.6 சதவீத

மாக இருந்து, 1974ஆம் ஆண்டில் 26.1 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. அதன் விளைவாக, உயர்ந்த பகுதியிலும், நடுத்தரப் பகுதியிலும் வளர்ந்த தேயிலையின் பங்கானது முறையே 38.1 சதவீதம் 33.3 சதவீதமாக இருந்து 39.3 சதவீதமாகவும் 34.6 சதவீதமாகவும் உயர்வடைந்தது.

தேயிலைக் கட்டுப்பாட்டாளரின்படி, 1974ஆம் ஆண்டில் 828 தேயிலைத் தொழிற்சாலைகள் இயங்கிவந்தன. தரையுயர்ச்சி அடிப்படையிலான அவைகளின் பாகுபாட்டின்படி, உயர்ந்த தரைக்கான தேயிலையை 235 தேயிலைத் தொழிற்சாலைகள் தயாரித்து வந்த வேளையில் முறையே நடுத்தரமான தரைத் தேயிலையும், தாழ்நிலத் தேயிலையும், 232, 261 தொழிற்சாலைகளால் தயாரிக்கப்பட்டன. மொத்தத்தில் 352 தேயிலைத் தொழிற்சாலைகள் தாம் உற்பத்தி செய்த தேயிலையினைத் தயாரிக்கையில், 366 தேயிலைத் தொழிற்சாலைகள் தாம் விளைவித்த தேயிலையுடன் பிற இடத்தில் வாங்கிய தேயிலையையும் தயாரித்தன. மேலும், 74 தொழிற்சாலைகள் பிற இடத்தில் வாங்கியவற்றை மாத்திரமே தயாரித்தன. அதே வேளையில், 36 தொழிற்சாலைகள் தயாரிப்பில் ஈடுபடவில்லை.

1974ஆம் ஆண்டில் மொத்த உற்பத்தியில் 10 சதவீதம் அல்லது 452 இலட்சம் இருத்தல்கள் உள்ளூர் நுகர்வாக மதிப்பிடப்பட்டது. பல்வேறுவித உதவு தொகைத் திட்டத்தின்கீழ் அரசாங்கத்தினால் செலவிடப்பட்ட தொகைகள் ரூ. 1,135 இலட்சங்கள் பின்வருமாறு: தேயிலை மீள நடுகை உதவு தொகைத் திட்டம் ரூ. 218 இலட்சங்கள்; தேயிலைத் தொழிற்சாலை அபிவிருத்தி உதவு தொகைத் திட்டம் ரூ. 37 இலட்சங்கள்; றப்பர் நிலங்களில் தேயிலை மீள நடுகை உதவு தொகைத் திட்டம் ரூ. 4 இலட்சங்கள்; தேயிலைக்கான உர உதவு தொகைத் திட்டம் ரூ. 480 இலட்சங்கள்; தேயிலைப் பெட்டி உதவுதொகைத் திட்டம் ரூ. 386 இலட்சங்கள்; பயிரைப் பன்முகப்படுத்தும் உதவு தொகைத் திட்டம் ரூ. 10 இலட்சங்கள்.

**ஏற்றுமதிகள்**

அட்டவணை II (ஒ) 5 ஆனது, உற்பத்தி, ஏற்றுமதி அளவு, கொழும்பு ஏலத்திலும் இலண்டன் ஏலத்தில் விற்கப்பட்ட தேயிலை தனிப்பட்ட விற்பனவுகள், என்பனவற்றின் தரவுகளைக் கொண்டுள்ளது. 1974ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட 3,870 இலட்சம் இருத்தல்கள், 670 இலட்சம் இருத்தல்கள்[1] கொண்ட பெரிய வீழ்ச்சியினைக் காட்டியது இதற்கு மாறாக, முன்னைய ஆண்டில் ஏற்றுமதியானது, உற்பத்தியில் 50 இலட்சம் இருத்தல்கள் வீழ்ச்சியைக் கொண்டிருந்தாலும், 350 இலட்சங்கள் கொண்ட அளவினால் அதிகரித்தது. 1974ஆம் ஆண்டில் குறைந்தளவு ஏற்றுமதி செய்வதற்கு, கொழும்புத் தேயிலை ஏலத்தில் வழங்கப்பட்ட குறைவான அளவும், கராய்ச்சித் துறைமுகத்தில் ஏற்பட்ட ஒழுங்கீனங்கள், ஐக்கிய அமெரிக்காவில் உள்ள சில துறைமுகங்களில் ஏற்பட்ட கப்பற் கட்டணை நெருக்கடிகள் போன்ற கப்பற்றுறைப் பிரச்சினைகளும் முக்கிய காரணங்களாகும். மேலும், 1973ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதித் தரவுகள், 1972ஆம் ஆண்டு முடிவு காலப் பகுதியில் செய்யப்பட்ட சில ஏற்றுமதிகளையும் உள்ளடக்கின. ஆனால் 1974ஆம் ஆண்டிற்கான தரவுகள் 1973ஆம் ஆண்டிலிருந்து மாற்றப்பட்ட ஏற்றுமதித் தொகைகளை உள்ளடக்கவில்லை.

---

1. தயவுசெய்து...... பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைப் பார்க்கவும்.

## அட்டவணை II (ஓ) 5

### உற்பத்தியும், ஏற்றுமதிகளும், கொழும்பு ஏலத்தில் விற்கப்பட்ட அளவுகளும் இலண்டன் ஏலங்களுக்குக் கப்பலிடப்பட்ட அளவும்

பத்து இலட்சம் இறாத்தல்களில்

| ஆண்டு | உற்பத்தி | ஏற்றுமதிகள் | கொழும்பு ஏலங்களில் விற்பனையான அளவு | இலண்டன் ஏலங்களுக்கு நேரடியாகக் கப்பலிலிடப்பட்ட அளவு | தனிப்பட்ட விற்பனைகள் |
|---|---|---|---|---|---|
| 1969 | 484 | 445 | 387 | 88 | 5 |
| 1970 | 468 | 460 | 373 | 91 | 4 |
| 1971 | 480 | 443 | 393 | 73 | 5 |
| 1972 | 471 | 419 | 391 | 54 | 4 |
| 1973 | 466 | 454 | 410 | 46 | 4 |
| 1974 | 450 | 387 | 392 | 51 | 3 |

1. சுங்கப் பதிவுகளிலிருந்து பெறப்பட்ட எண்தொகைகள் அடிப்படையில்.

மூலங்கள்: தேயிலைக்கட்டுப்பாட்டாளரின் நிருவாக அறிக்கைகள், இலங்கைச் சங்கம், கொழும்புத் தேயிலைத் தரகர் சங்கம்.

தேயிலை ஏற்றுமதி விலைகளில் காணப்பட்ட முன்னேற்றம் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியினை மேலதிகமாக எதிரீடு செய்தது. ஏற்றுமதி வருவாய்களினை ரூபாய் அடிப்படையில் நோக்குமிடத்து, 1973 ஆம் ஆண்டில் ரூ. 12,607 இலட்சங்களாக விளங்கி, 1974ஆம் ஆண்டில் ரூ. 13,597 இலட்சங்களாக உயர்வடைந்து, 7.85 சதவீத அதிகரிப்பினைக் காட்டுகின்றது. மேலும், வெளிநாட்டுச் செலாவணி அடிப்படையில் நோக்குமிடத்தும் வருவாயில் அதிகரிப்புக் காணப்படுகிறது. உதாரணமாக, 1974ஆம் ஆண்டில் தேயிலையின் ஏற்றுமதி வருவாய் சி. எ. உ. யின்படி 1689.4 இலட்சங்களாக விளங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து, சி. எ. உ. 36.7 இலட்சங்கள் அதிகரிப்பினை எடுத்துக் காட்டும் அதே வேளையில், 1972ஆம் ஆண்டிற்கான சி. எ. உ. 1713.9 இலட்சத்துடன் ஒப்புநோக்குகையில் வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் சி. எ. உ 24.5 இலட்சங்களால் குறைவடைந்து காணப்பட்டது.

### சேரிடங்களின்படியான ஏற்றுமதிகள்

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து, 1974 ஆம் ஆண்டில் தேயிலை ஏற்றுமதிகளின் சேரிடங்களில் மாற்றம் ஏற்பட்டதுடன், கிட்டத்தட்ட எல்லா நாடுகளினதும் தேயிலைக் கொள்வனவிலும் வீழ்ச்சி ஏற்பட்டது. மேலும் ஐக்கிய இராச்சியத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 1973ஆம் ஆண்டில் 723 இலட்சம் இறாத்தல்களாக விளங்கி, 1974இல் 673 இலட்சம் இறாத்தல்களாக வீழ்ச்சியடைந்தது. எனினும் ஐக்கிய இராச்சியமே தொடர்ந்து இலங்கைத் தேயிலையின் ஆகக் கூடிய அளவினை வாங்கும் நாடாக விளங்கியது. ஐக்கிய இராச்சியத்தின் மொத்த ஏற்றுமதி அளவின் பங்கில் 1973 ல் 15.9 சதவீதமாக இருந்து 1974ஆம் ஆண்டில் 17.4 சதவீதமாக அதிகரித்தது. பாக்கித்தானின் முக்கியமான தேயிலை வழங்கும் பகுதியாக விளங்கிய வங்காள

தேசம் தனி நாடாக வந்தமையால், 1972ஆம் ஆண்டில் பாக்கித்தான் இலங்கையிலிருந்து தேயிலை கூடுதலாக இறக்குமதி செய்யும் இரண்டாவது நாடாக மாறியது. பாக்கித்தானுக்கு இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலை 63 இலட்ச இருத்தல்களால் வீழ்ச்சியடைந்தாலும், 1973ஆம் ஆண்டில் பாக்கித்தானின் மொத்த ஏற்றுமதியில் எமது பங்கு 14.7 சதவீதமாக இருந்து, 1974ஆம் ஆண்டில் 15.6 சதவீதமாக அதிகரித்தது.

அடுத்து, அமெரிக்க ஐக்கிய நாடுகள், எல்லையளவால் ஈராக்கிலும் பார்க்க கூடுதலாக இருந்து உயர்ந்த அளவு இறக்குமதி செய்யும் அடுத்த மூன்றுவது நாடாக விளங்கி, ஈராக்கினை மூன்றுவது இடத்திலிருந்து, 4வது இடத்திற்குத் தள்ளியது. மேலும் முக்கியத்துவம் வாய்ந்தவை என்ற ஒழுங்கினிற் பார்க்குமிடத்து அவுத்திரேலியா, தென்னுபிரிக்கா ஒன்றியம், லிபியா என்பன மற்றைய நாடுகளாகும். 1974ஆம் ஆண்டில் ஐக்கிய அரபுக் குடியரசுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டது.

### அட்டவணை II (ஓ) 6

**தேயிலை ஏற்றுமதிகளும் சதவீதப் பங்குகளும் நாட்டின் அடிப்படையிலான பாகுபாடு**

| நாடு | அளவு (ப. இ. ரு.) | | மொத்த அளவில் சதவீதம் | | பெறுமதி (ப. இ. ரூ.) | | மொத்த அளவில் சதவீதம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1973 | 1974 | 1973 | 1974 | 1973 | 1974 | 1973 | 1974 |
| 1. ஐரோப்பிய பொருளாதார சமூகம் | 100.0 | 81.7 | 22.0 | 21.1 | 289.2 | 273.7 | 22.9 | 20.1 |
| 1. 1. ஐக்கிய இராச்சியம் ... | 72.3 | 67.3 | 15.9 | 17.4 | 197.7 | 214.3 | 15.8 | 15.8 |
| 1. 2. அயர்லாந்துக் குடியரசு... | 2.5 | 1.9 | 0.6 | 0.5 | 6.2 | 6.7 | 0 5 | 0.5 |
| 1. 3. தென்மார்க்கு ... | 1.0 | 0.8 | 0.2 | 0.2 | 3.1 | 3.6 | 0.2 | 0.2 |
| 1. 4. ஏனையவை ... | 24.2 | 11.7 | 5.3 | 3.0 | 82.2 | 49.1 | 6.5 | 3.6 |
| 2. பாகிஸ்தான் ... .. | 66.8 | 60.5 | 14.7 | 15.6 | 165.3 | 202.2 | 13.1 | 14.9 |
| 3. ஐக்கிய அமெரிக்கா ... | 39.0 | 35 2 | 8.6 | 9.1 | 110.1 | 124.4 | 8.7 | 9.1 |
| 4. இராக் ... | 44.4 | 34.4 | 9.8 | 8.9 | 103.8 | 107.6 | 8.2 | 7.9 |
| 5. அவுஸ்திரேலியா ... ... | 24.4 | 21.7 | 5 4 | 5.6 | 65.2 | 85.2 | 5.2 | 6.3 |
| 6. தென் ஆபிரிக்கா ஒன்றியம் ... | 23.6 | 21.6 | 5.2 | 5.6 | 74.3 | 89.8 | 5.9 | 6.6 |
| 7. லிபியா ... | 19.5 | 12.5 | 4.3 | 3.2 | 54.6 | 35.4 | 4.3 | 2.6 |
| 8. ஐக்கிய அராபியக் குடியரசு ... | 20.6 | 4.3 | 4.5 | 1.1 | 7.0 | 12.1 | 0.6 | 0.9 |
| 9. சோவியத் ருஷ்ய ... | 2.2 | 4.0 | 0.5 | 1.0 | 8.7 | 16.9 | 0.7 | 1.2 |
| 10. ஏனைய நாடுகள் ... .. | 113.1 | 110.9 | 25.0 | 28.8 | 382 6 | 412.4 | 30.4 | 30.4 |
| மொத்தம் ... | 453.6 | 386.8 | 100.0 | 100.0 | 1260.8 | 1359.7 | 100.0 | 100.0 |

மூலம: சுங்கம், இலங்கை.

**கொழும்பு ஏலங்கள்**

1974ஆம் ஆண்டில் கொழும்பு ஏலத்தில் விற்கப்பட்ட தேயிலையின் அளவில் 181 இலட்சம் இருத்தல்கள் வீழ்ச்சி காணப்பட்ட போதிலும் மொத்த விற்பனவிலும் விலைகளிலும் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டது. தேயிலை உற்பத்திச் செலவானது, போக்குவரத்து எண்ணெய், உரம், தேயிலைப் பெட்டிகள், என்பனவற்றின் செலவுகள் அதிகரித்தமையால், கூலியளவுகள் அதிகரித்த அச் சமயத்தில் கூட்டு நடவடிக்கைகளின் நன்மைகளுடன் ஒன்று சேர்ந்த சிறந்த சந்தைப்படுத்தும் முறைகளும் தேயிலைக் கைத்தொழிலுக்குப் போதிய வருவாயை ஈட்டிக் கொடுத்தன. கொழும்பு ஏலத்தில் செய்யப்பட்ட மொத்த விற்பனவுகள் 1973ஆம் ஆண்டில் ரூ. 8 070 இலட்சமாக விளங்கி, 1974ஆம் ஆண்டில் ரூ. 11,800 இலட்சங்களை அடைந்து ரூ. 2,630 இலட்ச அதிகரிப்பினைக் காட்டியது. உள்நாட்டு உற்பத்தியாளர் என்ற முறையில் நோக்குமிடத்து, தேறிய மொத்த விற்பனையானது, மிகவும் முக்கியமானதாக இருந்ததுடன், 1974ஆம் ஆண்டில் ரூ. 10 380 இலட்சமாக விளங்கி, முந்திய ஆண்டுடன்[1] ஒப்பிடுமிடத்து, ரூ. 2,630 இலட்ச அதிகரிப்பினைக் காட்டின. மொத்த விற்பனவுக்கும், தேறிய விற்பனவுக்குமான வித்தியாசம் அரசாங்கத்தினுற் சேகரிக்கப்பட்ட பெறுமதி அடிப்படையான விற்பனவு வரியாகும். 1974ஆம் ஆண்டு கொழும்பு ஏலத்தில் வழங்கப்பட்ட தேயிலையின் அளவில் 180 இலட்ச இருத்தல்கள் கொண்ட வீழ்ச்சி பதிவு செய்யப்படாவிடின், மொத்த விற்பனவு கூடுதலாக இருந்திருக்கும்.

அட்டவணை II (ஏ) 7

**தேயிலை உற்பத்திகளும், ஏற்றுமதிகளும், விலைகளும் 1970-1974**

| ஆண்டு | | உற்பத்தி ப.இ.இரு. | ஏற்றுமதிகள் | | கொழும்பு ஏலவிற்பனையின் தேறியசராசரி (இருத்தலொன்றுக்கு ரூபாய்) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | அளவு ப.இ.இரு. | க.எ.பெ. விலை இரு.ரூ. | உயர்ந்த பிரதேசம் | நடுத்தர பிரதேசம் | தாழ்ந்த பிரதேசம் | எல்லாத் தேயிலைகளும் |
| 1970 | ... | 468 | 460 | 2.44 | 1.92 | 1.58 | 1.38 | 1.63 |
| 1971 | ... | 480 | 443 | 2.56 | 1.94 | 1.72 | 1.76 | 1.81 |
| 1972 | ... | 471 | 419 | 2.77 | 1.99 | 1.80 | 1.89 | 1.89 |
| 1973 | ... | 466 | 454 | 2.77 | 2.09 | 1.76 | 1.80 | 1.89 |
| 1974 | ... | 450 | 387 | 3.52 | 2.76 | 2.49 | 2.67 | 2.64 |
| 1973 | 1-ம் காலாண்டு ... | 104 | 122 | 2.79 | 2.19 | 1.74 | 1.79 | 1.91 |
| | 2-ம் காலாண்டு ... | 147 | 106 | 2.77 | 1.89 | 1.71 | 1.79 | 1.80 |
| | 3 ம் காலாண்டு ... | 93 | 115 | 2.76 | 2.23 | 1.83 | 1.78 | 1.94 |
| | 4-ம் காலாண்டு .. | 121 | 111 | 2.79 | 2.08 | 1.81 | 1.86 | 1.93 |
| 1974 | 1-ம் காலாண்டு ... | 98 | 82 | 3.00 | 2.64 | 2.16 | 2.10 | 2.32 |
| | 2-ம் காலாண்டு ... | 141 | 89 | 3.41 | 2.66 | 2.43 | 2.91 | 2.55 |
| | 3-ம் காலாண்டு ... | 92 | 112 | 3.58 | 2.97 | 2.71 | 2.95 | 2.86 |
| | 4-ம் காலாண்டு ... | 119 | 104 | 3.99 | 3.04 | 2.82 | 3.12 | 3.00 |

மூலங்கள்: தேயிலைக் கட்டுப்பாட்டாளரின் நிருவாக அறிக்கைகள்,
இலங்கைச் சங்கம்,
கொழும்புத் தேயிலைத் தரகர் சங்கம்.

1. 1974ஆம் ஆண்டுத் தேயிலைச் சந்தை அறிக்கை, போப்ஸ்சும், வாக்கரும் பக். 1.

கொழும்புத் தேயிலை ஏலத்திற்கான சராசரித் தேறிய விலையானது, 1973 ஆம் ஆண்டில் ரூ. 1.89 ஆக இருந்து 1974ஆம் ஆண்டில் ரூ. 2.64 ஆக இருத்தலொன்றுக்கு உயர்வடைந்தது அல்லது உயர்வு 40 சதவீதமாகும். 1973 ஆம் ஆண்டில் பெருமளவுக்கு நிலையாக இருந்த விலை மட்டத்துடன் நோக்குகையில் 1974ஆம் ஆண்டில் ஏற்பட்ட விலை அதிகரிப்புக் கணிசமானதாகும். விலையிலேற்பட்ட அதிகரிப்பினை 1973 ஆம் ஆண்டு திசம்பர் மாதத்திற்கான ஒரு இருத்தலுக்கு ரூ. 1.93 உடன் ஒப்பிடுகையில், 1974 ஆம் ஆண்டிற்கான அதே மாதத்திலிருந்து விலை ரூ. 3.11 ஆக விளங்கியது. தேயிலைக்கான சராசரித் தேறிய விலையானது, உயர் பிரதேசத் தேயிலைக்கு. 1973 ஆம் ஆண்டில் ரூ. 2.09 ஆக விளங்கி, 1974ஆம் ஆண்டில் இருத்தலுக்கு ரூ. 2.76 ஆகவும், நடுத்தரப் பிரதேசத் தேயிலை இருத்தலுக்கு ரூ. 1.76 ஆக இருந்து இருத்தலுக்கு ரூ. 2.49 ஆகவும், தாழ் பிரதேசத் தேயிலை இருத்தலுக்கு ரூ. 1.80 ஆக இருந்து ரூ. 2.67 ஆகவும் உயர்வடைந்தது. கடந்த சில வருடங்களாக, நடுத்தரப் பிரதேசத் தேயிலை விலையிலும் பார்க்க தாழ் பிரதேசத் தேயிலை விலை அதிகரித்தலும் இதற்கு முக்கிய காரணம் சில மத்திய கிழக்கு நாடுகளிலேற்பட்ட தீவிரமான கேள்வியேயாகும்.

ரூபாய் அடிப்படையில் மொத்தச் சராசரி விலைகளில் ஏற்பட்ட விலைகளின் அதிகரிப்பு உயர்மட்டத்தை அடைந்தது. உதாரணமாக, கொழும்பு ஏலத்தில் மொத்த வழங்கலின் மொத்தச் சராசரி விலை இருத்தலுக்கு ரூ. 3.01 ஆகவும், உயர்தர, நடுத்தர, தாழ் பிரதேசத் தேயிலையின் தனிப்பட்ட மொத்தச் சராசரி விலைகள் முறையே இருத்தலொன்றுக்கு ரூ. 3.20 ஆகவும். ரூ. 2.80 ஆகவும், ரூ. 3.03 ஆகவும் இருந்தன

1974 ஆம் ஆண்டில் கொழும்பு ஏலத்தில் விற்பனவுக்காக வழங்கப்பட்ட தேயிலை வீழ்ச்சியடைந்தது. இவ்வளவு 1973 ஆம் ஆண்டில் 4,100 இலட்சம் இருத்தல்களாக விளங்கி, 1974[1] ஆம் ஆண்டில் 3,920 இலட்சம் இருத்தல்களாக வீழ்ச்சியடைந்தது. 1973 ஆம் ஆண்டில் 50 விற்பனவுகள் இருந்தமைக்கு மாறாக ,1974ஆம் ஆண்டில் 51 விற்பனவுகள் ஏற்பட்டன. ஒவ்வொரு விற்பனவுக்கும் சராசரியாக 79 இலட்சம் இருத்தல்கள் உள. தனிப்பட்ட விற்பனவு, ஏற்கெனவே செய்யப்பட்ட ஒப்பந்தம் என்பன 28 இலட்சம் இருத்தல்களாக 1974 ஆம் ஆண்டில் விளங்கி, 16 இலட்சம் இருத்தல்கள் வீழ்ச்சியைக் காட்டின.

**இலண்டன் ஏலங்கள்**

உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்ட போதிலும், கொழும்பு ஏலத்திற்கான வழங்கல்களும் ஏற்றுமதிகளும். 1974 ஆம் ஆண்டில் இலண்டன் ஏலத்திற்கு நேரடியாக ஏற்றுமதி செய்யப்பட்டவைகளும் 510 இலட்சம்

---

1. 3920 இலட்சம் இருத்தல்கள் அடுத்த விற்பனவுக்கு ஒதுக்கப்பட்டவை வழங்கலில் இருந்து திரும்பவும் பெறுதல், மாதிரிக்கானவைகள் என்பவற்றை உள்ளடக்கவில்லை. அல்லாதுவிடின், மொத்த வழங்கல்கள் 4,034 இலட்சம் இருத்தல்களாகும். இது, 2,508 இலட்சம் இருத்தல்கள் கொண்ட கொழும்புக்கான வழங்கல்களையும், 1526 இலட்சம் இருத்தல்கள் கொண்ட பெருந்தோட்ட வழங்கல்களையும் உள்ளடக்கும். 1974 ஆம் ஆண்டிற்கான பே.டபஸ் வாக்கர் நிறுவனத்தின் தேயிலைச் சந்தை அறிக்கையையும் பார்க்கவும்.

இருத்தல்களாக விளங்கி 50 இலட்சம் இருத்தல்கள் அதிகரிப்பினைக் காட்டின. மேலும் கடந்த 9 ஆண்டுகளாகக் காணப்பட்ட வீழ்ச்சிப் போக்குக்கு மாறாக இது அமைந்தது. இலண்டன் ஏலத்திற்கான ஏற்றுமதிகளில் ஒரு கட்டுப்பாடும் இல்லாமையாலும், ஏலத்தில் நிலவிய மிகக் கவர்ச்சியான விலைகளும், உள்நாட்டு ஏற்றுமதியாளர்கள் இலண்டன் ஏலத்திற்கு அவ்வாறு தேயிலை அனுப்புவதற்குக் காரணமாகும். முன்னைய ஆண்டுகளைப் போலவே, இலண்டன் ஏலத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையில் பெருமளவு உயர் பிரதேசத் தேயிலையாக இருந்ததுடன், 1973 ஆம் ஆண்டில் 279 இலட்சம் இருத்தல்களாக இருந்து 1974ஆம் ஆண்டில் 315 இலட்சம் இருத்தல்களாக அதிகரித்தன. 1974 ஆம் ஆண்டில் இலண்டன் ஏலத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்தத் தேயிலையில் உயர் பிரதேசத் தேயிலை 61.8 சதவீதமாகும். அதே நேரத்தில் நடுத்தரப் பிரதேசத் தேயிலை ஏற்றுமதிகள் 179 இலட்சம் இருத்தல்களாக அல்லது 35.1 சதவீதமாகவும் தாழ் பிரதேசத் தேயிலை 16 இலட்சம் இருத்தல்கள் அல்லது 3.1 சதவீதமாக விளங்கின.

பன்னாட்டுத் தேயிலைச் சந்தை என்ற முறையில், இலண்டன் ஏலத்தின் முக்கியத்துவமானது, ஏலத்தில் விற்கப்பட்ட மொத்தத் தொகையானது முன்பு 1039 இலட்சம் கில்லோகிரும்களாக இருந்து (2291 இலட்சம் இருத்தல்கள்) 910 இலட்சம் கில்லோகிரும்களாக (2,006 இலட்சம் இருத்தல்களாக) வீழ்ச்சியடைந்தமையால், மேலும் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது. இந்தியா, இலங்கை, ஆபிரிக்கா என்ற எல்லா நாடுகளாலும் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையானது, மொத்த விற்பனவு வீழ்ச்சியில் பங்கு வகித்தன. எவ்வாறுயினும், இலண்டன் ஏலத்தில் விற்கப்பட்ட மொத்தப் பங்கு 1973 ஆம் ஆண்டில் 18.9 சதவீதமாக இருந்து 1974 ஆம் ஆண்டில் 21.4 சதவீதமாக அதிகரித்தது.

அட்டவணை II (ஓ) 8

**தேயிலை உற்பத்தி நாடுகளினால் இலண்டன் ஏலங்களில் விற்கப்பட்ட தேயிலைகளின் அளவுகளும், அவைகளின் சராசரி விலைகளும்**

| நாடுகள் | இலண்டன் ஏலங்களில் விற்கப்பட்ட அளவுகள் (ப. இ. கி. கிராம்கள்) | | | | சராசரி விலைகள் (கில்லோ கிராமுக்கு புதிய பென்ஸ்) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1971 | 1972 | 1973 | 1974 | 1971 | 1972 | 1973 | 1974 |
| 1. வடஇந்தியா ... | 54.5 | 40.6 | 35.0 | 33.8 | 42.14 | 42.87 | 45.65 | 60.48 |
| 2. தென்இந்தியா ... | 2.0 | 1.4 | 1.1 | 1.6 | 39.90 | 37.88 | 37.79 | 55.31 |
| 3. இலங்கை | 32.2 | 22.0 | 19.6 | 19.5 | 45.33 | 45.47 | 45.42 | 60.30 |
| 4. ஆபிரிக்கா முழுவதும் | 35.2 | 46.1 | 44.7 | 32.8 | 43.01 | 40.49 | 41.19 | 50.77 |
| அவற்றுள் | | | | | | | | |
| கென்யா ... | 12.4 | 20.6 | 20.6 | 14.2 | 47.25 | 43.56 | 44.32 | 64.65 |
| உகண்டா ... | 3.8 | 5.2 | 2.3 | 2.2 | 43.64 | 40.97 | 41.92 | 60.87 |
| தன்சானியா ... | 5.0 | 5.8 | 6.5 | 3.4 | 45.39 | 41.71 | 42.55 | 60.19 |
| 5. மொத்தம் .. | **125.0** | **112.7** | **103.9** | **91.0** | **43.25** | **42.24** | 43.29 | **59.89** |

மூலம்: இலண்டன் தேயிலைத் தரகர் சங்கம்

மேலும் எண்ணெய் நெருக்கடி, சில நாடுகளில் குறிப்பாக கெனியா நாட்டில், ஏற்பட்ட வரட்சி பன்னாட்டு நிரம்பலில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்து, எல்லாத் தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளாலும் விற்பனவுக்காக இலண்டன் ஏலத்தில் வழங்கப்பட்ட தேயிலையின் சராசரி விலைகளை உயர்த்தின. அதே நேரத்தில், எல்லாத் தேயிலையினதும் சராசரி விலை 1973இல் ஒரு கில்லோவுக்கு 4329 புதிய பென்சாக இருந்து 1974 ஆம் ஆண்டில் ஒரு கில்லோவுக்கு 59.89 புதிய பென்சாக உயர்வடைந்து, 38 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. 1974 ஆம் ஆண்டில் கெனியன் தேயிலை ஒரு கில்லோவுக்கு 64 65 புதிய பென்சாக ஆகக் கூடிய மட்டத்தை அடைந்தது. இலங்கையைப் பொறுத்தவரையில், தேயிலைக்கான சராசரி விலை 1973 ஆம் ஆண்டில் ஒரு கில்லோவுக்கு 45.42 புதிய பென்சாக இருந்து 1974 ஆம் ஆண்டில் 60.30 புதிய பென்சாக உயர்வடைந்து, 33 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

உறையிலிடப்பட்ட தேயிலை

1973 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து, 1974 ஆம் ஆண்டில் உறையிலிடப்பட்ட தேயிலையின் ஏற்றுமதி வருவாய்கள் ரூ 205 இலட்சங்களால் குறைவடைந்தது. உறையிலிடப்பட்ட தேயிலையின் ஒரு க. ஏ பெ. விலை ஒரு இருத்தலுக்கு 50 சதமாக அதிகரித்தபோதிலும், ஏற்றுமதி செய்யப்பட்ட அளவானது, 1973 ஆம் ஆண்டில் 304 இலட்சம் இருத்தல்களாக இருந்து 1974 இல் 203 இலட்சம் இருத்தல்களாக வீழ்ச்சியடைந்தது. 1974 ஆம் ஆண்டில் ஏனைய தேயிலைகளுக்கான விலைகளின் அதிகரிப்பு 27 சதவீதமாக விளங்க, உறையிலிடப்பட்ட தேயிலையின் விலை 16 சதவீதமாக அதிகரித்தது.

உறையிலிடப்பட்ட தேயிலைக்கு மாற்றக்கூடிய ரூபாக் கடன் வசதி வழங்கப்பட்ட போதிலும் ஏற்றுமதி வீழ்ச்சியடைந்தமைக்கு, உறையிடப்பட்ட பொருட்களின் விலைகள், அதிகரித்தமையும் தொகையளவுத் தேயிலையின் விலைகள் அதிகரித்தமையும் காரணமாகும். அட்டவணை II (ஓ) 9 ஆனது 1967 — 1974 ஆம் ஆண்டுவரை உறையிடப்பட்ட தேயிலை ஏற்றுமதிகளின் அளவு, பெறுமதி, க. ஏ. பெ. விலை என்பனவற்றைத் தருகின்றது.

அட்டவணை II (ஓ) 9

பொதியிட்ட தேயிலை ஏற்றுமதிகள்

| ஆண்டு | (அளவு ப. இல. இரு.) | பெறுமதி (ப. இ. ரூ.) | க. ஏ. பெ. விலை இரு. ஒன்றிற்கு |
|---|---|---|---|
| 1967 | 4.7 | 12.0 | 2.53 |
| 1968 | 9.4 | 29.4 | 3.13 |
| 1969 | 15.2 | 37.3 | 2.46 |
| 1970 | 17.0 | 41.6 | 2.44 |
| 1971 | 22.7 | 60.6 | 2.67 |
| 1972 | 32.4 | 102.4 | 3.16 |
| 1973 | 30.4 | 92.4 | 3.04 |
| 1974 | 20.3 | 71.9 | 3.54 |

தற்காலிகமானவை.

மூலம்: இலங்கைச் சுங்கம்.

உடன் தேயிலை

உடன் தேயிலை உற்பத்தி 1973 ஆம் ஆண்டில் 474.6 ஆயிரம் இருத்தல்களாக விளங்கி, 1974 ஆம் ஆண்டில் 640.7 ஆயிரம் இருத்தல்களாக தொடர்ந்து அதிகரித்தது. அதன் விளைவாக 1974 ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட உடன் தேயிலையின் அளவு 614.2 ஆயிரம் இருத்தல்களாக விளங்கி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து, 113.2 ஆயிரம் இருத்தல்களால் அதிகரித்துக் காணப்பட்டது. வழக்கம் போல உடன் தேயிலைக்கான முக்கிய சந்தைகள் ஐக்கிய இராச்சியம் 44.7 சதவீதமாகவும், அவுத்திரேலியா 21.0 சதவீதமாகவும், சேர்மன் இணைப்பாட்சிக் குடியரசு 12.7 சதவீதமாகவும் இருந்தன.

தேயிலை ஏற்றுமதிக்கான தீர்வைத் தள்ளுபடித் திட்டம்

1974 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆந் திகதியில் ஏற்பட்ட விற்பனை தொட்டு, தேயிலை ஏற்றுமதிக்கான தீர்வைத் தள்ளுபடித் திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு இருத்தலொன்றுக்கான ஆகக் குறைந்த விலை ரூ. 160 இலிருந்து ரூ. 2.00 ஆகவும் கழிவு வழங்கப்படாது விடுவதற்கு ஆகக் கூடிய விலை இருத்தலொன்றுக்கு ரூ. 2/- இலிருந்து ரூ. 2.30 ஆகவும் உயர்த்தப்பட்டது.

1974 ஆம் ஆண்டில் தேயிலை விலையில் ஏற்பட்ட பொதுவான அதிகரிப்பினால், கழிவினைப் பெறக்கூடிய தேயிலையின் அளவு 1973 ஆம் ஆண்டில் இருந்த 2,480 இலட்சம் இருத்தலுக்கு எதிராக 1974 ஆம் ஆண்டில் 360 இலட்சம் இருத்தலாக ஆகக் குறைந்தளவு வீழ்ச்சி அடைந்தது. எனவே, தள்ளுபடியாகச் செலுத்தப்பட்ட தொகை ரூ. 182 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தது. அட்டவணை II (ஒ) 10 ஆனது ஏற்றுமதித் தீர்வைத் தள்ளுபடி வழங்கப்பட்ட தேயிலையின் அளவு, தரையுயர்ச்சி அடிப்படையிலான தேயிலைப் பகுப்புகளுக்கு வழங்கப்பட்ட கழிவின் தொகை போன்ற விவரங்களைத் தருகின்றது.
தேயிலை பற்றிய பன்னாட்டு அறிவுரைகள்

அட்டவணை II (ஒ) 10

தேயிலைத் தீர்வைத் தள்ளுபடித் திட்டத்திற்குட்பட்ட தேயிலையின் அளவும், தள்ளுபடியின் பெறுமதியும் — 1973-1974

| | தள்ளுபடிக்குட்பட்ட அளவு (இருத்தல்கள்) | | செலுத்தப்பட்ட தள்ளுபடியின் பெறுமதி (ரூபாய்கள்) | |
|---|---|---|---|---|
| | 1973 | 1974 | 1973 | 1974 |
| உயர்பிரதேசம் | 68,435,218 | 5,460,762 | 5,434,259 | 418,479 |
| நடுத்தரப் பிரதேசம் | 92,459,311 | 15,629,589 | 8,514,925 | 1,636,002 |
| தாழ் பிரதேசம் | 87,682,667 | 14,760,669 | 7,637,101 | 1,319,384 |
| மொத்தம் | 247,977,196 | 35,851,020 | 21,586,285 | 3,373,865 |

மூலம்: தேயிலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்,

தேயிலை பற்றிய அரசாங்கக் கட்சிக்கிடையான குழுவினது, உப ஏற்றுமதியாளர் குழுவினது, 7 ஆவது கூட்டம் 1974 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 — 14 திகதிவரையில் உரோம் நகரில் உ.வி.நி.[1] நிலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், பன்னாட்டு ஏற்றுமதி அனுமதிப்பங்குகள் 1974/75 ஆம் ஆண்டிற்கும் 1975/76 ஆம் ஆண்டிற்கும் முறையே 14,506 இலட்சம் இருத்தல்கள்[2] (658,000 மெற்றிக் தொன்கள்) 15,035 இலட்சம் இருத்தல்கள் (682,000 மெற்றிக் தொன்கள்)[3] என ஒப்புக் கொள்ளப்பட்டது.

இலங்கையின் ஏற்றுமதிக்கான அனுமதிப்பங்கு 4,722 இலட்சம் இருத்தல்களாக 1973 ஆம் ஆண்டு ஏப்பிரல் 1 ஆந் திகதி தொடக்கம் 1974 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 31 ஆந் திகதி வரை இருக்கையில், இலங்கையின் உண்மையான ஏற்றுமதி சுரங்கத் தரவுகளின்படி, 4,334 இலட்சம் இருத்தல்களாக விளங்கி, 388 இலட்சம் இருத்தல்கள்[4] குறைவைக் காட்டியது.

தேயிலைக்கான அரசாங்கங்கட்கிடையிலான குழுவின் 6வது கூட்டத்தின்படி, 1973/74ஆம் ஆண்டிற்கான 4.722 இலட்சம் இருத்தல்கள் கொண்ட ஏற்றுமதி அனுமதிப்பங்கு, 1974/75ஆம் ஆண்டில் 4,630 இலட்சம் இருத்தல்களாகக் குறைக்கப்பட்டது எனினும், இந்தியாவைப் பொறுத்தவரையில் 1974/75ஆம் ஆண்டிற்கான 4,802 இலட்சம் இருத்தல்கள்கொண்ட முன்னைய அனுமதிப்பங்கானது மாற்றமுறவில்லை. 1974/75ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட மொத்த ஏற்றுமதியில் இலங்கையும், இந்தியாவும் 65 சதவீதத்திற்குப் பொறுப்பாக விளங்க, 1973/74 ஆம் ஆண்டில் இதற்குமாறாக 66 சதவீதமாக இருந்தது. 1974/75 ஆம் ஆண்டில் அனுமதிப்பங்குகள் நிர்ணயிக்கப்பட்ட ஏனைய முக்கிய தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகள் கெனியா (62,900 மெற்றிக் தொன்கள் அல்லது 1,387 இலட்சம் இருத்தல்கள்) இந்தோனேசியா (44,000 மெற்றிக் தொன்கள் அல்லது 970 இலட்சம் இருத்தல்கள்) வங்காளதேசம் (27,000 மெற்றிக் தொன்கள் அல்லது 503 இலட்சம் இருத்தல்கள்) மாலாவி (24,400 மெற்றிக் தொன்கள் அல்லது 538 இலட்சம் இருத்தல்கள்) மொசாம்பிக் (20,000 மெற்றிக் தொன்கள் அல்லது 441 இலட்சம் இருத்தல்கள்) செயர்க் குடியரசு (15,300 மெற்றிக் தொன்கள் அல்லது 33.7 இலட்சம் இருத்தல்கள்) தன்சானியா (13,000 மெற்றிக் தொன்கள் அல்லது 287 இலட்சம் இருத்தல்கள்) என்பனவாகும்.

---

1. 90 சதவீத உலக ஏற்றுமதிகளுக்குப் பொறுப்பான 13 தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகளுடன், ப. பு. அ. வங்கி, ஐ. நா. வ. அ. குழு, ப. தே. குழு – ஐ. நா. வ அ. குழு/வ. தி. பொது ஒப்பற்ற பொதுநலவாய அலுவலகம என்பவற்றின் பிரதிநிதிகளும இக்கூட்டத்திஸ் பங்குபற்றினர்.

2. 1973ஆம் ஆண்டு யூலை மாதத்தில் நடைபெற்ற இறுதிக் கூட்டத்தில், இவ்வாண்டிற்கு என நிர்ணயிக்கப்பட்ட தற்காமிகப் பன்னாட்டு மொத்த அளவிலும் 485 இலட்சம் இருத்தல்கள் (22,000 மெற்றித் தொன்கள்) குறைவாகக் காணப்பட்டது.

3. மதிப்பீடு செய்யப்பட்டகுறைவுகளுக்கான, 1974/75ஆம் ஆண்டிற்கான 7¾ சதவீதம், 1975/76ஆம் ஆண்டிற்கான 8 சதவீதம் என்பவற்றைக் கவனத்துக்கெடுத்தே இதற்கான இத்தொகைகள் பெறப்பட்டது தற்காலிக அடிப்படையில், 1976/74ஆம் ஆண்டிற்கான பன்னாட்டு அனுமதிப்பங்கு 15278 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டது.

4 இக்காலத்தில் இந்தியாவிற்கு ஒதுக்கப்பட்ட ஏற்றுமதி அனுமதிப் பங்கு 4,802 இலட்சம் இருத்தல்களாக விளங்க, அதன் உண்மையான ஏற்றுமதிகள் 4,166 இலட்சம் விளங்கிக், குறைவானது, 636 இலட்சம் இருத்தல்களாகக் காணப்பட்டது.

மேலும் உப குழுவின் 7ஆவது கூட்டத்தில் தேயிலையின் பன்னேக்கங் கொண்ட பன்னாட்டு ஒப்பந்தத்தின் பின்வரும் அம்சங்களை ஆராய்வதெனவும் கொள்கை அடிப்படையில் ஒப்புக் கொள்ளப்பட்டது.

அ. ஆகக் குறைந்த ஏற்றுமதி விலைக்கான ஒழுங்கு.

ஆ. இறக்குமதி செய்யும் நாடுகளில் இருப்புகள் வளர்வதைத் தடுப்பதற்காகச் சந்தைப்படுத்தலை ஒன்று சேர்த்தலும் ஒழுங்குபடுத்தலும்.

இ. புதுச் சந்தைகள் உட்பட, பன்னாட்டு வளர்ச்சியினைச் செறிவு செய்தலும், ஒத்துழைத்தலும்.

ஈ. மிகவும் சாதகமான விலைகளை அடைவதற்காகச் சந்தைப்படுத்தலைச் செம்மை செய்தல்.

உ. தேயிலை ஏற்றுமதி செய்யும் நாடுகளுக்கான தனிப்பட்ட சந்தைபற்றிய அறிவுச் சேவைக்கு ஏற்பாடு செய்தல்.

தேயிலைக் கைத்தொழில் அபிவிருத்திக்கான வழிமுறைகள்

தேயிலைக் கைத்தொழில் பல தடைகளை, சிறப்பாக உற்பத்தி வீழ்ச்சியிலும் விலையதிகரிப்பிலும் பெற்றபோதும், இக்கைத்தொழிலுக்கு இடருதவிகளை வழங்குவதற்கு அரசாங்கம் பல முயற்சிகளை எடுத்தது. 1974இன் தொடக்கத்திலிருந்து 'ஒன்றிணைந்த உதவி' நடைமுறைக்கு வந்தது. அதன் பின்பு, 1974 பெப்புருவரி 25 இல் நடைபெற்ற தேயிலை ஏலத்திலிருந்து தேயிலை ஏற்றுமதித் தீர்வையில் விதிக்கப்பட்ட விலை ஏற்ற இறக்கத்துக்குள்ளான தள்ளுபடி வீதம் உயர்த்தப்பட்டது. அதாவது, குறைந்த மட்ட விலை இருத்தலுக்கு ரூ. 1.40 இலிருந்து ரூ. 1.60 க்கும் உயர்ந்த மட்ட விலை ரூ. 1 95 இலிருந்து ரூ. 2.15 க்கும்[1] உயர்த்தப்பட்டது. எனினும், வழங்கப்பட்ட இடருதவிகளின் அளவில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்தப்படவில்லை. ஆகவே, எஞ்சியிருந்த ஆகக் கூடிய இடருதவிகள் குறைந்த தர, நடுத்தர தரத் தேயிலைகளுக்கு இருத்தலுக்கு 20 சதமாகவும், உயர் தரத் தேயிலைகளுக்கு இருத்தலுக்கு 15 சதமாகவுமிருந்தன.

அதேவேளையில் பெப்புருவரி 25 இல் நடைபெற்ற அதே ஏலத்திலிருந்து விலைகளின் ஆகக் குறைந்த கூடிய வரையறையில் தேயிலைக்கு விதிக்கப்பட்ட பெறுமான விகித வரி 20 சதத்தால் கூட்டப்பட்டது. வேறு சொற்களில் கூறின் குறைந்த மட்ட அளவு இருத்தலுக்கு ரூ. 2.00 இலிருந்து ரூ. 2.20 உக்கும், உயர்ந்த மட்ட அளவு ரூ. 3.40 இலிருந்து ரூ. 3.60 க்கும் உயர்த்தப்பட்டன. ஏல விலைக்கும், இருத்தலுக்கு ரூ. 2.20 கொண்ட குறைந்த மட்ட விலைக்கு மிடைப்பட்ட வரி வீதம் 50 சதவீதமாக மாற்றமுறாதிருந்தது. இது இருத்தலுக்கு 70 சதங்கொண்ட ஆகக் கூடிய விற்பனை வரிக்கு உட்பட்டதாகும்.[2]

1. 1974 நவெம்பர் 12இல் நடைபெற்ற விற்பனையிலிருந்து ஆகக் குறைந்த விலை இருத்தலுக்கு ரூ. 2 00 ஆகவும், ஆகக்கூடிய விலை ரூ. 2.30 ஆகவும் உயர்த்தப்பட்டது.

2. 1974 நவெம்பர் 7இலிருந்து வரிக்குட்படும் விலையின் அளவு ரூ. 250 ஆகவும் இருத்தலுக்குரிய ஆகக்கூடிய வரி ஒரு ரூபாவாகவும் உயர்த்தப்பட்டது.

விலைகளில் நிலவிய மேற்கூறிய வழி முறைகளுடன் 1974 ஏப்பிரல் 29 இலிருந்து முழுப் பெட்டிகளின் 7 மீதான சட்டத் தொகுதிக்கு வழங்கப்படக் கூடிய பண உதவி ரூ. 6.88 இலிருந்து ரூ. 11.19 க்கும் அரைப் பெட்டிக்கு ரூ. 5.00 இலிருந்து ரூ. 9.24 க்கும் உயர்த்தப்பட்டது. முற்றான அளிப்பு வகையாக விளங்கிய உதவுதொகையிலேற்பட்ட அதிகரிப்பு உற்பத்தியாளனுக்கு வருமான வரியிலிருந்து விலக்களித்தது இவ்வரி கொழும்பு ஏலத்தில் விற்கப்பட்ட தேயிலைக்கும் இலண்டன் ஏலத்திற்காக ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலைக்கும் கொடுபடக்கூடியதாயிருந்தது. 1974 மாச்சு 20 இல் ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனத்தினால் ஏற்படுத்தப்பட்ட பெட்டிச் சட்டங்களின் விலையதிகரிப்பின் பின் கைத்தொழிலுக்குத் தொதியொன்று ரூபா மூன்றுக்குக் கிடைக்கக் கூடியதாகப் பெட்டிச் சட்டங்களைச் செய்வதைத் தொடருவதற்காக அரசாங்கம் உதவுதொகையை மேலும் அதிகரித்தது.

ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனத்தினால் முழுப் பெட்டிச் சட்டங்கள் கொண்ட ஒரு தொகுதி ரூ. 22.60 க்கும், அரைப் பெட்டிச் சட்டங்கள் கொண்ட தொகுதி ரூ. 20.50 க்கும் செய்யப்பட்ட தேயிலைப் பெட்டிச் சட்டங்கள் விற்பனவின் மேல் நோக்கிய திருத்தத்துடன் 1974 ஒற்றோபர் 8 இலிருந்து உதவு தொகை வீதத்தில் மூன்றாவதும், இறுதியானதுமான மாற்றஞ் செய்யப்பட்டது. இவ்வேளையில், உதவு தொகையின் புதிய வீதங்கள் முழுப் பெட்டியொன்றுக்கு ரூ. 12.60 ஆகவும், அரைப் பெட்டியொன்றுக்கு ரூ. 10.50 ஆகவும் நிர்ணயிக்கப்பட்டன. இதன் விளைவாக கைத்தொழிலுக்கான தேயிலைப் பெட்டிச் சட்டங்களின் விலை தொகுதியொன்றுக்கு ரூ. 10.00 ஆக அதிகரித்தது.

தேயிலைக் கைத்தொழிலை எதிர்நோக்கும் திரவத் தன்மைச் சிக்கலை நீக்குவதற்கு எடுக்கப்பட்ட மற்றொரு நடவடிக்கை இலங்கை மத்திய வங்கியின் உத்தரவாதக் கொடுகடன் திட்டமாகும். உற்பத்திச் செலவுகளிலேற்பட்ட அதிகரிப்பைத் தவிர தோட்டங்களும், கம்பனிகளும் தேயிலைத் தொழிற்சாலைகளை நவீன மயமாக்குவதிலும், மீளப் பயிரிடுவதிலும் தமது செயற்படும் முதலின் அளவை விரிவடையச் செய்ய வேண்டியிருந்தது. இது அவர்களது திரவத் தன்மை முற்றாகத் தீர்ந்து போகும் நிலைக்குக் காரணமாயிருந்தது. எனவே, தேயிலை மீளப் பயிரிடலுக்கும், தேயிலைத் தொழிற்சாலை அபிவிருத்திக்கும் வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களுக்கு அவ்வங்கிகளுக்கு இலங்கை அரசாங்கத்தின் சார்பில் உத்தரவாதங்களை வழங்குவதற்கான ஒரு திட்டத்தை இலங்கை மத்திய வங்கி, உருவாக்கியது. இத்திட்டத்தின் கீழ்த்தான் மத்திய வங்கியின் கடன் வழங்கும் குழு கடனை அங்கீகரித்ததெனினும், இத்தொகையில், மாற்றமுடியாத 75 சதவீதத்திற்கு மட்டுமே மத்திய வங்கி உத்தரவாதம் அளித்தது. இவ்விடயத்தில் முன்னேற்பட்ட செலவுகளையுள்ளடக்க 1970 சனவரி 1 இலிருந்து இயங்குவதென இத்திட்டம் செயற்படத் தொடங்கியது.

## (ஆ) றப்பர்

### உற்பத்தி

1974ஆம் ஆண்டில் றப்பர் உற்பத்தி 3,010 இலட்சம் இறாத்தல்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1973 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து, 400 இலட்சம் இறாத்தல்கள் அல்லது 12 சதவீதத்தால் குறைவாகக் காணப்பட்டதுடன், 1966ஆம் ஆண்டு தொடக்கம் பதிவு செய்யப்பட்டவைகளுள், ஆகக் குறைந்ததாகும். ஆண்டுச் சராசரி விலைகளில் முன்னேற்றம் ஏற்பட்டபோதிலும், பாதகமான காலநிலைமைகள், உற்பத்திச் செலவு அதிகரித்தமை, உரப்பாவனை குறைந்தமை போன்ற காரணங்களால் 1974 ஆம் ஆண்டில் உற்பத்தியில் குறைவு ஏற்பட்டது. பாதகமான காலநிலைமைகள் பால் எடுக்கும் முயற்சிகளைத் தடை செய்தமையினால் பாலின் அளவு குறைவுற்றது.

1973 ஆம் ஆண்டில் விலைகளில் காணப்பட்ட உயர்வான போக்கினால், எல்லையளவு இலாபமுள்ள பகுதிகளும் பால் எடுப்பதற்குப் பயன்படுத்தப்பட்டது. ஆனால் 1973 ஆம் ஆண்டு இறுதிக் காலப்பகுதியில் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் அப்பகுதிகள் மீண்டும் கைவிடப்பட்டது.

பால் எடுப்பதற்கு உட்கொணரப்பட்ட மீளப் பயிடுரிதலுக்குள்ளான பகுதிகளின் வெளியீடு அதிகரித்தபோதிலும் மேற்குறிப்பிடப்பட்ட காரணிகளால் அதிகரிப்புகள் பாதகமாக எதிரீடு செய்யப்பட்டது. 1967 ஆண்டு முடிவில், றப்பர் பயிர்ச் செய்கையின் கீழான மொத்த நிலப்பரப்பில் கிட்டத்தட்ட அரைப்பகுதி அதாவது 2,50,995 ஏக்கர்கள் மீளப் பயிரிடுதலுக்குட்படுத்தப்பட்ட பகுதியாகும். இது 1974 ஆம் ஆண்டளவில்தான் பலன் கொடுக்கும். 1974 ஆம் ஆண்டில் மீளப் பயிடுதலுக்கான உதவுதொகை ரூ. 2,000மாக ஒரு ஏக்கருக்கு விளங்கியபோதிலும். இதற்கு முன்னைய ஆண்டில் மீளப் பயிரிடுதலுக்குட்படுத்தப்பட்ட ஏக்கர்கள் 7276 ஏக்கர்களாக இருந்தாலும், 1974ஆம் ஆண்டில் 7076 ஏக்கர்களாக குறைவடைந்தது.

ஏற்றுமதிகள்

இவ்வாண்டில் ஏற்றுமதிப் பெறுமதிகள் ரூ. 7,380 இலட்சமாக விளங்கி, 1973 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து, 25 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. இது சராசரி க. ஏ. பெ. விலை 56 சதவீதத்தால் அதிகரித்தமையால்தான் ஏற்பட்டது. உற்பத்தியின் அளவு குறைவடைந்தமையால், ஏற்றுமதியின் அளவு கணிசமானதாக வீழ்ச்சியடைந்தது. பின்வரும் அட்டவணையில் விவரங்கள் தரப்பட்டுள்ளன.

அட்டவணை II (ஒ) 11

றப்பரின் உற்பத்திகளும், ஏற்றுமதிகளும், விலைகளும்

| ஆண்டு | உற்பத்தி (ப. இ. இரு.) | | | ஏற்றுமதிகள் (ப. இ. இரு) | | | க. ஏ. பெ. விலை (இரு. ரூ. ச.) | | | கொழும்புச் சந்தை விலை இருத்தலுக்கு (ரூ. ச.) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சீட் | கிரேப் | முழுவதும் | சீட் | கிரேப் | முழுவதும் | சீட் | கிரேப் | முழுவதும் | ஆர்.எஸ்.எஸ். இல. 1 | லெற்றெக்ஸ் இல. 9 |
| 1969 | 194.6 | 136.3 | 332.5 | 179.7 | 135.1 | 314.8 | 1.34 | 1.41 | 1.37 | 1.04 | 1.16 |
| 1970 | 211.0 | 138.3 | 350.9 | 221.7 | 132.5 | 354.2 | 1.23 | 1.26 | 1.24 | 0.91 | 1.12 |
| 1971 | 175.8 | 134.7 | 311.8 | 156.0 | 129.1 | 285.2 | 0.98 | 1.19 | 1.08 | 0.79 | 1.13 |
| 1972 | 184.0 | 122.5 | 309.4 | 164.6 | 119.3 | 285.7 | 0.90 | 0.97 | 0.93 | 0.81 | 0.89 |
| 1973 | 202.4 | 135.3 | 341.0 | 224.4 | 128.2 | 354.4 | 1.51 | 1.95 | 1.67 | 1.18 | 1.81 |
| 1974 | | | 301.0 | 158.0 | 124.2 | 283.1 | 2.45 | 2.81 | 2.61 | 1.28 | 2.14 |
| 1974 இன் | | | | | | | | | | | |
| 1ஆம் காலாண்டு | 432.7 | 27.7 | 71.6 | 42.9 | 30.3 | 73.3 | 2.37 | 3.33 | 2.77 | 1.41 | 2.20 |
| 2ஆம் காலாண்டு | 34.9 | 28.1 | 63.6 | 26.3 | 32.1 | 58.5 | 2.92 | 3.23 | 3.09 | 1.33 | 2.19 |
| 3ஆம் காலாண்டு | 61.5 | 43.3 | 105.1 | 62.1 | 31.4 | 93.9 | 2.56 | 2.40 | 2.51 | 1.22 | 2.33 |
| 4ஆம் காலாண்டு | | | | 26.3 | 28.9 | 55.6 | 1.91 | 2.37 | 2.15 | 1.17 | 1.53 |

மூலம்: றப்பர்க் கட்டுப்பாட்டுத் திணைக்களம்,
இலங்கைச் சுங்கம்,
இலங்கை றப்பர் தரகர் சங்கம்.

விலைகள்

வலு நெருக்கடியுடன், அதனைத் தொடர்ந்து தூய்மைப்படுத்தப்படாத எண்ணெய் விலை பெரிதளவால் அதிரித்தமையால், இயற்கை றப்பரின் விலை பெரிதளவால் உயர்வடைந்தது. 1973 ஆம் ஆண்டில், இறுதியான சில மாதங்களிலும், 1974 ஆம் ஆண்டு முதற் காலாண்டுப் பகுதியிலும் விலைகள் உச்ச மட்டத்தினை அடைந்து, அதன்பின் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தன.

1974 ஆம் ஆண்டு சனவரி தொடக்கம் ஒகத்து மாத காலப் பகுதியில் இயற்கை றப்பரின் நுகர்வு நிரம்பலிலும் குறைவாக இருந்து, இருப்புக்கள் அதிகரித்தன. இதனால் விலைகள் கீழ் நோக்கிச் செல்லும் போக்கினைக் கொண்டிருந்தன. இலண்டன் சந்தையில், ஆர்.எஸ்.எஸ் 1 வகையின் 1 கில்லோவுக்கான விலை 1974ஆம் ஆண்டு சனவரியில் 52.57 பென்சாக விளங்கி, 1974ஆம் ஆண்டு திசெம்பரில் ஒரு கில்லோவுக்கு 26.24 பென்சாகக் குறைவடைந்தது. அதேபோன்று, ஆர்.எஸ்,எஸ் 1 வகையின் விலை நியூயோர்க்குச் சந்தையில் இருத்தலொன்றுக்கு சனவரியில் 54.46 சதமாக விளங்கி, திசெம்பரில் இருத்தலொன்றுக்கு 30.76 சதமாக வீழ்ச்சியடைந்தது. இதற்கு முக்கியமான இறக்குமதி செய்யும் நாடுகளிலேற்பட்ட கைத்தொழில் முயற்சிகளின் பின்னடைவு, குறிப்பாக உந்து வண்டிக் கைத்தொழில் ஏற்பட்ட முயற்சிக் குறைவுகள் காரணமாக றப்பருக்கான கேள்வி குறைந்தமை றப்பர் விலைகள் வீழ்ச்சியடைவதற்கு முக்கிய காரணமாகும்.

அட்டவணை II (ஒ) 12

**இயற்கை, செயற்கை இறப்பரினது உலக வழங்கலும் நுகர்வும், இருப்புக்களும்**

ப. இ. இருத்தல்கள்.

| | இயற்கை றப்பர் | | | | செயற்கை றப்பர் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1972 | 1973 | 1973 சனவரி–ஒகத்து | 1974 சனவரி–ஒகத்து | 1972 | 1973 | 1973 சனவரி–ஒகத்து | 1974 சனவரி–ஒகத்து |
| உற்பத்தி ... | 6,861.8 | 7,699.6 | 4,943.8 | 5,109.2 | 14,408.1 | 16,110.1 | 10,615.1 | 10,945.8 |
| நுகர்வு .. | 6.988.6 | 7,495.5 | 4,949.3 | 5,037.5 | 14,318.8 | 15,707.8 | 10,345.1 | 10,504.9 |
| மொத்த இருப்புக்கள் ... | 3,439.1* | 3,791.9* | 3,538.4 | 3,984.8 | 3,268.4* | 3,670.7* | 3,543.9 | 5,632.1 |

மூலம்: இறப்பர் புள்ளிவிபரச் செய்தித்திரட்டு. (நவம்பர் 1974)

* நுகர்விலும் உற்பத்தியிலும் ஈடுபடும் பிரதேசங்களின் இருப்புக்களையும் மிதக்கும் இருப்புக்களின் மதிப்பீட்டையும் உள்ளடக்கும்.

** தகவல் தந்த இருப்புக்களையும், மதிப்பிடப்பட்ட ஏனைய இருப்புக்களையும், மிதக்கும் இருப்புக்களையும் உள்ளடக்கும்.

பன்னாட்டுச் சந்தை விலைகள் கீழடைந்து செல்லும் போக்கினைக் காட்டியமையினால் மலேயா நாட்டு றப்பர் ஏற்றுமதியாளர்களும், மிகப் பெரிய பெருந்தோட்டச் சொந்தக்காரர்களும் விற்பனையை 10 சதவீதத்தால் குறைத்தனர். (1974 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி நிலவிய விலையிலும் கீழ்) எனினும், விலைகள் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தமையால் மலேயா அரசாங்கம் 1974 ஆம் ஆண்டு நவெம்பர் மாதத்தில், இயற்கை றப்பரின் விலையினை உறுதிப்படுத்துவதற்காக, விரிவான திட்டத்தை அதிகரித்தது.

உள்நாட்டுச் சந்தை விலைகள், உலகச் சந்தைப் போக்கினைப் பின்பற்றி, ஆண்டின் பெரும் காலப் பகுதியில் தொடர்ந்து வீழ்ச்சியடைந்தது. ஆர்.எஸ். எஸ். 1 வகையின் கொழும்புச் சந்தை விலை, முதற் காலாண்டுப் பகுதியில் இருத்தலொன்றுக்கு ரூ. 1.41 ஆக விளங்கி, 1974 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் இருத்தலொன்றுக்கு ரூ. 1.17 ஆக வீழ்ச்சியடைந்தது. அவ்வாண்டின் காலப் போக்கில் ஆர்.எஸ்.எஸ். I, ஆர்.எஸ்.எஸ். II, என்பவற்றிற்குக் கொடுக்க வேண்டிய ஆகக் குறைந்த உத்தரவாத விலைகள் கொழும்பில் இருத்தலொன்றுக்கு முறையே 96 சதமாகவும், 89 சதமாகவும் வெளியூர் வைப்பிடங்களில் எல்லை உற்பத்தியாளர்களுக்கு உயர்ந்து செல்லும் செலவால் நிவாரணம் வழங்குவதற்கு இருத்தலொன்றுக்குச் செலுத்த வேண்டிய விலைகள் முறையே 95 சதமும், 88 சதமுமாக நிர்ணயிக்கப்பட்டது.

### சேரிடங்களின்படியான ஏற்றுமதிகள்

மக்கட் சீனக் குடியரசிற்கு ஏற்றுமதி செய்யப்பட்ட இறப்பரின் அளவு, 1973ஆம் ஆண்டில் 1,568 இலட்சம் இருத்தல்களாக விளங்கி. 1974ஆம் ஆண்டில் 922 இலட்சம் இருத்தல்களாக வீழ்ச்சியடைந்தபோதிலும், மக்கள் சீனக் குடியரசே இலங்கையின் முதன்மை இறப்பர் வாங்குநராக விளங்கியது. எனினும், 1974ஆம் ஆண்டில் ரூ. 2,429 இலட்சமாக விளங்கி, 1973ஆம் ஆண்டிலும், ரூ. 102 இலட்சம் அதிகரித்துக் காணப்பட்டது.

றப்பர் கூடுதலானளவு வாங்கும் இரண்டாவது நிறுவனமாக ஐரோப்பிய பொருளாதார சமூகம் விளங்கியது. 1974ஆம் ஆண்டில் இவற்றின் கொள்வனவு 10 இலட்சத்தால் வீழ்ச்சியடைந்தபோதிலும், ஏற்றுமதியில் ஐ பொ.ச. பங்கு 1973ஆம் ஆண்டில் 16.8 சதவீதமாக இருந்து 1974ஆம் ஆண்டில் 20.7 சதவீதமாக உயர்வடைந்தது (ஐக்கிய இராச்சியத்திற்கான ஏற்றுமதிகள் 1972ஆம் ஆண்டில், 103 இலட்சம் இருத்தலாகவும், 1973 ஆம் ஆண்டில் 74 இலட்சம் இருத்தலாகவும், 1974ஆம் ஆண்டில் 45 இலட்சம் இருத்தலாகவும் மேலும், தொடர்ந்து வீழ்ச்சியுற்றன ) றப்பர் குறைந்தளவு வாங்கிய ஏனைய நாடுகளை அளவின் அடிப்படையில் தருமிடத்து, அவைகள் சோ.ச கு., போலந்து, ஐ.அ.நா., றூமேனியா, யப்பான் என்பனவாகும்.

அட்டவணை II (ஓ) 13

இறப்பர் ஏற்றுமதிகள் நாடுகளின் அடிப்படையிலான பாகுபாடு

| நாடு | அளவு (பத்து இலட்சம் இருத்தல்) | | மொத்தச் சதவீதம் | | பெறுமதி (ப. இ. ரூ.) | | மொத்தச் சதவீதம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1973 | 1974 | 1973 | 1974 | 1973 | 1974 | 1973 | 1974 |
| சீன மக்கள குடியரசு | 152.8 | 92.2 | 43.1 | 32.6 | 232.7 | 242.9 | 39.3 | 32.9 |
| ஐ. சோ. ச. கு. ... | 22.6 | 21.9 | 6.4 | 7.7 | 47.5 | 75 1 | 8.0 | 10.2 |
| ஐக்கிய அமெரிக்கா ... | 14.7 | 13.8 | 4.1 | 4.9 | 34.8 | 43.1 | 5.9 | 5.8 |
| போலந்து ... | 19.2 | 16.6 | 5.4 | 5.9 | 35.5 | 39.9 | 6.0 | 5.4 |
| றூமேனியா ... | 16.6 | 9.9 | 4.7 | 3.5 | 19.2 | 19.1 | 3.2 | 2.6 |
| யப்பான் ... | 6.1 | 2.8 | 1.7 | 1.0 | 12.4 | 11.8 | 2.1 | 1.6 |
| ஐ. பொ. ச. ... | 59.7 | 58.7 | 16.8 | 20.7 | 102.0 | 145 8 | 17.2 | 19.7 |
| ஏனைய நாடுகள் ... | 62.7 | 67.2 | 17.7 | 23.7 | 107.9 | 160.7 | 18.3 | 21 8 |
| மொத்தம ... | 354.49 | 283.1 | 100.0 | 100.0 | 592.0 | 738.4 | 100.0 | 100.0 |

மூலம: இலங்கைச சுங்கம்.

**(இ) தெங்குப் பொருட்கள்**

1973ஆம் ஆண்டில் 19,350 இலட்சம் தேங்காய்களாக விளங்கி, 1974ஆம் ஆண்டில் 20,310 இலட்சம் தேங்காய்களாக அதிகரித்தமையால், மத்திய வங்கி மதிப்பீடுகளின்படி, 1974ஆம் ஆண்டில் தெங்கு உற்பத்தியில் 5 சதவீதமான அதிகரிப்புக் காணப்பட்டது. எனினும், இவ்வுற்பத்தித் தொகையே இலங்கையில் பல ஆண்டுகளாக உற்பத்தியில் தொடர்பாக ஏற்பட்ட வீழ்ச்சியில் ஆகக்குறைந்த தொகையாக விளங்கியது. முன்னைய ஆண்டறிக்கையில் குறிப்பிட்டது போன்று, 1973ஆம் ஆண்டும் தெங்கு உற்பத்தியில் ஏற்பட்ட குறைந்த உற்பத்தி முயற்சிகளுக்கு நீண்டகால வரட்சி, உரப்பாவனை குறைந்தமை, சில இடங்களில் காணப்பட்ட தெங்குப்பூச்சி, நிலச்சீர்திருத்தம் காரணமாக உற்பத்தி சீர்குலைந்தமை ஆகியவை காரணமாகும் இதன்விளைவுகள், சிறப்பாக இறுதியில் குறிக்கப்பட்ட காரணம் 1974ஆம் ஆண்டில் குறிப்பிடத்தக்கமுறையில் உணரப்பட்டது. 1974ஆம் ஆண்டில் தெங்கு வளருகின்ற பகுதிகளில் கால நிலைமைகள் சாதகமாக இருந்தமையால் 1975ஆம் ஆண்டில் உற்பத்தி உயரக்கூடிய வாய்ப்பு உண்டு.

தெங்குப்பொருட்கள் சந்தைப்படுத்தும் சபையினது மதிப்பீடுகளின்படி, முன்னைய ஆண்டில் தெங்கு உற்பத்தி 19,350 இலட்சம் தேங்காய்களாக விளங்க, 1974ஆம் ஆண்டில் இது 20,440 இலட்சம் தேங்காய்களாக விளங்கி, 1,090 இலட்சம் தேங்காய்கள் அல்லது 5.1 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. ஒவ்வொரு தெங்குப்பொருட்களின் உற்பத்தியிலும் ஒருசில முன்னேற்றம் இருப்பதாக தெங்குப்பொருட்கள் சந்தைப்படுத்தும் சபை அறிவித்துள்ளது. அதாவது, கொப்பறா உற்பத்தி 1973ஆம் ஆண்டில் 98,205 தொன்களாக விளங்கி, 1974ஆம் ஆண்டில் 106,765 தொன்களாகவும், எண்ணெய் உற்பத்தி 60,433 தொன்களாக விளங்கி, 63,833 தொன்களாகவும். தேங்காய்த் துருவல் 37,384 தொன்களாக விளங்கி, 42,461 தொன்களாகவும், பிண்ணாக்கு 30,217 தொன்களாக விளங்கி, 31,917 தொன்களாகவும் அதிகரித்தது.

சுங்கத்தரவுகளின்படி, மூன்று முக்கிய தெங்குப் பொருட்களின் ஏற்றுமதிப் பெறுமதிகள் 1973ஆம் ஆண்டில் ரூ. 1416 இலட்சமாக விளங்கி, 1974ஆம் ஆண்டில் ரூ 3940 இலட்சமாக விளங்கி, ரூ. 2525 இலட்சமாக அல்லது 1.75 சதவீதத்தால் அதிகரித்தது. ஏற்றுமதி செய்யப்பட்ட அளவானது, 1973ஆம் ஆண்டில் 4168 இலட்சம் தேங்காய்களாக விளங்க, 1974ஆம் ஆண்டில் 4657 இலட்சம் தேங்காய்களாக விளங்கி, 433 இலட்சம் தேங்காய்கள் அதிகரிப்பினைக் காட்டியது. இதன்விளைவாக சராசரி க. ஏ. பெ. விலை, தேங்காய் அளவினைப் பொறுத்தவரை 1973ஆம் ஆண்டில் 34 சதங்களாக விளங்க 1974ஆம் ஆண்டில் 85 சதங்களாக அதிகரித்தது. ஒரு கண்டிக்கான சராசரி க. ஏ. பெ. விலை 1973ஆம் ஆண்டில் ரூ. 324 ஆக இருந்து 1974ஆம் ஆண்டில் ஒரு கண்டிக்கு ரூ. 567 ஆக அதிகரித்த போதிலும், கொப்பறா ஏற்றுமதி வருவாய்களின் பெறுமதி ரூ. 26 இலட்சத்தால் வீழ்ச்சி அடைந்தது. இதற்கு மீளப்பார்வையிடும் இவ்வாண்டு காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு குறைந்தமையே காரணமாகும்.

எவ்வாறுயினும், எண்ணெய் ஏற்றுமதியிலான வருவாய்கள் 1974ஆம் ஆண்டில் ரூ. 1413 இலட்சமாக விளங்கி, 1144 இலட்சத்தால் அல்லது 425 சதவீதத்தால் முன்னைய ஆண்டிலும் பார்க்க கணிசமானளவு அதிகரித்தது. இதற்கு முற்றிலும் க. ஏ. பெ. விலை ஒரு தொன்னுக்கு ரூ. 1489 ஆக விளங்கி, 1 தொன்னுக்கு ரூ. 6573 ஆக அதிகரித்தமை காரணமாகும். மேலும், தேங்காய்த் துருவலின் ஏற்றுமதி வருவாய்கள் 1973ஆம் ஆண்டில் ரூ. 1110 இலட்சமாக விளங்கி 1974ஆம் ஆண்டில் ரூ. 2518 இலட்சமாக அதிகரித்தன. இதற்கு க.ஏ.பெ. விலை இருத்தலொன்று ரூ. 1.34 ஆக இருந்து இருத்தலொன்று ரூ. 2.68 ஆக அதிகரித்தமையும், அளவானது, 37.3 ஆயிரம் தொன்களாக இருந்து 41.9 ஆயிரம் தொன்களாக அதிகரித்தமையும் காரணமாகும்.

தேங்காய் எண்ணெய்.

சுங்கத்தரவுகளின்படி, 1974ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயின் அளவு, 21.5 ஆயிரம் தொன்களாக விளங்கி, 1973ஆம் ஆண்டிலும் பார்க்க 3.4 ஆயிரம் தொன்கள் அல்லது 14.3 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டது தேங்காய் எண்ணெய் உற்பத்தி சிறிதளவால் அதிகரித்தபோதிலும், ஏற்றுமதியளவு அதிகரிப்பதற்கு, முக்கிய காரணமாக எண்ணெய் விலை அதிகரித்தமையால் உள்ளூர் நுகர்வு குறைந்தமையும், உள்நாட்டு சவர்க்கார உற்பத்திக்கு எண்ணெய்க்குப் பதிலாக ஒருவகைக் கொழுப்பு பதிலீடாக இறக்குமதி செய்யப்பட்டதும் காரணமாகும். 1973ஆம் ஆண்டு நீங்கலாக நோக்குமிடத்து, 1974ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு இலங்கை ஒருபொழுதும் கண்டிராதளவுக்குங் குறைவாகக் காணப்பட்டது

எனினும், வருவாய்கள் அடிப்படையில் போக்குமிடத்து. 1974ஆம் ஆண்டு ஏற்றுமதி செய்யப்பட்ட 1431 இலட்சங்கொண்ட எண்ணெய்ப் பெறுமதியானது, ஏற்றுமதி செய்யப்பட்ட அளவில் ஏற்பட்ட குறைவை மேலதிகமாக ஈடுசெய்ததுடன். என்றுமில்லாதளவு உயர்வாக க.எ.பெ. விலையையும் கொண்டிருந்தது. சராசரி க. எ. பெ. விலையானது, 1974ஆம் ஆண்டில் 1 தொன், ரூ. 6573 ஆக விளங்கி, 1973ஆம் ஆண்டிலும் பார்க்க ஒரு தொன், ரூ. 5084 ஆல் அல்லது 341 சதவீதம் கூடுதலாக இருந்தது.

நிரம்பலில் குறைவு காணப்பட்டமையால், பன்னாட்டுச் சந்தை விலைகள் உயர்வடைந்தமையே, உள்நாட்டு ஏற்றுமதியாளர்கள் இலாபமடைவதற்குக் காரணமாயிற்று. 1973ஆம் ஆண்டு முடிவில், தேங்காய் எண்ணெய் திரும்பவும் உலகச்சந்தையில் ஏனைய எண்ணெய், கொழுப்புகளிலும் பார்க்க, கூடிய விலையைப் பெற்றதுடன், இந்நிலை 1974ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டுப் பகுதிகளிலும் நிலைத்திருந்தது. உதாரணமாகப் பிலிப்பைன் நாட்டுத் தேங்காய் எண்ணெயின் கொ. கா. கா. சராசரி விலை, ஐ. இ. சந்தையில் 1973ஆம் ஆண்டில் £ 200 ஆக விளங்கியது. இதை 1972ஆம் ஆண்டிற்கான சராசரி விலையுடன் ஒப்பிடுமிடத்து, 144 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டதுடன், அடுத்த ஆண்டின் முதற் காலாண்டுப் பகுதியில் மேலும் தொடர்ந்து அதிகரித்து, அவ்வாண்டிற்கான சராசரி விலை 440 ஆக விளங்கியதுடன், 1973ஆம்

ஆண்டிலும் 120 சதவீதம் கூடுதலாகக் காணப்பட்டது. இலங்கைத் தேங்காய் எண்ணெய்க்கான க. எ. பெ. (கொழும்பு) விலை 1973ஆம் ஆண்டு திசெம்பரில் ஒரு தொன்னுக்கு 370 ஆக விளங்கி, 1974ஆம் ஆண்டு மாச்சு மாதத்தில் ஒரு தொன்னுக்கு 600 ஆக உயர்வடைந்தது. அதனைத் தொடர்ந்து, விலை கீழ்நோக்கித் தளம்பிச் சென்றதுடன், ஆகக்குறைந்த மட்டமான ஒரு தொன்னுக்கு £ 294 ஆக திசெம்பரில் விளங்கினாலும், 1974ஆம் ஆண்டில் ஒரு தொன்னுக்கு சராசரி விலை 444 ஆக விளங்கியது. இவ்வாண்டின் இறுதிப் பகுதியில் விலை வீழ்ச்சியடைவதற்கு, பிலிப்பைன்ஸ் நாட்டினது, நிரம்பல் அதிகரித்தமை ஓரளவு காரணமாகவும், மந்த விலை நிலவியமையால் முக்கிய சந்தைகளில் கொள்வனவு முயற்சிகள் குறைந்தமை மற்றொரு காரணமுமாகும்.

அளவு அடிப்படையிலும் பெறுமதி அடிப்படையிலும் தேங்காய் எண்ணெய் கொள்வனவு செய்யும் முக்கிய நாடாகக் கனடா விளங்கியது. அதன் கொள்வனவு 1973ஆம் ஆண்டில் 66.100 அந்தர்களாக விளங்க, 1974ஆம் ஆண்டில் 218,236 அந்தர்களாக விளங்கியது. இரண்டாவது ஆகப்பெரிய கொள்வனவு நாடாக நெதர்லாந்து விளங்கி, 1074ஆம் ஆண்டில் 53,118 அந்தர்களைக் கொள்வனவு செய்ய, அதேநேரத்தில் இத்தாலி 49,636 அந்தர்களைக் கொள்வனவு செய்தது.

தேங்காய்த் துருவல்

1974ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேங்காய்த்துருவலின் அளவு 41.9 ஆயிரம் தொன்களாக விளங்கி, முன்னைய ஆண்டிலும் 4.6 ஆயிரம் தொன்கள் அல்லது 12.3 சதவீதம் கூடுதலாக இருந்தபோதிலும், 1972ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவிலும், குறைவாகவே இருந்தது. தேங்காய்த் துருவல் ஏற்றுமதி வருவாய்கள் 1973ஆம் ஆண்டில் ரூ. 1110 இலட்சமாக விளங்கி 1974ஆம் ஆண்டில் ரூ 2520 இலட்சமாக அதிகரித்து ரூபாய் அடிப்படையில் நோக்குமிடத்து, 1974ஆம் ஆண்டிற்கான தேங்காய்த் துருவலிலிருந்து பெற்ற ஏற்றுமதிப் பெறுமதி இவ்வளவு காலமும் பெற்ற தொகையிலும் பார்க்க ஆகக் கூடியதாக விளங்கியது தேங்காய்த்துருவலுக்கான சராசரி க. ஏ. பெ. விலை 1974ஆம் ஆண்டில் ஆகக்கூடிய தொகையாக இருத்தலொன்றுக்கு ரூ. 2.68 (அந்தருக்கு ரூ. 300/-) ஆக விளங்கி, முன்னைய ஆண்டிலும் பார்க்க 1 இருத்தல் ரூ 1.34 (1 அந்தருக்கு ரூ. 150/-) ஆல் அதிகரித்துக் காணப்பட்டிருந்தது. 1973ஆம் ஆண்டிற்கான க. ஏ. பெ. விலை ஒரு இருத்தலுக்கு ரூ. 1.34 (அல்லது 1 அந்தருக்கு ரூ 150/-) ஆக விளங்கியது.

மேலும் தேங்காய்த் துருவலுக்கான பன்னாட்டு விலைகள் 1974ஆம் ஆண்டில் தொடர்ந்து அதிகரித்தது. உதாரணமாக, இலங்கைத் தேங்காய்ப் துருவலின், ஏற்றுமதி விலைகள் இலண்டன் சந்தையில் 1972ஆம் ஆண்டில் தொன்னுக்கு (140/- ஆகவும், 1973ஆம் ஆண்டில் ஒரு தொன்னுக்கு £ 355/- ஆகவும், 1974ஆம் ஆண்டில் ஒரு தொன்னுக்கு £ 512 ஆகவும் உயர்வடைந்தது. (1974ஆம் ஆண்டு தொடக்க காலத்தில் ஏறக்குறைய 439 ஆக விளங்கிய தேங்காய்த் துருவலுக்கான விலை முதற்காலாண்டுப் பகுதியில் தளராது உயர்வடைந்து, ஏப்பிறலில் ஒரு தொன்னுக்கு 564 ஆகக் கூடிய விலையை அடைந்தது. எனினும், விலைகள் அதன்பின்பு குறையத் தொடங்கிய நிலையிலும் ஒரு தொன்னுக்கு 400 இலும் மேலாக விளங்கியது.

பன்னாட்டுச் சந்தையில் விலைகள் அதிகரித்தமையால், தேங்காய் துருவலுக்கான உள்நாட்டுச் சந்தை விலைகள் 1973ஆம் ஆண்டு திசெம்பரில் இருத்தலொன்றுக்கு ரூ 1.24 சராசரியாக விளங்கி, 1974ஆம் ஆண்டு மாச்சு மாதத்தில் ரூ 1 68 ஆக உயர்வடைந்தன எனினும், 1974ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்தில் இருத்தலொன்றுக்கு ரூ. 1.21 ஆக விளங்கி, முன்னைய ஆண்டின்

அதே மாதத்து நிலையிலும் சிறிதளவு குறைந்து காணப்பட்டது. உள்நாட்டுச் சந்தையில் 1974ஆம் ஆண்டில், தேங்காய்த் துருவலுக்கான சராசரி விலை இருத்தலொன்றுக்கு ரூ. 1.42 ஆக விளங்கியது ஒப்புநோக்குகையில் இவ்விலை 1973ஆம் ஆண்டில்இருத்தலொன்றுக்கு 90 சதமாக அமைந்தது.

தேங்காய்த் துருவல் ஆலையாளர்களுக்கு, ஏற்றுமதி விலைகளுக்கு ஏற்ப அவர்களுடைய உற்பத்திகளுக்கு நியாயமான விலையைப் பெறுவதை உறுதிப் படுத்துவதற்கு, தெங்குப் பொருட்கள் சந்தைப்படுத்தும் சபையானது, உள் நாட்டுச் சந்தையில் தேங்காய்த்துருவலுக்கான கொள்வனவு விற்பனவுகளில், 1974ஆம் ஆண்டு யூன் மாதம் 10ஆந் திகதி தொட்டு, நியாயமான விலையை எடுத்துக் காட்டும் திட்டத்தினைக் கொண்டுவந்தது. இத்திட்டத்தின் முக்கிய அம்சமென்னவெனில், இச்சபையானது ஏற்றுமதித் தீர்வை, ஏற்றுமதியாளர் களின் கையாளற் செலவுகள் என்பவை நீங்கலாக நடைமுறையில் நிலவிய வெளிநாட்டு விற்பனை விலை (க. ஏ. பெ பெறுமதி) அடிப்படையில் நாளாந்த எடுத்துக்கூறும் விற்பனை விலையை அதிகரித்தமையாகும். உண்மையான கொள்வனவு விற்பனவு விலைகள், எடுத்துக்கூறப்பட்ட விலைகளிலிருந்து இரு புறமும் ஒரு இருத்தலுக்கு 5 சதத்திற்கு மேலால் மாறாதிருத்தல்வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது பொதுவில், தொதுவில், தெங்குப்பொருட்கள் சந்தைப்படுத்தும், ஆலையாளர்கள், ஏற்றுமதியாளர்கள், தரகர்கள் எல்லோரும் இத்திட்டம் வெற்றியளிக்கக்கூடியதாக்குவதற்கு ஒத்துழைத்தனர் என்றும் குறிப்பிடுகிறது.

ஐ. இராச்சியத்திற்கான தேங்காய்த் துருவல் ஏற்றுமதிகள் 1973ஆம் ஆண்டில் 237,300 அந்தர்களாக விளங்கி, 1974ஆம் ஆண்டில் 268,815 அந்தர்களாக அதிகரித்தன· 1974ஆம் ஆண்டில் 132,391 அந்தர்கள் தேங்காய்த் துருவலைக் கொள்வனவுசெய்த சேர்மன் இணைப்பாட்சிக் குடியரசு இப்பொருளை ஆகக்கூடுதலானளவு வாங்கும் இரண்டாவது நாடாக விளங்கியது. அடுத்ததாக நெதர்லாந்து, பிரான்சு இலங்கைத்தேங்காய்த் துருவலை ஆகக்கூடுதலானளவு வாங்கும் நாடுகளாக விளங்கின.

**கொப்பரா**

சுங்கத்தரவுகளின்படி, ஏற்றுமதி செய்யப்பட்ட கொப்பரா, அளவானது 1973ஆம் ஆண்டில் 2.7 ஆயிரம் தொன்களாக விளங்கி, 9.4 ஆயிரம் தொன்களாகமிகக் குறைவடைந்து 2.3 ஆயிரம் தொன்களால் வீழ்ச்சி யடைந்தது. இதன் விளைவாக கொப்பராவிலிருந்து கிடைத்த ஏற்றுமதி வருவாய்கள் 1973ஆம் ஆண்டில் ரூ 35 இலட்சமாக விளங்கி, 1974ஆம் ஆண்டில் ரூ 9 இலட்சமாக வீழ்ச்சியடைந்தன. 1974ஆம் ஆண்டில் தொடர்ந்து கொப்பரா ஏற்றுமதி தடைசெய்யப்பட்டது.

எனினும், தெங்குப்பொருட்கள் சந்தைப்படுத்தும் சபையானது, 1974ஆம் ஆண்டு யூலை மாதத்தில் ஏற்றுமதி – இறக்குமதித் திட்டத்தினை உருவாக்கியது. இதன்படி. தோட்டம் முதலாந்தரக் கொப்பரா, ஆயிரம் தொன்களை ஏற்றுமதி செய்வதுடன், அதேயளவு ஆலைக்குப் பயன்படுத்தக்கூடிய தரக் கொப்பராவை இறக்குமதிசெய்வதாகும் இத்திட்டமானது, வெளிநாட்டுச் சந்தையில் கூடுதலான விலையினைப் பெற்றுவந்த உயர்ந்த ரகக் கொப்பராவினை ஏற்றுமதி செய்வதற்கு வழிசெய்யும். இத்திட்டமானது, தேங்காய் எண்ணெய் ஆலைக்கும், விலங்குத் தீனி (பிண்ணாக்கு) தயாரிப்பதற்கும் வேண்டிய கொப் பராவினை வழங்குவதற்கு ஏற்படுத்தப்பட்டது.

1974ஆம் ஆண்டு கொப்பராவிற்கான உலகச் சந்தை விலைகள் அதிகரித்த தன் தாக்கம் உள்நாட்டுச் சந்தைவிலைகளிலும் காணப்பட்டது. பிலிப்பைன் நாட்டு கொ. கா. க. விலை (ஐரோப்பா) 1973ஆம் ஆண்டில் ஒரு தொன்

350 ஐ. அ. டொலர்களிலிருந்து 1974இல் 675 ஐ. அ. டொலர்களாக உயர்வடைந்தது. மாச்சு மாதத்திற்கான சராசரி விலை 860 ஐ. அ. டொலர்களாக விளங்கியது இந்த விலைப்போக்கினைத் தொடர்ந்து உள்நாட்டுச் சந்தையில் விற்பனையாளர்களின் கொப்பரு 1973ஆம் ஆண்டில் ஒரு கண்டிக்கு ரூ. 313 ஆகவிளங்கி 1974ஆம் ஆண்டில் ஒரு கண்டிக்கு ரூ. 565ஆக உயர்வடைந்தது. வேறுமுறையில் கூறினல், உள்நாட்டுச் சந்தைவிலை 1973ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்தில், ஒரு கண்டிக்கு ரூ. 373 ஆக விளங்கி, 1974ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதத்தில் ஒரு கண்டிக்கு ரூ. 700 ஆக உச்ச மட்டத்தினை அடைந்தது. திரும்பவும் அதனைத் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து, 1974ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்தில் ஒரு கண்டிக்கு ரூ. 378 ஆகப் பழைய மட்டத்தினை அடைந்தது.

தெங்குப்பொருட்கள் சந்தைப்படுத்தும் சபையின்படி, பிண்ணுக்கு உற்பத்தியானது, 1973ஆம் ஆண்டில் 30,217 தொன்களாக விளங்கி, 1974ஆம் ஆண்டில் 31,917 தொன்களாக அல்லது 5.6 சதவீதத்தால் அதிகரித்தது. 1974ஆம் ஆண்டில் பிண்ணுக்கின் உள்நாட்டுச் சந்தைவிலை ஒரு தொன்னுக்கு ரூ. 933 ஆக விளங்கி, 1973ஆம் ஆண்டில் நிலவிய ஒரு தொன்னுக்கான ரூ. 787 இலிருந்து ஒரு தொன்னுக்கு ரூ. 146ஆக அதிகரித்துக்காணப்பட்டது. 1974ஆம் ஆண்டு ஆரம்ப காலத்தில் விலை அதிகரிப்பதற்குக் காரணமாகக் குறைந்தளவு நிரம்பலே காரணமாகும். இதனல் 1974ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதத்தில் ஒரு தொன்னுக்கான விலை ரூ. 1313ஆக உயர்வான மட்டத்தை அடைந்தது. எனினும், அதனைத்தொடர்ந்து நிரம்பல் அதிகரிக்கத் தொடங்க விலைகள் வீழ்ச்சியடைந்தமையால் ஆண்டு முடிவில் சராசரி விலை ஒரு தொன்னுக்கு ரூ. 609 ஆக மாறியது.

மேலும், ஆண்டு முழுவதிலும் ஏற்றுமதித்தடை காணப்பட்டமையால், கொப்பரா ஏற்றுமதி ஆகக்குறைந்தமட்டத்தில் இருந்தது. இவ்வாண்டு காலத்தில் இந்தியாவும், பாகித்தானும் புறக்கணிக்கத்தக்க மிகக்குறைந்தளவு கொப்பராவினைக் கொள்வனவுசெய்தன.

அட்டவணை II (ஓ) 14

**முக்கிய தெங்கு உற்பத்திகள் — ஏற்றுமதிகளும் அளவு, விலைகளும் 1970–1974**

| ஆண்டு | அளவு | | | | | க. எ. பெ. விலைகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தேங்காய் எண்ணெய் ஆயிரம் அந்தர் | கொப்பரா ஆயிரம் அந்தர் | தேங்காய்த் துருவல் ஆயிரம் அந்தர் | தேங்காய்கள் ஆயிரம் காய்கள் | மொத்தம் (தேங்காய்க்கு சமமான பெறுமானங்களின்படி) ப. இ. காய்கள் 1,2,3&4 | தேங்காயெண்ணெய் தொன்னுக்கு ரூபா | கொப்பரா – கண்டிக்கு ரூபா | தேங்காய்த் துருவல் இறாத்தல் ரூ. | தேங்காய்கள் தேங்காய் ரூ. சதம் |
| 1970 | 1,142 | 305 | 967 | 6,321 | 880 | 2,037.60 | 371.90 | 0.91 | 0.46 |
| 1971 | 1,388 | 344 | 1,043 | 8,567 | 1,019 | 2,142.40 | 349.72 | 0.88 | 0.45 |
| 1972 | 1,709 | 872 | 973 | 10,478 | 1,258 | 1,548.69 | 296.39 | 0.72 | 0 41 |
| 1973 | 361 | 55 | 742 | 5,118 | 422 | 1,488.80 | 324.25 | 1.34 | 0.68 |
| 1974 | 430 | 8 | 838 | 2,836 | 468 | 6,573.17 | 566.91 | 2.68 | 0.85 |

மூலம்: இலங்கைச் சுங்கம்.

## தெரிந்தெடுக்கப்பட்ட கை

| | 1973 | | | 1974 | | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை கூறு | அளவு | பெறுமதி (ரூபாய்களில்) | தொகை கூறு | அளவு | பெதுமதி (ரூபாய்க |
| **அ. தயாரித்தல்** | | | | | | |
| **1. உணவு, குடிவகைகளும், புகையிலையும்** | | | | | | |
| (அ) அப்பமனை உற்பத்திகள் ... பேஸ்ரி விசுக்கோத்தும், ஏனைய அப்பமனைப் பொருட்கள் | | | 885,703 | இரு. | 521,004 | 970,2 |
| (ஆ) கொக்கோ தயாரிப்புகளும் உடன் தேயிலையும்... | | | | | | |
| (i) கொக்கோ பசை ... | | | வி. கி. | அந்தர் | 588 | 348,8 |
| (ii) இனிப்பற்ற கொக்கோ மா ... | | | வி. கி. | இரு. | 338,800 | 267,0 |
| (iii) உடன் தேயிலை ... | இரு: | 500,954 | 5,617,481 | ,, | 614,228 | 6,502,4 |
| (இ) தகரத்திலடைத்த அல்லது போத்தலிலிட்ட பழங்கள், பழச்சாறு, காய்கறிச்சாறும் ... | | | | | | |
| (i) தயாரிக்கப்பட்ட, பாதுகாக்கப்பட்ட தகரத்திலடைத்த போத்தலிலிட்ட பழங்கள் .. | அந்தர் | 17,690 | 2;500,095[1] | ,, | 916,403 | 1,205,2 |
| (ii) பழச்சாறும் காய்கறிச்சாறும் ... | | வி. கி. | வி. .கி | ,, | 885,399 | 1,167,5 |
| (ஈ) மீன், உடன்மீன், குளிரூட்டப்பட்ட விறைக்கப்பண்ணிய, உப்பிடப்பட்ட மேலோடும், நத்தையினமும் நீங்கலாக | | | | | | |
| (i) மீன், உடன்மீன், குளிரூட்டப்பட்ட அல்லது விறைக்கப்பண்ணிய ... | ,, | 122 | 17.684,008[2] | அந்தர் | 7,538 | 4,994,2 |
| (ii) மீன் உப்பிடப்பட்ட, உலர் நீரிலுள்ள உலர்த்திய, புகையூட்டப்பட்ட, சுருத்துடுப்பு, மீன் இரைப்பை ... | ,, | 293,044 | 2,532.675[3] | ,, | 1,135 | 1,848,8 |
| (iii) மேலோடுள்ளவையும் நத்தையினமும் ... | ,, | 260,149 | 1,691,888[4] | ,, | 18,978 | 19,919,5 |
| (உ) கால்நடை உணவு ... கேக்கும், தாவர எண்ணெயின் மிஞ்சிய ஏனையவையும் ... | ,, | 234,727 | 3,214,501 | ,, | 82,194 | 1,524,6 |
| (ஊ) தயாரிக்கப்பட்ட புகையிலை தயாரிக்கப்பட்ட புகையிலைச் சாறு ... | இரு. | 19,103 | 126,285 | இரு. | 99,662 | 570,4 |
| **2. புடவைகள், அணியும் ஆடை வகைகள்** | | | | | | |
| (i) மனிதனால் செய்யப்பட்ட தும்பில் நெய்யப்பட்ட சீத்தை ... | ச. யார் | 160,466 | 3,994,210[5] | ச. யார் | 31,194 | 381,9 |
| (ii) பருத்தியில் நெய்யப்பட்ட ஏனைய சீத்தைகள் .. | | | | ,, | 231,415 | 1,687,3 |
| (iii) ஆண்கள், இளைஞர்களது வெளி ஆடைகள் ... | எண். | 100,976 | 11,374,054 | எண் | 1,084,514 | 13,226,1 |
| (iv) பெண்கள், மகளிர், குழந்தைகளது வெளி ஆடைகள் .. | | | | ,, | 782,382 | 10,951,2 |
| **3. அத்தியாவசிய எண்ணெய்** | | | | | | |
| (i) சிற்றனெல்லா எண்ணெய் .. | இரு. | 461,985 | 4,177,334 | இரு. | 297,786 | 5,616,9 |
| (ii) கறுவா இலை எண்ணெய் .. | ,. | 192,562 | 1.827,056 | ,, | 210,012 | 4,959,5 |
| (iii) கறுவாப்பட்டை எண்ணெய் .. | ,, | ?,024 | 768,062 | ,, | 1,965 | 674,4 |
| (iv) கருமுந்திரிச்சாறு-ஏனையவை .. | ,, | 972,941 | 2,280,691 | ,, | 3,449,492 | 6,401,2 |

## தொழில் ஏற்றுமதிகள்

| | 1973 தொகை கூறு | 1973 அளவு | 1973 பெறுமதி (ரூபாய்களில்) | 1174 தொகை கூறு | 1174 அளவு | 1174 பெறுமதி (ரூபாய்களில்) |
|---|---|---|---|---|---|---|
| **இரசாயன உற்பத்திகள்** | | | | | | |
| (i) சுத்தப்படுத்தப்பட்ட கொழுப்புத் திராவகம், திராவக எண்ணெய் ... | அந்தர் | 62,648 | 6,916,963 | அந்தர் | 18,065 | 3,922,083 |
| (ii) கிளிசறின் வகையைச் சேர்ந்தவை | ,, | 30,197 | 2,741,771 | ,, | 23,378 | 5,577,380 |
| (iii) மாஜரீன் . | | வி. கி. | வி. கி. | ,, | 23,535 | 5,035,600 |
| **பெற்ரோலிய உற்பத்திகள்** | | | | | | |
| (i) நப்தா .. | | | 19,459,374 | | | 81,514,538 |
| (ii) எரிபொருள் எண்ணெய் .. | | | 4,141,554 | | | 6,657,278 |
| (iii) | | | 110,809,603 | | | 261,865,341 |
| **தோல், றப்பர், மர, மட்பாண்டங்கள்** | | | | | | |
| (i) பயணப் பொருட்கள் ... | எண. | 13,917 | 268,157[6] | | | 553,524 |
| (ii) ஏனைய தோற் பொருட்கள் அல்லது தோற் கலப்புப் பொருள்கள் | அந்தர் | 73 | 85,867 | | | 159,374 |
| (iii) அடித்தோலினல் செய்யப்பட்ட காலணிகள் | டசின் | 14,910 | 901,009 | எண. | 1,072,729 | 3,669,647 |
| (iv) ஓலி ஓரப்பீடு, இட்டுச் செல்லுங் கருவி தூக்குங் கருவி, பெல்ட்ஸ் அல்லது வல்கனைஸ்ட் றப்பர் ... | | | வி. கி. | அந்தர் | 1,986 | 457,272 |
| (v) றப்பர் ரயர்கள், ரயர் உறைகள், ரியூப்புக்கள் ... | எண. | 409,000 | 2,090,115 | எண. | 117,499 | 700,950 |
| (vi) மென்மையான வல்கனைஸ்ட் றப்பரினல் செய்யப்பட்ட ஏனைய பொருட்கள் ... | அந்தர் | 24,344 | 581,433 | ,, | 208,167 | 928,187 |
| (vii) மரத்தினல் செய்யபபட்ட ஏனைய பொருட்கள் ... | | | 1,859,863 | | | 2,921,034 |
| (viii) வீட்டு குளியலறைத் தேவைக்குரிய மேசைப் பொருட்கள் ... | ,, | 340 | 80,925 | | | 6,453,246 |
| **சீமேந்து** | | | | | | |
| போட்லாந்து சீமேந்து, உயர்ரக கீந்தக சீமேந்து, சாம்பற்கட்டிச் சீமேந்து | ,, | 102,100 | 581,673 | அந்தர் | 1,004,989 | 16,007,678 |
| **இயந்திரப் பொறிகளும், பொறித்துறைத் துணைக்கருவிகளும் ...** | | | | | | |
| (i) இயந்திரப் பொறிகள் ... | | | வி. கி. | எண | 75 | 3,586,875 |
| (ii) இயந்திரப் பொறிகளும் ஏனைய பொறித்துறைத் துணைக் கருவிகளும் ... | எண. | 512 | 817.820 | ,, | 464 | 818,495 |
| மொத்தத் தயாரிப்பு | | | 210,010,170 | | | 484,046,759 |
| **(ஙு) சுரங்கத் தொழிலும் கல்வெட்டுதலும்** | | | | | | |
| (i) இயற்கைக் காரீயம் ... | அந்தர் | | | | | |
| (ii) கனிப்பொருள் ... | ,, | 122,179 | 11,641,421 | அந்தர் | 185,896 | 15,555,550 |
| (iii) கனி உலோகக் கலவையும், இரும்புக் கந்தகக் கல்லும் – ஏனையவை | | 1,791,415 | 7,337,454 | ,, | 1,539,598 | 7,303,382 |
| | | வி. கி, | வி. கி. | ,, | 68,700 | 2,688,433 |
| மொத்த சுரங்கத் தொழிலும்கல்வெட்டுதலும் | | | 18,978,875 | | | 25,547,365 |
| மொத்த கூட்டுத் தொகை.. | | | 228,989,045 | | | 509,594,124 |

மூலம்: இலங்கைச் சுங்கமும், பெற்ரோலியக் கூட்டுத்தாபனமும்.

1 தகரத்திலடைக்கப்பட்ட அல்லது போத்தலிலிட்ட பழப்பாகு.
2 மீன் – உடன்மீன்
3 மீன், இரைப்பை சுருத்துடுப்புகள்.
4 உப்பிடப்பட்ட, உலர்ந்திய, புகையூட்டப்பட்ட மீன்.
5 பருத்தி, பட்டிக் துணி.
6 கைப்பெட்டிகளும் பயணப் பைகளும்.

**(ஈ) தெரிவு செய்யப்பட்ட கைத்தொழில் ஏற்றுமதிமதிகள்**

1973ஆம் 1974ஆம் ஆண்டுகளில் சுங்கத்தினால் பின்பற்றப்பட்ட குறியீட்டு முறைகளில் மாற்றங்கள் கொணரப்பட்டமையினால், 1973ஆம் ஆண்டிற்கான கைத்தொழில் ஏற்றுமதிகளின் சில பொருளை இனங்கண்டுகொள்ள முடியாதிருந்தது. எனவே, 1973ஆம் ஆண்டில் இப்பொருட்களின் மொத்தப்பெறுமதி குறைவாக மதிப்பிடப்பட்டுள்ளது.

அட்டவணை II (ஓ) 15இல் காட்டியபடி தெரிந்தெடுக்கப்பட்ட கைத்தொழில் ஏற்றுமதிகளின் வருவாய்கள் மேற்குறிப்பிட்ட கட்டுப்பாடுகளுக்குட்பட, 1974ஆம் ஆண்டில் இரண்டு மடங்கிற்கு மேலாக விளங்கின. இதற்கு நப்தா, எரிபொருள் எண்ணெய், கப்பல் எரிபொருள் எண்ணெய், விமான எரிபொருள் எண்ணெய், 1973ஆம் ஆண்டில் ரூ. 1,340 இலட்சமாக விளங்கி, 1974ஆம் ஆண்டில், ரூ. 3,500 இலட்சமாக ஏற்றுமதிப் பெறுமதிகள் அதிகரித்தமை காரணமாகும். இவ்வுயர்வு மசகெண்ணை விலை பெரிதளவால் அதிகரித்தமையைத் தொடர்ந்தே ஏற்பட்டது. மேலும், அட்டவணை II (ஓ)15இன்படி ஏனைய தெரிந்தெடுக்கப்பட்ட கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதி கணிசமானளவால் அதிகரித்தது.

தெரிந்தெடுக்கப்பட்ட கைத்தொழில் ஏற்றுமதிகளின் வருவாய்களில் பெரிய பங்கினைக்கொண்ட பெற்றோலியப் பொருட்களின் வருவாய்கள் 160.4 சதவீதத்தால் அதிகரித்தன. இவற்றில் நப்தாவின் பெறுமதி 319 சதவீதத்தாலும் கப்பல் எரிபொருள் விமான எரிபொருள் 136 சதவீதத்தாலும் எரிபொருள் எண்ணெய் 60 சதவீதத்தாலும் அதிகரித்தன.

ஏனைய ஏற்றுமதிப் பொருட்களின் அதிகரிப்புகளில் தயாரிக்கப்பட்ட புகையிலை 352 சதவீதமாகவும் அணியும் ஆடைகள் 113 சதவீதத்தாலும் கிளிசறினும் கிளிசறலையும் 103 சதவீதத்தாலும், பயணப் பொருட்கள் 106 சதவீதத்தாலும், அடித்தோல் கொண்ட காலணிகள் 307 சதவீதத்தாலும், மேசைக்கான பொருட்களும், வீட்டுக்கும், குளியலறைக்கும் தேவையான பொருட்களும் 7,874 சதவீதத்தாலும், சீமெந்தும் இயந்திர வகைகளும் 2,652 சதவீதத்தாலும் அதிகரித்துக் காணப்பட்டன. மேலும், இத்தகைய அநேக பொருட்களின் பதிவுசெய்யப்பட்ட அதிகரித்த பெறுமதிகள், ஏற்றுமதி செய்யப்பட்ட அளவு விரிவடைந்தலையாலேயே ஏற்பட்டது.

**(உ) ஏனைய வேளாண்மை கைத்தொழிலல்லாத ஏற்றுமதிகள்**

தேர்ந்தெடுக்கப்பட்ட சிறிய ஏற்றுமதிகளின் சராசரிக் கொழும்புச்சந்தை விலைகளின் விபரங்களை அட்டவணை II (ஓ) 16 காட்டுகின்றது. இவ்வட்டவணையானது, வெள்ளை, மண்ணிறம்கொண்ட பப்பெயின் நீங்கலாக ஏறக்குறைய ஏனைய எல்லாப் பொருட்களிலும் விலைகள், கணிசமானளவு அதிகரித்தமையினைக் காட்டுகிறது. இவ்வாறு அதிகரிப்புக்கள் ஏற்படுவதற்கு, உலகச் சந்தையில் நிலவிய செழிப்பு நிலை 1974ஆம் ஆண்டில் தொடர்ந்து நிலவியமையே காரணமாகும்.

அட்டவணை II (ஓ) 16

## தேர்ந்தெடுத்த சிறு ஏற்றுமதிப் பொருட்களின் சராசரிக் கொழும்புச் சந்தை விலைகள்

| | தொகை அலகு | வருட சராசரி | | | | | காலாண்டு சராசரி 197- | | | | வீத மாற்றம் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1970 | 1971 | 1972 | 1973 | 1974 | 1வது | 2வது | 3வது | 4வது | 1970 மேல் 1971 | 1971 மேல் 1972 | 1972 மேல் 1973 | 1973 மேல் 1974 |
| கொக்கோ1 ... | அந்தர் | 239.19 | 228.30 | 214.69 | 466.71 | 720.02 | 643.04 | 734.33 | 751.28 | 767.19 | - 4.6 | - 5.9 | +106.0 | + 54.3 |
| கறுவாப்பட்டை2 ... | றாத்தல் | 4.58 | 3.87 | 3.24 | 4.58 | 7.31 | 7.39 | 6.93 | 7.53 | 7.37 | - 15.5 | - 16.3 | + 41.4 | + 59.6 |
| கறுவாத்துண்டு3 | கண்டிகள் | 267.52 | 286.50 | 283.87 | 450.61 | 514.26 | 462.71 | 513.33 | 590.00 | 491.00 | + 7.1 | - 0.9 | + 58.7 | + 14.1 |
| ஏலக்காய்4 ... | றாத்தல் | 29.03 | 15.07 | 15.94 | 29.52 | 34.30 | 31.21 | 36.98 | 38.44 | 30.55 | - 48.1 | + 5.8 | + 85.2 | + 16.2 |
| பப்பெயின் வெள்ளை ... | றாத்தல் | 14.53 | 15.47 | 22.22 | 38.73 | 36.15 | 42.44 | 41.00 | 36.03 | 25.13 | + 6.5 | +43.6 | + 74.3 | - 6.7 |
| பப்பெயின் பிரவுன் ... | றாத்தல் | 9.40 | 13.05 | 19.66 | 31.37 | 23.53 | 32.40 | 29.33 | 19.92 | 12.48 | +38,8 | +50.6 | + 59.6 | - 25.0 |
| தும்பு மெத்தை5 ... | அந்தர் | 16.88 | 198.5 | 17.86 | 22.77 | 36.95 | 31.10 | 36.16 | 40.81 | 39.74 | +17.6 | - 10.0 | + 27.5 | + 62 3 |
| தும்புக் கயிறு6 ... | அந்தர் | 38.03 | 40.63 | 42.32 | 53.00 | 79.86 | 70.85 | 77.00 | 84.91 | 86.67 | + 6.8 | + 4.1 | + 25.2 | + 50.7 |
| தேங்காய்ச் சிரட்டைக் கரி7 ... | தொன் | 320.21 | 443.07 | 238.76 | 450.54 | 1,538.18 | 1,023.50 | 1,851.04 | 1,954.17 | 1,315.00 | +38.4 | - 46.1 | + 88.7 | + 241.4 |

மூலங்கள்: வாராந்த பல்வகை உற்பத்தி சந்தை அறிக்கைகள்,
இலங்கை வர்த்தக நிறுவனம் வாராந்த விலைப்பட்டியல்.

1 பெருந்தோட்டம் எண். 1
2. திறம் 10000
3. வாங்கும் கடைகளில் சில்லறையாக மண்ணும் தூசியும் நீக்கப்பட்டு.
4. கிறீன் ஸ்ரேற் எண் 1.
5. தரம் எண். 1.
6. 3 ரை.
7. வாங்குவோர் பைகளில்.

உதாரணமாக இலண்டன் சந்தையில் கொக்கோவுக்கான விலைகள் 1973 ஆம் ஆண்டில் ஒரு தொன்னுக்கு £ 513/-ஆக விளங்கி, 1974ஆம் ஆண்டில் ஒரு தொன்னுக்கு £ 812 ஆக உயர்வடைந்து, 58 சதவீத அதிகரிப்பினைக் காட்டுகிறது. கொழும்புச் சந்தையில் ஒரு அந்தருக்கான 1ஆம் எண் தோட்டக் கொக்கோவின் விலை, ரூ 467 ஆக இருந்து ஒரு அந்தருக்கு ரூ 720 ஆக உயர்வடைந்து 54 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. கறுவாச் சுருள்களும், துண்டுகளும் 1973ஆம் ஆண்டில் இறாத்தலொன்றுக்கு 0.25 பென்சாகவும், 7.6 பென்சாகவும் விளங்கி, 1974ஆம் ஆண்டில் 0.43 பென்சாகவும், 9 8 பென்சாகவும் அதிகரித்திருக்கையில், சராசரி கொழும்புச்சந்தை விலைகளில் முறையே இறாத்தலொன்றுக்கு ரூ. 4.58 இலிருந்து ரூ. 7.31 ஆகவும், ஒரு கண்டிக்கு ரூ. 451 இலிருந்து ரூ. 514 ஆகவும் அதிகரித்தன. 1973ஆம் ஆண்டிற்கு முன்பு எல்லாப் பொருட்களும் பொதுவாக வீழ்ந்து செல்லும் விலைப்போக்கினைக் காட்டின.

ஏலத்தின் விலைகள் 1972ஆம் ஆண்டில் இறாத்தலொன்றுக்கு ரூ. 15.94 ஆக விளங்கி. 1973ஆம் ஆண்டில் ரூ. 29.52 ஆக அல்லது 85 சதவீதத்தால் அதிகரித்தது. இது, 1974ஆம் ஆண்டில் ரூ. 34.30 ஆக அல்லது 16 சதவீதத்தால் அதிகரித்தது இலண்டனில். சராசரிச் சந்தைவிலை இறாத்தலொன்றுக்கு, £ 1.05 ஆக விளங்கி இறாத்தலொன்றுக்கு £ 1.62 ஆக உயர்வடைந்தது.

முன்னைய ஆண்டுகளில், வெள்ளை, மண்ணிறம் கொண்ட பப்பெயினின் சராசரி விலைகள் உயர்ந்துசெல்லும் போக்கினைக் கொண்டிருந்தன. எனினும், இந்த இரண்டு பொருட்களினதும் விலைகள், இறாத்தலொன்றுக்கு 1974ஆம் ஆண்டில் முறையே ரூ. 136.15 ஆகவும், ரூ. 23.53 ஆகவும் விளங்கி, 7 சதவீத, 25 சதவீத அதிகரிப்புக்களைக் காட்டின. மேலும் இலண்டன் சந்தையில் 1973ஆம் ஆண்டிலும் வெள்ளைப் பப்பெயினின் விலை குறிக்கப்படாத வேளையில், மண்ணிறப் பப்பெயினின் விலை இறாத்தலொன்றுக்கு £ 1.25 ஆக விளங்கி £ 1.62 ஆக அதிகரித்தது.

ஏனைய தெங்குப் பொருட்களான மெத்தைத் தும்பு, சிலிர்ப்புத் தும்பு, சிரட்டைக் கரி என்பன 1974ஆம் ஆண்டில் தெங்குப் பொருட்கள் ஈட்டிய அதிகரித்த விலைகள் காரணமாக நன்மையடைந்தன. இதேநேரத்தில் இலண்டன் சந்தையில் மெத்தைத்தும்பு, 1973ஆம் ஆண்டில் ஒரு மெற்றிக் தொன்னுக்கு £ 65.72 ஆக இருந்து 1974ஆம் ஆண்டில் ஒரு மெற்றிக் தொன்னுக்கு £ 117.15 ஆகவும், சிலிர்ப்புத் தும்பு ஒரு மெற்றிக் தொன்னுக்கு £ 108.27 ஆக விளங்கி, ஒரு மெற்றிக் தொன்னுக்கு £ 156.64 ஆகவும் அதிகரித்தது. பன்னாட்டு விலைகளின் போக்கினைத் தொடர்ந்து, உள்நாட்டுச் சந்தையில் மெத்தை, மெத்தைத் தும்பு என்பவற்றின் விலைகள் முறையே ஒரு அந்தருக்கு ரூ. 21.77 இலிருந்து ரூ. 36 95 ஆகவும் ரூ. 53 இலிருந்து 76.86 ஆகவும் உயர்வடைந்தன. 1974ஆம் ஆண்டில் சிரட்டைக் கரியின் உள்நாட்டு விலை 241 சதவீதத்திற்கு உயர்ந்து விளங்கியது.

**ஏற்றுமதிகள்**

1973ஆம் ஆண்டறிக்கையில் கொடுக்கப்பட்ட தரவுகளுடன் ஒப்பிடுமிடத்து, கைத்தொழில் ஏற்றுமதிகள் என்ற பிரிவில் கனிப்பொருட்காரீயம், இல்மனைற்று ஆகிய பொருட்களையும் சேர்த்தமையால் தெரிந்தெடுக்கப்பட்ட விவசாய, கைத்தொழிலற்ற ஏற்றுமதிகளின்[1] ஆண்டுப் பெறுமதியில் மாற்றம் காணப்பட்டது. எனினும், பெறுமதி அடிப்படையில், தெரிந்தெடுக்கப்பட்ட வேளாண்மைப் பொருட்களினதும், மரபுவழியற்ற பண்டப்பொருட்களினதும் மொத்த ஏற்றுமதி வருவாய்கள் 1973ஆம் ஆண்டில் ரூ. 3,032 இலட்சமாக விளங்கி, 1974ஆம் ஆண்டில் ரூ. 3,478 இலட்சமாக அதிகரித்தன.

அட்டவணை II (ஒ) 17இல் காட்டியபடி, ஏலம், மிளகு, தயாரிக்கப்படாத புகையிலை, இரத்தினக்கற்கள் என்பவை தவிர்ந்த எல்லாத் தனிப்பட்ட பொருட்களில் இருந்தும் ஈட்டப்பட்ட ஏற்றுமதி வருவாய்கள் வெவ்வேறு அளவில் அதிகரித்தன, மேலும் ஏற்றுமதி செய்யப்பட்ட அளவில் அல்லது ஈட்டப்பட்ட பெறுமதியில் மாற்றங்கள் ஏற்பட்ட நிலையிலும், அத்தகைய எல்லா ஏற்றுமதிப் பொருட்களின் க. ஏ. பெ. விலைகள், இரத்தினக்கற்கள் தவிர, கணிசமானளவால் அதிகரித்தன. எனவே, தேர்ந்தெடுக்கப்பட்ட ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமதி, பெருமளவுக்கு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்புகளால் அல்லாமல், அளவு மாற்றங்களால் ஏற்படவில்லை. உண்மையில் 1973ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து,[2] 1974ஆம் ஆண்டில் ஏலம், மிளகு கராம்பு, கொக்கோ விதைகள், தயாரிக்கப்படாத புகையிலை என்பன வீழ்ச்சியடைந்தன.

சிலிர்ப்புத் தும்பு ஏற்றுமதிகளின் அளவு 1973ஆம் ஆண்டில் 578.3 ஆயிரம் அந்தர்களாக விளங்கி, 1974ஆம் ஆண்டில் 645.0 ஆயிரம் அந்தர்களாக அதிகரித்த வேளையில் மெத்தைத் தும்பின் ஏற்றுமதிகள் 1441.1 ஆயிரம் அந்தர்களாக விளங்கி. 1429.0 ஆயிரம் அந்தர்களாக வீழ்ச்சியடைந்தன. சிலிர்ப்புத்தும்பின் ஏற்றுமதி வருவாய்கள் அதிகரித்ததற்கு ஏற்றுமதி அளவுகள் அதிகரித்தமையும் 1973ஆம் ஆண்டில் க. ஏ. பெ. விலை ஒரு அந்தருக்கு ரூ. 61.78 ஆக இருந்து 1974ஆம் ஆண்டில் ஒரு அந்தருக்கு ரூ. 73.02 ஆக அதிகரித்தமையும் காரணமாகும். ஏற்றுமதி செய்யப்பட்ட அளவில் வீழ்ச்சி காணப்பட்டபோதிலும் மெத்தைத் தும்பிலான வருவாய்கள் 1974ஆம் ஆண்டில் ரூ. 613 இலட்சமாக விளங்கி, 69.5 சதவீத அதிகரிப்பினைக் காட்டின. இதற்கு முற்றிலும், க. ஏ, பெ. விலை 1973ஆம் ஆண்டில் ஒரு அந்தருக்கு ரூ. 25.12 ஆக விளங்கி, 1974ஆம் ஆண்டில் ஒரு அந்தருக்கு ரூ. 42.89 அல்லது 70.7 சதவீதமாக அதிகரித்தமை காரணமாகும். சிரட்டைகள், சிரட்டை மா, பயன்படுத்தக்கூடிய கரி என்பவை உள்ளடக்கிய தேங்காய்ச் சிரட்டைப் பொருட்களில் சிரட்டைக்கரியே மிக முக்கிய ஏற்றுமதிப் பொருளாகும். சிரட்டைக்கரியிலான ஏற்றுமதி வருவாய்கள், 1973ஆம் ஆண்டில் ரூ. 85 இலட்சமாக விளங்கி, ரூ. 314 இலட்சமாக அதிகரித்தன. 1974ஆம் ஆண்டில் ஏற்றுமதி அளவும், க. ஏ. பெ. விலையும் அதிகரித்தது. மேலும் இறுதியாகக் குறிப்பிட்ட காரணியே ஏற்றுமதி வருவாய்களின் பெறுமதி அதிகரிப்பதற்குத் தூண்டுதலாக இருந்தது.

---

1. தெரிந்தெடுக்கப்பட்ட கைத்தொழில் எற்றுமதிகள் பற்றிய அட்டவணை II (ஒ) 15ஐப் பார்க்கவும். பக்கம்——.

2 கராம்பு, மிளகு என்பவற்றின் விலைகள் இலண்டன் சந்தையில் ஒரு தொன்னுக்கு 1668.75 இலிருந்து 2323.93 ஆகவும், 749.07 இலிருந்து 946.22 ஆகவும் உயர்வடைந்தன.

## ஏனைய வேளாண்மைப் பொருட்களினதும் கைத்தொழி

| | தொகை கூறு | அளவு | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1966 | 1967 | 1968 | 1969 | 1970 | 1971 | 1972 | 1973 | 1974 | 1966 | 19 |
| **தெங்கு உப உற்பத்தியின் தொகுதி** | | | | | | | | | | | | |
| தும்பு நார்–சிலிர்ப்பு ... | ஆயி. அந். | 401.2 | 538.0 | 563.9 | 506.7 | 474.0 | 534.1 | 531.3 | 578.3 | 645.0 | 17.4 | 22 |
| தும்பு நார்–மெத்தை ... | ,, | 1114.2 | 1065.0 | 1260 0 | 1180.3 | 1172.6 | 1307.2 | 1289.5 | 1441.1 | 1429.0 | 20.3 | 19 |
| சிரட்டைக் கரி ... | ,, | 264.6 | 273.0 | 319.1 | 385.2 | 583.4 | 629.9 | 539.2 | 566.2 | 581.0 | 3.2 | 4 |
| **வாசனைச் சரக்குகளின் தொகுதி** | | | | | | | | | | | | |
| கறுவாப்பட்டை .. | ,, | 47.1 | 52.8 | 61.8 | 65.9 | 70.0 | 72.6 | 77.0 | 87.3 | 99.2 | 29.2 | 29 |
| கறுவாத் துண்டுகள் ... | ,, | 7.2 | 7.9 | 16.6 | 21.6 | 12.7 | 15.3 | 21.5 | 40.8 | 51.8 | 1.2 | 1 |
| ஏலக்காய் ... | ,, | 2.5 | 2.4 | 2.5 | 3.2 | 4.0 | 3.7 | 4.2 | 3.7 | 3.0 | 4.9 | 3 |
| மிளகு .. | ,, | 6.0 | 2.0 | 16.2 | 17.9 | 16.9 | 0.9 | 2.1 | 40.4 | 6.6 | 1.2 | 0 |
| கிராம்பு ... | ,, | 1.0 | 0.8 | 1.0 | 4.6 | 5.5 | 0.2 | 2.1 | 12.1 | 11.3 | 0.1 | 0 |
| **ஏனைய வேளாண்மைப் பொருட்கள்** | | | | | | | | | | | | |
| கொக்கோ விதைகள் ... | ,, | 42.5 | 23.2 | 34.8 | 25.4 | 29.9 | 30.1 | 30.7 | 22.6 | 20.2 | 5.9 | 4 |
| தயாரிக்கப்படாத புகையிலை | ப இ.இரு. | — | 0.9 | 1.3 | 0.7 | 0.5 | 1.5 | 1.5 | 1.5 | 1.2 | — | 2 |
| **தயாரிக்கப்பட்ட உற்பத்திகளின் தொகுதி** | | | | | | | | | | | | |
| இரத்தினக்கற்களும் அது சார்பான கற்களும் ... | ஆயி. கரெட். | 61.1 | 24.9 | 196.0 | 136.6 | 184.9 | வி. கி. | 288.2 | 649.7 | 682.4 | 3.9 | 3 |
| நகைகளும், நகைப் பொருட்களும் ... | ,, | — | — | — | — | — | — | — | — | 2.5 | 1.7 | 2 |
| மேலேயுள்ள விடயங்களின் மொத்தப் பெறுமானம் ... | | | | | | | | | | | 89.0 | 93 |

சார்பற்ற பண்டங்களினதும் ஏற்றுமதி

| பெறுமதி (ப. இ. ரூ.) | | | | | | | ஒரு கூறுக்கான க. ஏ. பெ. விலை | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1968 | 1969 | 1970 | 1971 | 1972 | 1973 | 1974 | 1966 | 1967 | 1968 | 1969 | 1970 | 1971 | 1972 | 1973 | 1974 |
| 25.6 | 24.6 | 22.3 | 27.2 | 28.6 | 35.7 | 47.1 | 43.49 | 40.94 | 43.35 | 48.63 | 47.13 | 51.01 | 53.78 | 61.78 | 73.02 |
| 25.5 | 25.4 | 24.8 | 27.2 | 28.4 | 36.2 | 61.3 | 18.21 | 18.24 | 20.23 | 21.67 | 21.16 | 20.83 | 21.99 | 25.12 | 42.89 |
| 5.2 | 3.4 | 6.7 | 10.7 | 6.5 | 8.5 | 31.4 | 12.20 | 18.02 | 16.34 | 8.90 | 11.53 | 17.06 | 12 07 | 15.01 | 54.12 |
| 32.9 | 33.8 | 28.4 | 25.1 | 26.9 | 31.1 | 51.0 | 620.11 | 564.71 | 531.79 | 513.33 | 405,79 | 353.16 | 349.63 | 356.24 | 513.64 |
| 2.3 | 4.1 | 1.7 | 2.2 | 3.4 | 6:7 | 8.5 | 161.79 | 153.27 | 141.30 | 191.11 | 134 02 | 146.23 | 160.28 | 164.22 | 165.00 |
| 4.1 | 7.3 | 11.3 | 5.8 | 5.7 | 8.4 | 6.5 | 1978.56 | 1341.65 | 1639.22 | 2297.00 | 2838.61 | 1581.78 | 1356.17 | 2270.72 | 2229.31 |
| 2.4 | 3.1 | 4.7 | 0.7 | 0.9 | 12.9 | 3 4 | 199.76 | 215.21 | 146.53 | 173.12 | 279.42 | 749.21 | 391.82 | 319.31 | 513.12 |
| 0.1 | 2.8 | 4.1 | 0.1 | 0.8 | 10.1 | 12.5 | 138.29 | 104.24 | 130.22 | 617.35 | 756.41 | 354.28 | 395.97 | 834.74 | 1110.38 |
| 7.3 | 7.0 | 7.2 | 6.2 | 5.1 | 6.1 | 10.8 | 139.26 | 178.36 | 211.16 | 273.43 | 240.82 | 205.57 | 165.92 | 269.91 | 534.69 |
| 5.1 | 2.9 | 2.2 | 6.9 | 6.9 | 6.7 | 6.0 | — | 3.00 | 38.1 | 4.04 | 4.21 | 4.47 | 4.57 | 4.41 | 5.15 |
| 2.0 | 0.5 | 4.3 | 3.4 | 12.3 | 140.8 | 109.5 | 63.56 | — | — | — | — | — | — | 216.71 | 160.42 |
| 1.2 | 1.0 | 1.0 | 0.3 | 0.2 | 0.1 | 0 6 | — | — | — | — | — | — | — | — | 254.48 |
| 113.7 | 115.9 | 118.7 | 115.8 | 125.7 | 303.2 | 347.8 | | | | | | | | | |

(ஊ) இரத்தினக்கற்கள்

சுங்கத்தரவுகளின்படி அருங்கற்கள், அலைசார்ந்த கற்களின் ஏற்றுமதி வருவாய்கள் 1973ஆம் ஆண்டில் ரூ. 1,408 இலட்சமாக இருந்து ரூ. 1,095 இலட்சமாக வீழ்ச்சியடைந்தன. இவ்வீழ்ச்சி ரூ. 313 இலட்சம் அல்லது 22.2 சதவீதமாகும். இது 1973ஆம் ஆண்டில் வருவாய்கள் 1972ஆம் ஆண்டிலும் பார்க்க ரூ. 964 இலட்சம் அல்லது 784 சதவீதமாக அதிகரித்தமைக்கு மாறுக உள்ளது. இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருவாயில் இரத்தினக்கற்களின் பங்கு 1973ஆம் ஆண்டில் 5 சதவீதமாக இருந்து 1974ஆம் ஆண்டில் 3 சத வீதத்தால் குறைவடைந்தது.

ஏற்றுமதி செய்யப்பட்ட பொதிகளின் விலைப்பட்டியல் அடிப்படையில் அமைந்துள்ள அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனத்தின் தரவுகளும், இரத் தினக்கற்கள் ஏற்றுமதி வருவாயில் வீழ்ச்சியையே காட்டுகின்றன, கூட்டுத் தாபனத்தின்படி, இரத்தினக்கற்கள் ஏற்றுமதிகளின் பெறுமதியானது (வெ.செ. உ..சா. தவிர) 1973ஆம் ஆண்டில் ரூ. 1528 இலட்சமாக விளங்கி, 1974ஆம் ஆண்டில் ரூ. 1326 இலட்சமாகக் குறைவடைந்தது. 1973ஆம் ஆண்டுடன் நோக்குமிடத்து வீழ்ச்சிப் பெறுமதி ரூ. 199 இலட்சம் அல்லது 13 சதவீத மாகும். கூட்டுத்தாபனத்தினுல் ஈட்டப்பெற்ற ஏற்றுமதி வருவாய்கள் 12.1 சதவீதமாக விளங்க, தனியார்துறைக்கூடாக செய்யப்பட்ட விற்பனவுகள் 87.9 சதவீதமாக விளங்கின. பெறுமதி அடிப்படையில் நோக்குமிடத்து, 1974ஆம் ஆண்டில் கூட்டுத்தாபனத்தினுல் ஈட்டப்பெற்ற ஏற்றுமதி வருவாய் களைப் பொறுத்தவரை ரூ. 101 இலட்சங்கள் அல்லது 38.7 சதவீத வீழ்ச்சி காணப்பட்டது. இதற்குமாருக, தனியார்துறையில் ரூ. 101 இலட்சம் அல் லது 8 சதவீதமாக வீழ்ச்சி காணப்பட்டது.

இரத்தினக்கற்களுக்கான ஏற்றுமதி வருவாய்கள் மரபு வழியற்ற ஒரு பொருளாகையினுல், வெ. செ. உ. சா. திட்டத்தின்கீழ் 65 சதவீதத்தைக் கொண்ட அதிகப்படி வருவாய்க்கு தகைமையுடையதாக விளங்கியது. வரித் தூண்டுதல்கள் மாத்திரமல்லாமல், இரத்தினக்கல் ஏற்றுமதியாளர்கள், க. ஏ. பெ. தேறிய ஏற்றுமதி வருவாயில் 25 சதவீதத்தினை மாற்றக்கூடிய ரூபாய் கணக்குகளில் வரவு வைத்திருப்பதற்கு அனுமதி பெற்றிருந்தனர். எனினும், 1974ஆம் ஆண்டு நவம்பர் 7ஆம் திகதி தொட்டு இரத்தினக்கற் களிலான வருவாயில் 20 சதவீதமே மாற்றக்கூடிய ரூபாய்க்கணக்கில் வரவு வைப்பதற்கு தகுதி பெற்றவையாகக் குறைக்கப்பட்டது.

அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனத்தின்படி, 1974ஆம் ஆண்டில் கொங் கொங் நாடே ஆகக் கூடுதலானளவு இரத்தினக்கற்கள் வாங்கும் நாடாக விளங்கியது. மொத்த ஏற்றுமதி வருவாயில், இது 32.1 சதவீதமாக அல்லது ரூ. 426 இலட்சமாகக் காணப்பட்டது. சுவிற்சலாந்தும், யப்பானும் இரண் டாவது, மூன்ருவது ஆகக்கூடுதலாகக் கொள்வனவு செய்த நாடுகளாக விளங்கி இவற்றிலிருந்து பெற்ற ஏற்றுமதி வருவாய்கள் முறையே ரூ, 276 இலட்ச மாகவும் (20.8 சதவீதம்) ரூ. 181 இலட்சமாகவும் (13.6 சதவீதம்) விளங் கின. நாடுகளின் முக்கியத்துவத்தின் அடிப்படையில் நோக்குமிடத்து ஐ அ.

ரூ. 79 இலட்சம், பிரான்சு ரூ. 78 இலட்சம், சீனு ரூ. 74 இலட்சம், மேற்கு சேர்மனி ரூ. 50 இலட்சம், ஐ. இ. ரூ 40 இலட்சம், சிங்கப்பூர் ரூ. 34 இலட்சம் கொள்வனவு செய்த நாடுகளாக விளங்கின.

அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனத்தின் உள்நாட்டு வியாபாரத்தைப் பொறுத்தவரை, இக்கூட்டுத்தாபனத்திஞல் செய்யப்பட்ட மொத்த இரத்தினக்கற் கொள்வனவுகளின் பெறுமதி, இவ்வாண்டில் ரூ. 129 இலட்சமாக விளங்க, 1973ஆம் ஆண்டில் ரூ. 1077 இலட்சமாக விளங்கியது. இரத்தினக் கற்கள் அகழ்வதற்கான அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கை, 1972ஆம் ஆண்டில் 1,657 ஆகவும் 1973ஆம் ஆண்டில் 2,547 ஆகவும் 1974ஆம் ஆண்டில் 3,027 ஆகவும் அதிகரித்தது. ஆஞல் இரத்தினக்கற்கள் வர்த்தகம், இரத்தினக்கற்கள் நுட்பமாக வெட்டுதல் என்பவற்றுக்கு வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரங்கள் முறையே 2,335 இலிருந்து 1,737 ஆகவும் 475 இலிருந்து 393 ஆகவும் குறைவடைந்தன. நில ஏலவிற்பனே மூலம் அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனம் 1974ஆம் ஆண்டில் ரூ. 17 இலட்சம் வருவாய் ஈட்ட 1973 இல் இதற்கு மாருக ரூ. 18 இலட்சத்தைப் பெற்றது. ஏலமிடப்பட்ட நிலத்துண்டுகளின் எண்ணிக்கை 1973ஆம் ஆண்டில் 667 ஆக விளங்க, 1974ஆம் ஆண்டில் 465 ஆக இருந்தது.

அட்டவணே II (ஓ) 18

## இரத்தினக் கற்களின் ஏற்றுமதி

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | சுங்கம் | | | அரச இரத்தினக் கற் கூட்டுத்தாபனம் 1973 | | | அரச இரத்தினக்கற் கூட்டுத்தாபனம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1972 | 1973 | 1974 | இரத்தினக் கற் கூட்டுத் தாபனம் | தனியார் துறை | மொத்தம் | இரத்தினக் கற் கூட்டுத் தாபனம் | தனியார் துறை | மொத்தம் |
| சனவரி | 0.2 | 3.9 | 1.9 | 2.2 | 3.1 | 5.4 | 0.1 | 3.9 | 0.4 |
| பெப்புருவரி | 0.1 | 2.7 | 5.5 | 1.1 | 3.8 | 4.9 | 0.2 | 6.8 | 7.0 |
| மாச்சு | 0.1 | 6.2 | 9.5 | 1.2 | 7.7 | 8.9 | 2.1 | 18.1 | 20.2 |
| ஏப்பிறல் | 0.1 | 16.7 | 15.0 | 1.9 | 15.1 | 17.1 | 7.6 | 13.7 | 21.3 |
| மே | 0.6 | 14.5 | 15.7 | 6.4 | 10.2 | 16.7 | 0.3 | 9.5 | 9.8 |
| யூன் | 1.6 | 18.1 | 7.7 | 1.9 | 15.4 | 17.3 | 1.4 | 8.2 | 9.6 |
| யூலே | 0.3 | 14.3 | 5.6 | 3.5 | 13.8 | 17.3 | 1.6 | 16.9 | 18.6 |
| ஒகத்து | 1.6 | 16.6 | 7.9 | 0.6 | 16.5 | 17.1 | 1.1 | 10.4 | 11.4 |
| செத்தெம்பர் | 2.0 | 13.6 | 14.9 | 2.1 | 15.6 | 17.7 | 0.3 | 9.2 | 9.5 |
| ஒற்ரேபர் | 1.3 | 17.8 | 14.5 | 2.2 | 14.0 | 16.2 | 0.9 | 6.4 | 7.3 |
| நவெம்பர் | 1.8 | 12.9 | 6.8 | 2.5 | 8.3 | 10.8 | 0.1 | 8.5 | 8.6 |
| திசெம்பர் | 2.8 | 3.5 | 3.7 | 0.2 | 3.2 | 3.5 | 0.3 | 5.0 | 5.3 |
| ஆண்டு தோறும் | 12.3 | 140.8 | 108.7 | 26.1 | 126.7 | 152.8 | 16.0 | 116.6 | 132.6 |

மூலம்: இலங்கை சுங்கம்,
அரசாங்க இரத்தினக் கற் கூட்டுத்தாபனம்.

### 3. இறக்குமதிகள்

மிகவும் கட்டுப்பாடு மிகுந்த இறக்குமதித் திட்டத்தின்மீது இலங்கை தொழிற் பட்டிருந்தது உண்மையெனினும் சுங்கத்தரவுகளின்படி 1974இன் இறக்குமதிகளின் பெறுமதி ரூ. 45,540 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டுக்கு மேலான ரு 18,390 இலட்சம் அல்லது 67.7 சதவீத ஒரு உயர்ச்சியினையும் கொண்டு விளங்குகிறது. உலகெங்கிலும் நிலவிய பணவீக்கத்தினுல் இறக்குமதிகளின் பெறுமதி பெருமளவில் உயர்ந்திருக்க, 1974ல் இறக்குமதிகளின் மொத்த அளவு 29 சதவீதத்தால் வீழ்ந்தது. 1965 முதலிருந்து நிலையாக சீர்குலைந்த வர்த்தக மாற்றுவீதம் 1973ல் 13 சதவீதத்தாலும், 1974ல் 11 சதவீதத்தாலும் வீழ்ச்சியுற்றது.

#### (அ) இறக்குமதிகள் – சீராக்கப்பட்ட சுங்கத்தரவுகள்

முன்பு விளக்கியபடி சுங்கத்தின் இறக்குமதி பற்றிய தரவுகள், உணவு ஆணையாளராலும், பெற்ரேலியக்கூட்டுத்தாபனத்தாலும் சீராக்கப்படுகின்றன. அட்டவணை 11 (ஒ) 19ல் கொடுக்கப்பட்டுள்ள சீராக்கப்பட்ட சுங்கத்தரவுகள் 1974ல் ரூ 19,480 இலட்சத்தால் ரூ. 47110 இலட்ச வரையான இறக்குமதிகளது பெறுமதியின் ஒன்றினைக் காட்டுகின்றது.

**அட்டவணை II (ஒ) 19**

**சுங்கத் தரவுகள் — சீராக்கப்பட்டவை**

| | தொகை பத்து இலட்சம ரூபாய்களில் | | | |
|---|---|---|---|---|
| | 1973 | மொத்தத்தின் சதவீதப் பங்கு | 1974 | மொத்தத்தின் சதவீதப் பங்கு |
| 1. நுகர்வுப் பொருட்கள் .. ... | 1,500.1 | 54.3 | 2,338.6 | 49.7 |
| அவற்றில் | | | | |
| அ. உணவும் குடிபானமும் ... ... | 1,317.2 | 47.7 | 2,150.3 | 45.7 |
| (i) அரிசி ... ... | 321.9 | 11.7 | 797.8 | 17.0 |
| (ii) கோதுமை மா ... ... | 458.2 | 16.6 | 938.4 | 19.9 |
| (iii) சீனி ... ... ... | 333.8 | 12.1 | 230.4 | 4.9 |
| ஆ, புடவைகள் ... | 55.3 | 2.0 | 59.2 | 1.3 |
| இ. ஏனைய நுகர்வுப் பொருட்கள் ... | 120.4 | 4.4 | 129.2 | 2.7 |
| 2. இடைநிலைப் பொருட்கள் ... ... | 785.6 | 28.4 | 1,875.8 | 39.8 |
| 3. முதலீட்டுப் பொருட்கள் ... ... | 452.0 | 16.4 | 457.1 | 9.7 |
| 4. பகுக்கப்படாத இறக்குமதிகள்... ... | 25.0 | 0.9 | 39.2 | 0.8 |
| 5. மொத்த இறக்குமதிகள் ... ... | 2,762.7 | 100.0 | 4,710.7 | 100.0 |

மூலம்: இலங்கைச் சுங்கம், பெற்ரேலியக் கூட்டுத்தாபனம், உணவு ஆணையாளர்.

மொத்த இறக்குமதியில், நுகர்வுப் பொருட்களின் பங்கானது, சீராக்கஞ் செய்யப்பட்ட தரவுகளின்படி, 1973ம் ஆண்டில் 54 சதவீதமாக இருந்து 1974ம் ஆண்டில் 49 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. மொத்தத் தரவுகளின் அப்படையில் நோக்குமிடத்து, நுகர்வுப்பொருட்களின் பெறுமதி, ரூ. 15,000 இலட்சமாக இருந்து ரூ. 23,390 இலட்சமாக அல்லது 56 சதவீதத்தால்

அதிகரித்தது. நடுத்தரப் பொருட்களின் இறக்குமதிப் பெறுமதியானது, 1973ம் ஆண்டில் ரூ. 18,760 இலட்சமாக அதிகரித்தது. அதாவது இதன்பங்கு 28 சதவீதத்திலிருந்து 40 சதவீதமாக அதிகரித்தது இதற்கு மாறாக மொத்த இறக்குமதியில், முதலீட்டுப்பொருட்களின் சதவீதம் 1973ல் 16 சதவீதமாக இருந்து 10 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. அதே நேரத்தில், முதலீட்டுப் பொருட்களின் மொத்தப் பெறுமதி நிலையாக ஏறக்குறைய ரூ. 4,590 இலட்சமாகக் காணப்பட்டது.

உணவு ஆணையாளரின்படி, அட்டவணை 11 (ஓ) 20ல் காட்டப்பட்டது போல சீனி, மா, அரிசி என்பவற்றின் மொத்தப் பெறுமதி 1973ஆம் ஆண்டில் ரூ. 11,140 இலட்சமாக விளங்கி 1974ம் ஆண்டில் ரூ. 19,660 இலட்சமாக அதாவது ரூ, 8,520 இலட்சத்தால் அல்லது 76.5 சதவீதத்தால் அதிகரித்தது. 1973ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1974ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியானது, 297 ஆயிரம் தொன்களாக விளங்கி, 41 ஆயிரம் தொன்களால் குறைந்து காணப்பட்ட பொழுதிலும், இப்பொருளின் இறக்குமதிப் பெறுமதி, 1973ஆம் ஆண்டில் ரூ. 3220 இலட்சமாக இருந்து 1974ஆம் ஆண்டில் ரூ. 7980 இலட்சமாக அதாவது ரூ. 4,760 இலட்சத்தால் அல்லது 147.8 சதவீதத்தால் அதிகரித்தது. இதற்கு முக்கியமாக ஒரு தொன்னுக்கான கொள்முதல் கப்பற் செலவு அடங்கிய செலவு அடங்கிய விலை 181.8 சதவீதத்தால் அதிகரித்த தமையே காரணமாகும்.

உணவு ஆணையாளரின் தரவுகளின்படி, மா இறக்குமதியானது, 1973ம் ஆண்டில் 365 ஆயிரம் தொன்களாக இருந்து 1974ம் ஆண்டில் 442 ஆயிரம் தொன்களாக அதிகரித்தது. மாவிலான செலவீடு ரூ. 4589 இலட்சமாக இருந்து ரூ. 9,380 இலட்சமாக அதிகரித்தது. வேறுசொற்களில் கூறின் இறக்குமதி அளவு 21.5 சதவீதத்தால் அதிகரிக்கையில் செலவு 126.6 சதவீதத்தால் அதிகரித்தது. மா இறக்குமதிப் பெறுமதியில் அதிகரிப்பு ஏற்படுவதற்குப் பெருமளவு ஒரு தொன்னுக்கான கொள்முதல், கப்பற் செலவு விலை ரூ. 870 ஆல் அல்லது 69.4 சதவீதத்தால் அதிகரித்தமையும், மாவின் இறக்குமதி அளவு அதிகரித்தமையும் ஓரளவுக்குக் காரணமாகும்.

1974ஆம் ஆண்டில் சீனி இறக்குமதியின் பெறுமதியும், அளவும் குறிப்பிடத் தக்களவால் வீழ்ச்சியடைந்தது. அளவு 148 ஆயிரம் தொன்கள் அல்லது 77.9 சதவீதத்தாலும், பெறுமதி ரூ. 1040 இலட்சம் அல்லது 31.1 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தது. எனவே உணவு ஆணையாளரின் தரவுகன்படி, சீனி இறக்குமதியானது, 1974ஆம் ஆண்டில் 42 ஆயிரம் தொன்களாக விளங்கி, ரூ. 2300 இலட்சம் மட்டுமே செலவாகியது. உலகச் சந்தையில் சீனிவிலை மிகப் பெருமளவால் அதிகரித்தபோதிலும் நிர்வாக அமைப்பு சீனி இறக்குமதியிலான மொத்தச் செலவீட்டில் சேமிப்பினை ஏற்படுத்துவதற்கு இறக்குமதி அளவு பெருமளவால் குறைக்கப்பட்டமையே காரணமாகும்.

## அட்டவணை II (ஒ) 20

### அரிசி, கோதுமை மா, சீனி, என்பனவற்றின் உண்மை இறக்குமதிகளும் சுங்கத் தரவுகளும்

| | உணவு ஆணையாளரின் தரவுகள் | | | | | சுங்கத் தரவுகள் (சுங்கப்பகுதியினரால் பதிவு செய்யப்பட்டபடி உணவு ஆணையாளராலும், ஏனையோராலும் இறக்குமதி செய்யப்பட்டது). | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1972 | 1973 | 1974 | மாற்றம் 1974/73 முழுவதும் | மாற்றம் 1974/73 % | 1972 | 1973 | 1974 | மாற்றம் 1974/73 முழுவதும் | மாற்றம் 1974/73 % |
| **அரிசி** | | | | | | | | | | |
| அளவு: ஆயிரம் தொன்களில் ... | 262 | 338 | 297 | —41 | — 12.1 | 294 | 335 | 293 | —42 | — 12.5 |
| பெறுமதி: ப இ. ரூபாய்களில் ... | 142 | 322 | 798 | +476 | + 147.8 | 161 | 270 | 720 | +450 | + 166.7 |
| கொ. க. விலை தொன்னொன்றுக்கு ரூபா. ... | 544.25 | 953.18 | 2685.82 | +1732.64 | + 181.8 | 547.27 | 807.47 | 2,461.40 | +1653.93 | + 204.8 |
| **கோதுமை மா** | | | | | | | | | | |
| அளவு: ஆயிரம் தொன்களில் ... | 324 | 365 | 442 | +77 | + 21.5 | 301 | 396 | 402 | +6 | + 1.5 |
| பெறுமதி: ப.இ. ரூபாய்களில் ... | 216 | 458 | 938 | +580 | + 126.6 | 193 | 453 | 857 | +404 | + 89.2 |
| கொ.க. விலை தொன்னொன்றுக்கு ரூபா. ... | 667.26 | 1,254.20 | 2124.04 | +869.84 | + 69.4 | 639.92 | 1,144.14 | 2131.66 | +987.52 | + 86.3 |
| **சீனி** | | | | | | | | | | |
| அளவு: ஆயிரம் தொகைகளில் ... | 214 | 190 | 42 | —148 | — 77.9 | 223 | 193 | 67 | —126 | — 65.3 |
| பெறுமதி: ப.இ. ரூபாய்களில் ... | 250 | 334 | 230 | —104 | — 31.1 | 248 | 321 | 190 | —131 | — 40.8 |
| கொ.க. விலை தொன்னொன்றுக்கு ரூபா. ... | 1,168.16 | 1,752.16 | 5,485.75 | +3733.59 | + 213.1 | 1,111.55 | 1,663.44 | 2846.88 | +1183.44 | + 71.1 |
| **அரிசி, கோதுமை மா, சீனி என்பவற்றின் மொத்தப் பெறுமதி ப. இ. ரூ.** ... | 608 | 1,114 | 1,966 | + 852 | + 76.5 | 602 | 1.044 | 1767 | + 723 | + 69.3 |

மூலங்கள்: உணவு ஆணையாளர் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்.

அட்டவணை II (ஓ) 21

## பண்டங்கள் அல்லது பண்டத் தொகுதிகளின்படியும், முக்கிய வகைகளின்படியுமான இறக்குமதிகள் — 1970 — 1974

| | பத்து இலட்சம் ரூபாய்களில் 1970 | 1971 | 1972 | 1973 | 1974 | மொத்த இறக்குமதிகளின் சதவீதம் 1970 | 1971 | 1972 | 1973 | 1974 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1. நுகர்வுப் பொருட்கள்*** ... ... ... | 1,282 | 1,113 | 1,069 | 1,424 | 2,138 | 55.4 | 56.0 | 51.8 | 52.5 | 47.0 |
| இவற்றில் | | | | | | | | | | |
| அ. உணவும், குடிவகையும்* ... ... ... | 1,057 | 895 | 917 | 1,248 | 1,950 | 45.7 | 45.0 | 44.4 | 45.9 | 42.8 |
| (i) அரிசி ... ... ... | 318 | 195 | 161 | 270 | 720 | 13.7 | 9.8 | 7.8 | 9.9 | 15.8 |
| (ii) கோதுமை மா ... ... ... | 260 | 206 | 193 | 453 | 857 | 11 2 | 10.4 | 9.4 | 16.7 | 18.8 |
| (iii) (அ) தூய்மையாக்கப்பட்ட சீனி ... ... | 170 | 243 | 248 | 321 | 190 | 7.3 | 12.2 | 12.0 | 11.8 | 4.2 |
| (ஆ) சீனி, ஏனைய (சர்க்கரை, பனங்கட்டி, கற்கண்டு) ... | 1 | 1 | 1 | ... | ... | ... | 0.1 | ... | ... | ... |
| (iv) பாலும், பாற்பொருட்களும் ... ... | 55 | 47 | 57 | 70 | 70 | 2.4 | 2.4 | 2.8 | 2.6 | 1.5 |
| (v) இறைச்சி, மீன், முட்டைகள் ... ... | 68 | 72 | 83 | 52 | 50 | 2.9 | 3.6 | 4.0 | 1.9 | 1.1 |
| இவற்றில் (அ) கருவாடு (மாசிக் கருவாடு தவிர இறுற் கருவாடு உட்பட) ... | 53 | 52 | 62 | 39 | 30 | 2.3 | 2.6 | 3.0 | 1.4 | 0.7 |
| (ஆ) மீன்களும், ஏனையவையும் ... | 15 | 19 | 20 | 13 | 20 | 0.6 | 1.0 | 1.0 | 0.5 | 0.4 |
| (vi) ஏனைய உணவு ... ... ... | 139 | 96 | 143 | 50 | 33 | 6.0 | 4.8 | 6.9 | 1.8 | 0.7 |
| (அ) பயறும், பருப்பு வகைகளும் ... | 63 | 45 | 98 | 31 | 7 | 2.7 | 2.3 | 4.7 | 1.1 | 0.2 |
| (ஆ) வெங்காயம்* ... ... | 33 | 10 | 3 | 3 | 2 | 1.4 | 0.5 | 0.1 | 0.1 | ... |
| (இ) மிளகாய் ... ... | 26 | 30 | 24 | 3 | — | 1.1 | 1.5 | 1.2 | 0.1 | — |
| (vii) குடிவகைகளும், தயாரிக்கப்பட்ட புகையிலையும் ... | 3 | 2 | 1 | 1 | 2 | 0.1 | 0.1 | ... | ... | ... |
| ஆ. புடவைகள் (உடைகள் உட்பட) ... ... | 124 | 103 | 48 | 55 | 59 | 5.3 | 5.2 | 2.3 | 2.0 | 1.3 |
| இ. ஏனைய நுகர்வுப் பொருட்கள் ... ... | 101 | 115 | 104 | 120 | 129 | 4.3 | 5.8 | 5.0 | 4.4 | 2.8 |
| இவற்றில் (i) மோட்டார் வண்டிகள் ... ... | 10 | 7 | 11 | 8 | 13 | 0.4 | 0.4 | 0.5 | 0.3 | 0.3 |
| (ii) கடிகாரங்களும், மணிக்கூடுகளும்.. ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | ... | .. |
| (iii) வானொலிப் பெட்டிகள் ... ... | 1 | 1 | 2 | 3 | 1 | ... | 0.1 | 0.1 | 0.1 | ... |
| (iv) றப்பர் ரயர்களும் ரியூப்புக்களும் ... ... | 11 | 11 | 5 | 10 | 11 | 0.5 | 0.6 | 0.2 | 0.4 | 0.2 |
| (v) மருந்துகளும், மருந்துப் பொருட்களும் ... | 29 | 34 | 41 | 36 | 44 | 1.5 | 1.7 | 2.0 | 1.3 | 1.0 |
| **2. நடுத்தரப் பொருட்கள்*** ... ... ... | 463 | 411 | 502 | 815 | 1,920 | 20.0 | 20.7 | 24.3 | 30.0 | 42.1 |
| இவற்றில் (i) உரம் ... ... ... | 81 | 59 | 63 | 111 | 221 | 3.5 | 3.0 | 3.1 | 4.1 | 4.9 |
| (ii) பெற்றோலிய உற்பத்திகள் ... ... | 59 | 26 | 38 | 295 | 905 | 2.5 | 1.3 | 1.8 | 10.9 | 19.9 |
| (iii) நிலக்கரி ... ... ... | 4 | 4 | 1 | 3 | 4 | 0.2 | 0.2 | ... | 0.1 | 0.1 |
| (iv) இரசாயனப் பொருட்களும், கலவைகளும் ... | 56 | 66 | 73 | 107 | 232 | 2.4 | 3.3 | 3.5 | 3.9 | 5.1 |
| (v) சாயப் பொருட்களும், தோல் பதனீட்டுப் பொருட்களும், வர்ணமூட்டும் பொருட்களும் ... | 10 | 11 | 14 | 12 | 22 | 0.4 | 0.6 | 0.7 | 0.4 | 0.5 |
| (vi) தேயிலைப் பெட்டிகளும், ஏனைய பெட்டிகளும் ... | 9 | 20 | 9 | 5 | 18 | 0.4 | 1.0 | 0.4 | 0.2 | 0.4 |
| (vii) தாளும், தாள் மட்டைகளும் ... ... | 45 | 48 | 42 | 40 | 65 | 1.9 | 2.4 | 3.1 | 1.5 | 1.4 |
| (viii) நெசவு நூலும், தையல் நூலும் ... ... | 41 | 40 | 61 | 21 | 65 | 1.8 | 2.0 | 3.0 | 0.8 | 1.4 |
| (ix) தயாரிக்கப்படாத புகையிலை ... ... | 3 | 4 | 1 | 3 | 10 | 0.1 | 0.2 | ... | 0.1 | 0.2 |
| (x) கோதுமையும் மசிலினும் (அரைப்பதற்கு) ... | 12 | 23 | 44 | 61 | 117 | 0.5 | 1.2 | 2.1 | 2.2 | 2.6 |
| **3. முதலீட்டுப் பொருட்கள்** ... ... ... | 546 | 419 | 438 | 452 | 457 | 23.5 | 21.1 | 21.2 | 16.6 | 10.0 |
| இவற்றில் (i) கட்டட ஆக்கப் பொருட்கள் ... ... | 119 | 118 | 121 | 107 | 147 | 5.1 | 5.9 | 5.9 | 3.9 | 3.2 |
| இவற்றில் (அ) சீமெந்து ... ... | 7 | 3 | 2 | 2 | ... | 0.3 | 0.2 | 0.1 | 0.1 | ... |
| (ii) போக்குவரத்துச் சாதனங்கள் ... ... | 126 | 76 | 107 | 95 | 91 | 5.4 | 3.8 | 5.2 | 3.5 | 2.0 |
| (iii) எந்திரங்களும், துணைக்கருவிகளும் ... ... | 276 | 200 | 181 | 224 | 186 | 11.9 | 10.1 | 8.8 | 8.3 | 4.1 |
| **4. மொத்தம் (விடயங்கள் 1, 2, 3)** ... ... ... | 2,291 | 1,943 | 2,009 | 2,690 | 4,515 | 99.0 | 97.8 | 97.3 | 99.1 | 99.1 |
| **5. பகுக்கப்படாத இறக்குமதிகள்** ... .. ... | 22 | 43 | 55 | 25 | 39 | 1.0 | 2.2 | 2.7 | 0.9 | 0.9 |
| **6. எல்லா இறக்குமதிகளினதும் மொத்தம்** ... ... | 2,313 | 1,986 | 2,064 | 2,715 | 4,554 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

* திருத்தப்பட்ட எண் தொகைகள்.

மூலம்: இலங்கைச் சுங்கம்.

### (ஆ) முக்கிய பகுப்புக்களின்படியான இறக்குமதிகள் - சுங்கத்தரவுகள்

சுங்கத் திரட்டில் காட்டப்பட்டதுபோல, அட்டவணை 11 (ஓ) 21 இறக்குமதி பற்றிய விபரங்களை, முக்கிய பிரிவுகள், பண்டங்கள் அல்லது பண்டங்களின் தொகுதிகள் அடிப்படையில் காட்டுகிற அதே வேளையில், அட்டவணை 11 (ஓ) 20 ஆனது அரிசி, மா, சீனி இறக்குமதிகள் பற்றிய சுங்கத்தரவுகளையும் தருகின்றது.

பன்னாட்டுப் பொருட் சந்தையில், விலைகளில் ஏற்பட்ட பெரிய அதிகரிப்பினால், இறக்குமதிகளின் உள்ளடக்கத்தில் மாற்றம் காணப்பட்டது. எண்ணெய், ஏனைய நடுத்தரப் பொருட்களின் இறக்குமதியிலான கூடுதலான செலவீட்டினால் மொத்த இறக்குமதியில் நடுத்தரப்பொருட்களின் பங்கு 1973ஆம் ஆண்டில் 30 சதவீதமாக இருந்து 1974ம் ஆண்டில் 42 சதவீதமாக அதிகரித்தது. இதன்காரணமாக நுகர்வுப் பொருட்களின் பங்கு, 1973ஆம் ஆண்டில் 53 சதவீதமாக இருந்து 1974ஆம் ஆண்டில் 47 சதவீதமாகக் குறைவடைந்தது. முதலீட்டுப் பொருட்கள், 17 சதமாக இருந்து 10 சதவீதமாகக் குறைவடைந்தது. மேலும் இறக்குமதி செய்யப்பட்ட நடுத்தரப் பொருட்களின் அளவு, 1973ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஓரளவு நிலையான மட்டத்தில் இருந்தது. அதே நேரத்தில் 1974ஆம் ஆண்டில், நடுத்தர முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி அளவுகள் கணிசமானளவால் வீழ்ச்சியடைந்தன.

#### i. நுகர்வுப் பொருட்கள்

சுங்கத்தரவுகளின்படி, நுகர்வுப் பொருட்களின் பெறுமதி 1973ஆம் ஆண்டில் ரூ. 14,240 இலட்சமாக விளங்கி 1974ஆம் ஆண்டில் ரூ. 21,380 இலட்சமாக உயர்வுற்று ரூ. 6,530 இலட்சம் அல்லது 46 சதவீதம் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. மொத்த இறக்குமதிப் பெறுமதியில் நுகர்வுப் பொருட்களின் பங்கு 1973ஆம் ஆண்டில் 52.5 சதவீதமாக இருந்து, 1974ஆம் ஆண்டில் 47.0 சதவீதமாகக் காணப்பட்டது. நுகர்வுப் பொருட்களுக்கான ரூ. 21,380 இலட்சம் கொண்ட இறக்குமதிப் பெறுமதியில், அரிசி, மா, சீனி என்பவற்றின் பங்கு 1974ஆம் ஆண்டில் ரூ. 17,670 இலட்சம் அல்லது 38.8 சதவீதமாகும். 1974ஆம் ஆண்டில் அரிசி இறக்குமதி 12.5 சதவீதத்தாலும் சீனி 65.3 சதவீதத்தாலும் குறைக்கப்பட்டது. பெரிதளவுக்குக் கட்டுப்படுத்தப்பட்ட ஏனைய உணவு இறக்குமதியில் தானியங்கள், பருப்பு வகைகள் உள்ளடங்கும். மிளகாய் இறக்குமதிப் செய்யப்படவில்லை. கருவாட்டு இறக்குமதிகளும் வீழ்ச்சியடைந்தன.

##### அரிசி

1974ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியின் அளவு 293 ஆயிரம் தொன்களாக விளங்கி, 1973ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து 42 ஆயிரம் தொன்களால் அல்லது 12.5 சதவீதத்தால் குறைந்து காணப்பட்டது. பங்கீட்டு முறையின் கீழ் குறைந்தளவு அரிசி வழங்கியமையே இதற்கு ஓரளவு காரணமாகும். பங்கீட்டில் வழங்கப்பட்ட அரிசியின் அளவு 1973ஆம் ஆண்டில் 675,370 தொன்களாக விளங்கி 1974ஆம் ஆண்டில் 550,268 தொன்களாகக் குறைவடைந்தது.

அரிசிக்கான பன்னுட்டு விலைகள் புதிய முறையில் அதிகரித்தமையால், அரிசி இறக்குமதி குறைந்தபோதிலும், செலவீட்டில் ஒருவிதமான சேமிப் பினையும் ஏற்படுத்தவில்லை. உதாரணமாக, கொள்முதல் கப்பற்செலவு 1973ஆம் ஆண்டில் ஒரு தொன்னுக்கான அரிசி விலை ரூ. 807 ஆக இருந்து, 1974ஆம் ஆண்டில் ரூ. 2,461 ஆக உயர்வடைந்தது. இது ஒரு தொன்னுக்கு, ரூ. 1,654 அல்லது 205 சதவீத அதிகரிப்பாகும். 1972ஆம் ஆண்டில் கொள் முதல், கப்பற்சேலவு, ஒரு தொன்னுக்கான விலை ரூ. 547ஆகும். இதன் விளைவாக, அரிசி இறக்குமதியிலான செலவீடு 1972ஆம் ஆண்டில் ரூ. 1,610 இலட்சமாகவும் 1973ஆம் ஆண்டிவ் ரூ. 2,700 இலட்சமாகவும், 1974ஆம் ஆண்டில் ரூ. 7,200 இலட்சமாகவும் அதிகரித்தது.

**மா**

1974ஆம் ஆண்டில் மா இறக்குமதி 6 ஆயிரம் தொன்களால் (1.5 சத வீதத்தால்) அதிகரித்தது. ஆனல் கொள்வனவு கப்பற்கூலி அடங்கிய விலை 1973ஆம் ஆண்டில் தொன்னுக்கு ரூ. 1,144 ஆக விளங்கி, 1974ஆம் ஆண்டில் ஒரு தொன்னுக்கு ரூ. 2,132 ஆக (86 சதவீதம்) அதிகரித்தமையினுல், 1973ஆம் ஆண்டில், செலவீடு ரூ. 4,530 இலடசமாக விளங்கி, 1974ஆம் ஆண்டில் ரூ. 8,570இலட்சத்தால் அதாவது ஏறக்குறைய 90 சதவீதத்தால் அதிகரித்தது.

1974ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட மாவின் அளவு அதிகரித்த போதிலும். பங்கீட்டில் வழங்கப்பட்ட மாவின் அளவைக் குறைத்தமையினுலும், மேலும் விலை இருத்தல் ஒன்றுக்கு 70 சதவீதத்திலிருந்து ரூ. 1.10 ஆக 1974ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதத்தில் அதிகரிக்கப்பட்டமையினுலும், 1974ஆம் ஆண்டில் மாவின் நுகர்வளவு 33,912 தொன்களால் குறைவடைந்து, 416,289 தொன் களாக விளங்கியது. 1973ஆம் ஆண்டில் மாவானது பங்கீட்டு முறையில் வழங்கப்பட்ட ஒரு உணவுப் பொருளாக இருக்கவில்லை. எனவே, வெளிச் சந்தையிலான விற்பனை 450,201 தொன்களாக விளங்கியது. இவ்வாறு. மா இறக்குமதி அளவு அதிகரித்தமையும், நுகர்வில் வீழ்ச்சியடைந்தமையும் உணவு ஆணையாளரின் இருப்புக்கள் அதிகரித்தமையிலிருந்து எடுத்துக்காட்டப் படலாம். இவ்விருப்புக்கள் 1973ஆம் ஆண்டுறுதியில் 16,000 தொன்களாக விளங்க 1974ஆம் ஆண்டிறுதியில் 84,000 தொன்களாக விளங்கின.

**சீனி**

சீனியைப்பொறுத்தவரையில், இறக்குமதி செய்யப்பட்ட அளவு 1973ஆம் ஆண்டில் 193 ஆயிரம் தொன்களாக விளங்கி, 1974ஆம் ஆண்டில் 67 ஆயிரம் தொன்களாக வீழ்ச்சியுற்று முன்னைய ஆண்டிலும் 126 ஆயிரம் தொன்கள் அல்லது 65 சதவீதம் குறைவுற்றுக் காணப்பட்டது, இவ்வாறுகச் சீனி இறக்கு மதியிலான செலவு, 1973ஆம் ஆண்டில் ரூ. 3,210 இலட்சமாக விளங்கி, 1974ஆம் ஆண்டில் ரூ. 1,900 இலட்சமாகக் குறைவடைந்தது.

1974ஆம் ஆண்டில் சீனி நுகர்வில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்கு, 1974ஆம் ஆண்டு மாச்சு மாதத்தில் பங்கீட்டில் வழங்கப்படாத சீனியின் விலை அதிகரித்தமையும், 1974ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதத்தில் பங்கீட்டில் வழங்கப்பட்ட சீனியிலும், பங்கீட்டில் இல்லாத சீனியிலும் மெருமளவு

குறைப்பு ஏற்படுத்தப்பட்டமையும் காரணமாகும். இத்தகைய கட்டுப்பாட்டு முறைகளில், பங்கீட்டின் கீழ் வழங்கப்பட்ட சீனியின் அளவு 1973ஆம் ஆண்டில் 66,440 தொன்களாக விளங்கி, 1974ஆம் ஆண்டில் 57,077 தொன்களாக வீழ்ச்சியடைந்தது. மேலும் பங்கீட்டிலல்லாத சீனியின் அளவு 1973ஆம் ஆண்டில் 128,785 தொன்களாக விளங்கி, 1974ஆம் ஆண்டில் 38,223 தொன்களாக வீழ்ச்சியடைந்தது.

ii. நடுத்தரப் பொருட்கள்

முக்கிய இறக்குமதிப் பகுப்புக்களில் பெறுமதி அடிப்படையில் நடுத்தரப் பொருட்கள் கூடிய அதிகரிப்பினைப் பதிவு செய்தன. இதற்குப் பெருமளவு, இப்பிரிவில் ஒன்முன பெற்ருேலியப் பொருட்களின் இறக்குமதிப் பெறுமதி 1974ஆம் ஆண்டில் 3 மடங்கிற்கு மேலாக அதிகரித்தமை காரணமாகும். மேலும், ஏனைய நடுத்தரப்பொருட்களும் 1974ஆம் ஆண்டில் அதிகரித்த விலைகள் காரணமாகக் கூடிய பெறுமதிகளைக் காட்டின. மேலும், 1973ஆம் ஆண்டிற்கும் 1974ஆம் ஆண்டிற்கும் இடையில் இரசாயனமும் அவை சார்ந்த பொருட்களும் உரம், கோதுமை, சோளம் என்பவற்றின் பெறுமதிகளும் ஏறக்குறைய இரண்டு மடங்காக அதிகரித்தன.

iii. முதலீட்டுப் பொருட்கள்

1974ஆம் ஆண்டில், முதலீட்டுப் பொருட்களின் பெறுமதி எல்லையளவால் அதிகரித்தது. இதன்பங்கு. மொத்தப்பெறுமதியில் 1973ஆம் ஆண்டில் 17 சதவீதமாக இருந்து 1974ஆம் ஆண்டில் 10 சதவீதமாகக் கணிசமானளவால் வீழ்ச்சியடைந்தது. 1973ஆம் ஆண்டு வரை வீழ்ச்சியடைந்துவந்த கட்டடப் பொருட்களின் இறக்குமதிப் பெறுமதியானது, அதிகளவு உயர்வான விலைகளால் 1974ஆம் ஆண்டில் கணிசமானளவால் உயர்வடைந்தது. கட்டடப்பொருட்களுக்கான துணைப்பிரிவில். சீமெந்தின் உள்நாட்டு உற்பத்தி 1973ஆம் ஆண்டில் 415,000 தொன்களாக விளங்கி 1974ஆம் ஆண்டில் 466,000 தொன்களாக அதிகரித்தமையால், சீமெந்து இறக்குமதி மிகச்சிறியளவாகக் காணப்பட்டது. இலங்கை மத்திய வங்கியின் இறக்குமதி அளவுக் குறிகாட்டி (100 = 100) யின் படி அளவிட்டதற்கிணங்க, இறக்குமதி செய்யப்பட்ட எல்லா முதலீட்டுப் பொருட்களின் அளவும் 40 சதவீதத்தால் (1973ஆம் ஆண்டில் 84 இலிருந்து 1974இல் 50ஆக) வீழ்ச்சியுற்றது.

4. பெற்ருேலியப் பொருட்கள்

1973ஆம் ஆண்டு முடிவில் எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட பெரிதளவு உயர்வினல், இலங்கை, மசகெண்ணெ, ஏனைய பெற்ருேலியப் பொருட்கள் என்பவற்றின் இறக்குமதிக்கு கணிசமானளவ வெளிநாட்டுச் செலாவணியைச் செலவழிக்கவேண்டி ஏற்பட்டது. உதாரணமாக, மசகெண்ணெ கனத்த எண்ணெய், சேர்க்கப்படும் எண்ணெய், ஏனைய பெற்ருேலியப் பொருட்கள் என்பவற்றின் விலைகள் 1973ஆம் ஆண்டில் ரூ. 2,968 இலட்சமாக விளங்கி 1974ஆம் ஆண்டில் ரூ. 9,203 இலட்சமாக அதிகரித்து ரூ. 6235 இலட்சம் அல்லது 210 சதவீதம் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. மசகெண்ணெ, ஏனைய பெற்ருேலியப் பொருட்கள் என்பவற்றின் இறக்குமதி, இலங்கையின் மொத்த இறக்குமதியில் 1973ஆம் ஆண்டில் 10 9 சதவீதமாக இருந்து 1974ஆம் ஆண்டில் 20 சதவீதமாக உயர்வடைந்தது.

முக்கியமான இறக்குமதிப் பொருளான மசகெண்ணே 1973ஆம் ஆண்டில் ரூ. 2650 இலட்சமாக விளங்கி 1974ல் ரூ 8614 இலட்சமாக உயர்வடைந்தது. இறக்குமதிப் பெறுமதியில் ஏற்பட்ட பெரிய அதிகரிப்பு, 1974ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட குறைந்த அளவுடன் ஒப்பிடப்பிடல் வேண்டும். 1973ல் இலங்கை மசகெண்ணேயின் இறக்குமதிகள் 1,753,233 மெற்றிக் தொன்களாக அமைய 1974ல் இவை 1502,367 மெற்றிக் தொன்களாக வீழ்ச்சியடைந்தன. மசகெண்ணே, மொத்தப் பெற்ருேலிய உற்பத்தி இறக்குமதிகளின் சதவீதமாகப் பார்க்கையில் 1972ல் 89.5 சதவீதமாகவும் 1974ல் 93 5 சதவீதமாகவும் விளங்கியது.

மசகெண்ணேயைத் தவிர, அடுத்து குறிப்பிடத்தக்க இறக்குமதி விடயம் சனத்த எண்ணேயாகும். இது 1974ல் ரூ. 204 இலட்சத்திற்கு வகை கூறிய 1973இல் ரூ. 139 இலட்சத்திற்கு 1974ல் ரூ. 204 இலட்சத்திற்கு வகை கூறியது. மண்ணெண்ணே பெரும்பாலும் செப்பஞ் செய் சாலேயில் உற்பத்தியாக்கப் பட்டாலும் முன்னேய ஆண்டினேப்போன்று 1974ல் ரூ. 85 இலட்சம் பெறுமதி கொண்ட சிறு தொகையான 9809 மெற்றிக் தொன்கள் இறக்குமதி செய்யப் பட்டன. கரைநீர் மங்கள், உராய்வு எண்ணெய்கள், எண்ணெய்ப் பசைகள் ஆகியவற்றின் இறக்குமதிகள் முறையே ரூ. 49 இலட்சம், ரூ. 34 இலட்சம் ரூ 27 இலட்சமாக அமைந்தன. வேறு குறிப்பிடத்தக்க விடயம் ரூ. 37 இலட்சம் இறக்குமதி பெறுமதியைப் பதிவுசெய்த வேளாண்மை இரசாயனங்களாகும். வாயு எண்ணெயின் இறக்குமதிகள் ரூ. 70 இலட்சத்திற்கு வகை கூற வெள்ளே எண்ணெய், பதனிடல் எண்ணெய், பெற்ருேலியம், அஸ்பால்று, மெழுகுகள் ஒட்டிலெக்ஸ் என்பனவற்றின் இறக்குமதிகள் பெருமளவாக அமையவில்லே.

இலங்கை 1974ல் செப்பஞ் செய்சாலேக்குப் பயன்படுத்திய மசகெண்ணே 14.3 இலட்ச மெற்றிக் தொன்களாக, 1973ல் பயன்படுத்தப்பட்ட அளவு 16.5 இலட்ச மெற்றிக் தொன்களாகும். செப்பஞ் செய்சாலேக்கு வெளியே விற்கப்பட்ட உற்பத்திப் பொருட்களின் பெறுமதி 1973ல் ரூ 2632 இலட்சத் திலிருந்து 1974ல் ரூ. 9247 இலட்சத்திற்கு உயர, கலக்கும் பொறித் தொகுதியில் உராய்வு எண்ணெயின் உற்பத்தி ரூ. 220 இலட்சத்திலிருந்து ரூ. 489 இலட்சமாக உயர்வுற்றது. மெழுகுதிரிப் பெட்டிகளின் உற்பத்தி ரூ. 18 இலட்சத்திலிருந்து ரூ. 14 இலட்சத்திற்கு வீழ்ச்சியுற்றது.

மசகெண்ணேயைச் செப்பஞ்செய்வதே இலங்கையில் நடாத்தப்படும் மிக இன்றியமையாத உற்பத்திச் செய்முறையாகும். உயர்ரக பெற்ருேல், சாதாரண பெற்ருேல் என்பவற்றின் உற்பத்தி முறையே 1973ன் 68,000 மெற்றிக் தொன்களிலிருந்து 1974ல் 57,924 மெற்றிக் தொன்களிற்கும் 51,000 மெற்றிக் தொன்களிலிருந்து 39,563 மெற்றிக் தொன்களிற்கு வீழ்ச்சியுற்ருலும், இவற்றின் தொழிற்சாலேக்கு வெளியே விற்கப்படும் பெறுமதிகள் முறையே ரூ. 156 இலட்சத்திலிருந்து ரூ. 489 இலட்சத்திற்கும், ரூ. 104 இலட்சத்திலிருந்து ரூ. 306 இலட்சத்திற்கும் உயர்வடைந்தன. உற்பத்தி செய்யப்பட்ட அளவில் வீழ்ச்சி ஏற்பட்டாலும் தன்னியக்கத் தீசல், கப்பல் தீசெல் என்பனவற்றின் பெறுமதி முறையே ரூ 538 இலட்சத்திலிருந்து ரூ 1876 இலட்சத்திற்கும் ரூ. 178 இலட்சத்திலிருந்து ரூ. 590 இலட்சத்திற்கும் உயர்வடைந்தது. மண்ணெண்ணேயின் உற்பத்தி 1973ன் 251000 மெற்றிக் தொன்களிலிருந்து 1974ல் 202820 மெற்றிக் தொன்களிற்கு வீழ்ச்சியடைந்ததாலும் பெறுமதி, ரூ. 586 இலட்சத்திலிருந்து ரூ. 1,517 இலட்சத்திற்கு உயர்வடைந்தது.

நப்தாவினதும், நிலக்கிலினதும் உற்பத்தி முறையே 128,000 மெற்றிக் தொன்களிலிருந்து 103,615 மெற்றிக் தொன்களிற்கும் 31,000 மெற்றிக் தொன்களிலிருந்து 23,892 மெற்றிக் தொன்களிற்கும் வீழ்ச்சியடைந்தாலும் இவற்றின் தொழிற்சாலைக்கு வெளியே விற்கப்படும் பொருட்களின் பெறுமதிகள் மூறையே ரூ. 123 இலட்சத்திலிருந்து ரூ. 896 இலட்சத்திற்கும், ரூ. 73 இலட்சத்திலிருந்து ரூ. 174 இலட்சத்திற்கும் உயர்வடைந்தன. உலை எண்ணெயின் உற்பத்தி 1973இல் 673,000 மெற்றிக் தொன்களிலிருந்து 1974ல் 595,200 மெற்றிக் தொன்களிற்கு வீழ்ச்சியடைய. இவற்றின் பெறுமதி ரு 586 இலட்சத்திலிருந்து ரு. 1517 இலட்சத்திற்கு உயர்வடைந்தது. 1974ல் வான்போக்குவரத்து எரிபொருளினதும் கரைநீர் மங்களினதும் உற்பத்தியும் பெறுமானமும் உயர்வடைவ திரவப்பெற்றோலிய வாயுவின் உற்பத்தியும் பெறுமானமும் வீழ்ச்சியடைந்தது.

எண்ணெய் விலையின் உயர்ச்சி (அ) பெரும்பாலும் எல்லாப் பெற்றோலிய உற்பத்திகள் நுகர்ச்சியில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சிக்கும் (ஆ) இவ்வுற்பத்திகள் விற்பனைப் பெறுமதியில் குறிப்பிடத்தக்களவு உயர்ச்சிக்கும் காரணமாயிற்று. ஏற்றுமதிகள் தவிர்ந்த பெற்றோலியப் பொருட்களின் விற்பனைப் பெறுமதி 1974ன் ரு. 802,281 இலிருந்து 1974ல் ரு. 1.195,012ஆக உயர்வடைந்தது.

உயர்ரகப் பெற்றோல், சாதாரண பெற்றோல் என்பனவற்றின் விற்பனைகள் முறையே 1973இன் 81,486 மெற்றிக் தொன்களிலிருந்தும் 64,416 மெற்றிக் தொன்களிலிருந்தும் 1974இல் 48,741 மெற்றிக் தொன்களிற்கும் 30,549 மெற்றிக் தொன்களிற்கும் வீழ்ச்சியடைந்தன. வேறு சொற்களில் விளம்பின் 1974இல் உயர்ரகப் பெற்றோலின பயன்பாடு 20.9 சதவீதத்தாலும், சாதாரண பெற்றோலின் பயன்பாடு 37.4 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தது. எனினும் அவற்றின் விற்பனைப் பெறுமதிகள் முறையே ரூ. 138.515 இலிருந்து ரூ. 2,23,537 ஆகவும் ரூ. 80,618 இலிருந்து ரூ. 1,06,580 ஆகவும் உயர்வடைந்தன. 1973இல் விற்பனைசெய்யப்பட்ட தன்னியக்க, பார, கப்பல் டீசல் முறையே 2,79,716 68,198, 74,059 மெற்றிக் தொன்களிலிருந்து 974இல் 2,43,667, 44,059, 50.319 மெற்றிக் தொன்களிற்கு வீழ்ச்சியடைந்தன. மண்ணெண்ணெயின் விற்பனைகள் 1973இல் 2,69,571 மெற்றிக் தொன்களிலிருந்து 1974இல் 2,12 757 மெற்றிக் தொன்களிற்கு வீழ்ச்சியடைந்து 21.0 சதவீதமான வீழ்ச்சியொன்றினைக் காட்டினும், இதன் பெறுமதி ரூ. 1,09,482 இலிருந்து ரு. 2,05,622 ஆக உயர்வடைந்தது. 1974இல் விற்பனை செய்யப்பட்ட உராய்வு எண்ணெய்கள் (இ. க.) 20.0 சதவீதத்தாலும் பசை 6.9 சதவீதத்தாலும், மெழுகுகள் 10.8 சதவீதத்தாலும், உலை எண்ணெய் 75.9 சதவீதத்தாலும், வேளாண்மை இரசாயனங்கள் 29.0 சதவீதத்தாலும் ஏனைய சிறப்பு உற்பத்திகள் (இ. க.) 17.5 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன.

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின்படி பெற்றோலிய ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமதி 1973இன் ரு, 1,344 இலட்சத்திலிருந்து 1974இல் ரூ 3,491 இலட்சத்திற்கு உயர்வடைந்து ரூ. 2,147 இலட்ச அல்லது 159.7 சதவீத உயர்ச்சியினைக் கொண்டுவிளங்குகிறது. பெற்றோலிய ஏற்று

மதிகளில் கப்பல் எரிபொருளின் பெறுமதியே மிகவும் இன்றியமையாத பகுப் பாக விளங்குவதுடன் பெறுமதி 1973இன் ரூ. 937 இலட்சத்திலிருந்து 1974 இல் ரூ. 2,157 இலட்சத்திற்கு உயர்வடைந்தது. வான் எரிபொருளின் வருவாய் ரூ. 171 இலட்சத்திலிருந்து ரூ. 452 இலட்சத்திற்கு உயர்வடைந்தது.

ஏனைய பெற்றோலிய ஏற்றுமதிகளைப் பொறுத்தமட்டில் பெறுமதி 1973இன் ரூ. 236 இலட்சத்திலிருந்து 1974இல் ரூ. 882 இலட்சத்திற்கு உயர்வடைந்தது நப்தாவிலிருந்து பெறப்பட்ட ஏற்றுமதி வருவாய் முறையே ரூ. 173 இலட்சத்திலிருந்து ரூ. 815 இலட்சத்திற்கு உயர்வடைய, எரிபொருள் எண்ணெய் ஏற்றுமதிகளால் பெறப்பட்ட வருவாய் ரூ. 41 இலட்சத்திலிருந்து ரூ. 67 இலட்சமாக உயர்வடைந்தது. உயர்ரகப் பெற்றோல், மண்ணெண்ணெ, தன்னியக்க டீசல் என்பன சிறு அளவுகளில் ஏற்றுமதி செய்யப்பட்டன.

இலங்கைக்கு மசகெண்ணெ வழங்குவதில் சவூதி அரேபியாவே முதன்மை வழங்குநராக உள்ளது. மொத்த இறக்குமதியில் இது. ரூ. 4,317 இலட்சம் அல்லது 50.1 சதவீதம் பெறுமதிகொண்ட 770,663 மெற்றிக் தொன்களுக்கு (5,668,430 உருள் தொட்டிகள்) வகைகூறுகிறது. இரண்டாவது பெரும் வழங்குநரான ஈராக்கிலிருந்து இலங்கை 371,417 மெற்றிக் தொன்களை (அல்லது 2,754,789 உருள் தொட்டிகள்) ரூ. 2,251 இலட்சப் பெறுமதிக்கு இறக்குமதிசெய்தது. 1974இல் ஏனைய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மசகெண்ணெ 381,389 மெற்றிக் தொன்களாகவும் (அல்லது 2,806,006 உருள்தொட்டிகள்) இவற்றின் மொத்தப் பெறுமதி ரூ. 2,046 இலட்சமாகவும் அமைகிறது.

## 5. வர்த்தகத்தின் தன்மை

அட்டவணை II (ஒ) 22 ஆனது, வர்த்தகப் பிரிவுகளுடனும், ஏனைய குழுக்களுடனுமான இலங்கையின் வர்த்தகப் போக்கினை எடுத்துக்காட்டுகிறது. பொதுவாக நோக்குமிடத்து பண்டச்சந்தையில் நிலவிய உயர்ந்த விலை வீக்கத்தினால் எல்லா நாடுகளுடனுமான இறக்குமதிகளும் ஏற்றுமதிகளும் பெறுமதி அடிப்படையில் அதிகரித்தன.

பொதுநலவமைப்பல்லாத நாடுகளில் இருந்து செய்யப்பட்ட இறக்குமதிகள் ரூ. 15,002 இலட்சத்தால் அதிகரித்த வேளையில் இந்நாடுகளுக்கான ஏற்றுமதிகள் ரூ. 5,109 இலட்சத்தால் அதிகரித்தன. மறுபுறத்தில் பொதுநலவாய நாடுகளிலிருந்து செய்யப்பட்ட இறக்குமதிகள் ரூ. 3,500 இலட்சத்தால் அதிகரித்தவேளையில், இந்நாடுகளுக்கான ஏற்றுமதிகள் ரூ. 1,743 இலட்சத்தால் அதிகரித்தன. ஐரோப்பிய கட்டில்லா வர்த்தகக் குழுவுடன் செய்யப்பட்ட வர்த்தகத்தில்தான் இலங்கையின் வர்த்தக நிலுவை சாதகமாக இருந்தது.

நாடுகள் அடிப்படையிலான வர்த்தகத் தரவுகள், ஐ. இராச்சியத்துடன் செய்யப்பட்ட வர்த்தகம் தொடர்ந்து குறைவுற்றுச் சென்றதைக் காட்டின. ஐ. இ. இருந்து செய்யப்பட்ட இறக்குமதிகள் ரூ. 142 இலட்சத்தால் வீழ்ச்சி

யடைந்த வேளையில், இலங்கையின் ஏற்றுமதிகள் ரூ. 669 இலட்சத்தால் அதிகரித்து, ரூ. 1,968 இலட்சங்கள்கொண்ட வர்த்தக மிகையினை எடுத்துக்காட்டின. மேலும், ஐ. சோ. கு, சீனு, பாக்கித்தான் என்பவற்றுடனுன இறக்குமதிகளும், ஏற்றுமதிகளும் கணிசமானளவால் அதிகரித்தன. ஆனல் இந்நாடுகளுடனுன வர்த்தக நிலுவை குறைவைக் காட்டியது. ஐ. அ. நாடுகளுடனுன வர்த்தகத்தில் மிகை காணப்பட்டது.

**அட்டவணை II (ஓ) 22**

**இலங்கையின் பன்னுட்டு வணிகப் பொருள் வர்த்தகம்**
**வர்த்தகப் பிரிவுகள், ஏனைய தொகுதிகள், தேர்ந்தெடுக்கப்பட்ட முக்கிய வர்த்தகப் பங்காளர் ஆகிய பிரிவுகளின் அடிப்படையில்**

ப. இ. ரூபாய்களில்

| | மொத்த ஏற்றுமதிகள் க. வ. பெ. (அ) | | மொத்த இறக்குமதிகள் ம கா. கா. க. (ஆ) | | வர்த்தக நிலுவை | |
|---|---|---|---|---|---|---|
| | 1973 | 1974 | 1973 | 1974 | 1973 | 1974 |
| பொதுநலவமைப்பு நாடுகள் .. | 671.1 | 845.4 | 578.1 | 928.1 | + 93.0 | — 82.6 |
| பொதுநலவமைப்பு அல்லாத நாடுகள் .. | 1,831.1 | 2,342.0 | 2,115.4 | 3,615.6 | — 284.3 | + 1,273.6 |
| ஐரோப்பிய பொருளாதார சமூகம் ... | 591.5 | 856.8 | 622.0 | 896.2 | — 30.5 | — 39.4 |
| ஐரோப்பிய கட்டில்லா வர்த்தக அமைப்பு ... | 336.1 | 406.0 | 238.3 | 253.6 | + 97.8 | + 152.4 |
| கிழக்கு ஐரோப்பா ... | 194.9 | 276.2 | 101.9 | 342.3 | + 93.0 | — 66.2 |
| ஆ. தூ. சி. பொ. ஆ. பிரதேசம் | | | | | | |
| (அ) அபிவிருத்தி அடையும் | 392.9 | 450.1 | 543.1 | 876.6 | — 150.2 | — 426.5 |
| (ஆ) அபிவிருத்தியடைந்த... | 234.7 | 277.6 | 364.7 | 629.1 | — 130.0 | — 351.5 |
| ஐ. இ. ... | 300.2 | 367.1 | 184.5 | 170.3 | + 115.7 | + 196.8 |
| ஐ. சோ. ச. கு. .. | 63.0 | 99.3 | 47.0 | 145.5 | + 16.0 | — 46.2 |
| சீனு .. | 240.6 | 267.2 | 211.3 | 358.7 | + 29.3 | — 91.5 |
| பாக்கித்தான் ... | 213.9 | 267.1 | 108.9 | 278.9 | + 105.0 | — 11.8 |
| இந்தியா ... | 10.6 | 8.8 | 80.6 | 218.9 | — 70.0 | — 210.2 |
| ஐ. அ. நா. ... | 180.1 | 242.7 | 245.7 | 145.3 | — 65.6 | + 97.4 |

மூலம்: இலங்கைச் சுங்கம்.

(அ) கப்பற் களஞ்சியங்களையும், கப்பல் எரிபொருட்களையும் தவிர்க்கிறது.
(ஆ) பிரயாணிகள் பொதிகளையும், மீள இறக்குமதிகளையும் உள்ளடக்குகிறது.

### மக்கள் சீனக் குடியரசுடனுன வர்த்தகம்

1974ஆம் ஆண்டில் மக்கள் சீனக் குடியரசுடனுன மொத்த வர்த்தகம் ரூ. 1,740 இலட்சத்தால் அதிகரித்து, ரூ. 6,260 இலட்சமாக விளங்கியது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், இது 39 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டது. 1973ஆம் ஆண்டைவிட 1974ஆம் ஆண்டில் ஏற்றுமதிப் பெறுமதி ரூ. 260 இலட்சத்தால் அல்லது 11 சதவீதத்தால் அதிகரித்தவேளையில், சீனுவிலிருந்து செய்யப்பட்ட இறக்குமதிகள் ரூ. 1,480 இலட்சத்தால் அல்லது 70 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டன. முன்னைய ஆண்டில் வர்த்தக மிகை ரூ. 300 இலட்சமாக விளங்க, 1974ஆம் ஆண்டில் ரூ. 920 இலட்சம்கொண்ட குறையாக மாறியது.

சீனவுக்கான ஏற்றுமதிகளில் முக்கிய விடயமான றப்பர் ரூ. 102 இலட்சத்தினல் அதிகரிக்க தேங்காய் எண்ணெய் ஏற்றுமதி ரூ. 146 இலட்சத்தினல் அதிகரித்தது. அரிசி இறக்குமதி ரூ. 1,438 இலட்சத்தினல் அதிகரித்தது.

அட்டவணை II (ஒ) 23

**மக்கள் சீனக் குடியரசுடனன வர்த்தகம் 1970 – 1974**

| ஆண்டு | ஏற்றுமதிகள் | | இறக்குமதிகள் | | வர்த்தக நிலுவை ப. இ. ரூ. | வர்த்தக மொத்த விற்பனவு | |
|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி ப. இ. ரூ. | மொத்த ஏற்றுமதியின் சதவீதம் | பெறுமதி ப. இ. ரூ. | மொத்த இறக்குமதியின் சதவீதம் | | பெறுமதி ப. இ. ரூ. | மொத்த வர்த்தக விற்பனவின் சதவீதம் |
| 1970 | 252 | 12.4 | 289 | 12.5 | — 37 | 541 | 12.4 |
| 1971 | 181 | 9.4 | 161 | 8.1 | + 20 | 342 | 8.7 |
| 1972 | 160 | 8.0 | 96 | 4.6 | + 64 | 256 | 6.3 |
| 1973 | 241 | 9.2 | 211 | 7.8 | + 30 | 452 | 8.5 |
| 1974 | 267 | 7.7 | 359 | 7.9 | — 92 | 626 | 7.8 |

மூலம்: இலங்கைச் சுங்கம்.

அட்டவணை II (ஒ) 24

**மக்கள் சீனக் குடியரசுடனன பண்டவகையான வர்த்தகம் 1973 – 1974**

(ப. இ. ரூபாய்களில்)

| | 1973 | 1974 | முழுமையான மாற்றம் |
|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்** | | | |
| றப்பர் ... ... | 232.7 | 242.9 | + 10.2 |
| தேங்காயெண்ணெய் ... ... | 2.5 | 17.1 | + 14.6 |
| ஏனையவை ... ... | 5.4 | 7.2 | + 1.8 |
| **மொத்தம்** ... ... | 240.6 | 267.2 | + 26.6 |
| **இறக்குமதிகள்** | | | |
| அரிசி ... ... | 156.0 | 299.8 | + 143.8 |
| புடவை ... ... | 29.6 | 21.6 | — 8.0 |
| செத்தல் மிளகாய் ... ... | 2.9 | — | — 2.9 |
| நெசவு நூலும், தையல் நூலும் ... | 0.5 | 0.9 | + 0.4 |
| பயறு வகைகளும், வாசனைச் சரக்குகளும் ... | 2.7 | 6.0 | + 3.3 |
| தேயிலைப்பெட்டிகள் ... ... | 1.6 | — | — 1.6 |
| ஏனையவை ... ... | 18.0 | 30.4 | + 12.4 |
| **மொத்தம்** ... ... | 211.3 | 358.7 | + 147.4 |
| வர்த்தக நிலுவை ... ... | +29.3 | — 91.5 | — |

மூலம்: இலங்கைச் சுங்கம்.

**ஐ. சோ. ச. குடியரசுடனும் கிழக்கு ஐரோப்பாவுடனுமான வர்த்தகம்**

1973ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1974ஆம் ஆண்டுக் காலத்தில் ஐ. சோ. ச.குடியரசுடனும், கிழக்கு ஐரோப்பாவுடனுமான வியாபார மொத்த விற்பனவு 108 சதவீதத்தால் ரூ. 6,180 இலட்சமாக அதிகரித்தது. பிரதேசத்துக்கான ஏற்றுமதிகளின் பெறுமதி ரூ. 810 இலட்சத்தால் அல்லது 42 சதவீதத்தால் விரிவடைந்தவேளையில், பிரதேசங்களின் இறக்குமதிகளின் பெறுமதி 1973ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூ. 2,400 இலட்சத்தால் அல்லது 235 சதவீதத்தால் அதிகரித்தது. 1974ஆம் ஆண்டுக் காலத்தில் ஐ. சோ. ச. கு. பிரதேசத்துக்கான ஏற்றுமதி மொத்தப் பெறுமதியில் ரூ. 980 இலட்சத்துக்கு அல்லது 36 சதவீதத்துக்கு வகைகூறியது. போலாந்து, யூகோசிலேவியா, சேர்மன் சனநாயகக் குடியரசு, கங்கேரி, பல்கேரியா ஆகியன இப்பிரதேசத்தில் இலங்கைப் பொருட்களை வாங்கும் ஏனைய முக்கிய நாடுகளாகும்.

இப்பிரதேசத்திலிருந்து இலங்கைக்கான இறக்குமதிகள் ரூ. 1,020 இலட்சத்திலிருந்து ரூ 3,420 இலட்சமாக, 235 சதவீதத்தால் அதிகரித்தன. ஐ. சோ. ச. குடியரசிலிருந்து இறக்குமதிகள் ரூ. 470 இலட்சத்திலிருந்து ரூ. 1,455 இலட்சமாக, 211 சதவீதத்தால் அதிகரித்தன பல்கேரியாவிலிருந்தும் யூகோசிலாவியாவிலிருந்தும் செய்யப்படும் இறக்குமதிகள் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. மொத்த இறக்குமதிப் பெறுமதிகளின் விரிவுக்கு இறக்குமதிப் பொருட்களினதும் விலைகளிலேற்பட்ட அதிகரிப்பே காரணமாகும்.

அட்டவணை II (ஓ) 25

**ஐ. சோ. ச. குடியரசுடனும், கிழக்கு ஐரோப்பாவுடனுமான வர்த்தகம்* 1970 – 1974**

| ஆண்டு | ஏற்றுமதிகள் | | இறக்குமதிகள் | | வர்த்தக நிலுவை | வர்த்தக மொத்தத் தொகை | |
|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி ப. இ. ரூ. | மொத்த ஏற்றுமதிகளின் சதவீதம் | பெறுமதி ப. இ. ரூ. | மொத்த இறக்குமதிகளின் சதவீதம் | ப. இ. ரூ. | பெறுமதி ப. இ. ரூ. | மொத்த வர்த்தக தொகைகளின் சதவீதம் |
| 1970 | 174 | 8.6 | 185 | 8.0 | — 11 | 359 | 8.2 |
| 1971 | 180 | 9.3 | 151 | 7.6 | + 29 | 331 | 8.4 |
| 1972 | 145 | 7.2 | 82 | 4.0 | + 63 | 227 | 5.6 |
| 1973 | 195 | 7.5 | 102 | 3.8 | + 93 | 297 | 5.6 |
| 1974 | 279 | 7.9 | 342 | 7.5 | -- 66 | 618 | 7.7 |

மூலம்: இலங்கைச் சுங்கப் புள்ளிவிவரங்கள்.

* பல்கேரியா, செக்கோசிலவாக்கியா, சேர்மன் சனநாயகக் குடியரசு, கங்கேரி, போலாந்து, ரூமேனியா, யூகோசிலாவியா ஆகியன.

அட்டவணை II (ஓ) 26

## ஐ. சோ. ச. குடியரசுடனும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளுடனுமான வர்த்தகத்தின் பெறுமதி (பண்ட அடிப்படையில்)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | பல்கேரியா | | செக்கோ சிலவாக்கியா | | சேர். ச. கு. | | கங்கேரி | | போலந்து | | ரூமேனியா | | யூகோசிலாவியா | | ஐ. சோ. ச. கு. | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1973 | 1974 | 1973 | 1974 | 1973 | 1974 | 1973 | 1974 | 1973 | 1974 | 1973 | 1974 | 1973 | 1974 | 1973 | 1974 | 1973 | 1972 |
| (i) **மொத்த ஏற்றுமதிகள்** | **8.03** | **22.41** | **14.23** | **13.72** | **13.09** | **20.00** | **20.66** | **20.90** | **43.10** | **52.70** | **19.49** | **19.79** | **13.31** | **27.36** | **62.95** | **99.27** | **196.86** | **276.15** |
| அவற்றில் | | | | | | | | | | | | | | | | | | |
| தேயிலை ... | — | — | ... | — | ... | | 0.39 | ... | — | 1.39 | ... | .. | 0.82 | 0.13 | 8.66 | 16.83 | 9.87 | 18.35 |
| றப்பர் ... | 8.03 | 22.41 | 7.34 | 4.41 | 9.05 | 16.94 | 18.74 | 14.10 | 35.49 | 39.89 | 19.24 | 19.11 | 4.95 | 3.77 | 47.53 | 75.09 | 150.37 | 195.72 |
| தெங்குப் பொருட்கள் ... | — | — | 1.15 | 6.77 | 3.14 | 2.46 | 1.51 | 5.93 | 6.23 | 7.43 | 0.02 | — | 0.19 | 11.84 | — | — | 12.24 | 34.43 |
| (ii) **மொத்த இறக்குமதிகள்** | **0.49** | **56.97** | **6.22** | **29.61** | **3.53** | **34.18** | **3.99** | **2.04** | **29.76** | **23.11** | **8.75** | **3.75** | **2.10** | **47.18** | **47.00** | **145.51** | **101.84** | **342.34** |
| அவற்றில் | | | | | | | | | | | | | | | | | | |
| சீனி ... | — | — | — | — | — | — | — | — | 21.47 | — | — | — | — | — | — | — | 21.47 | — |
| இயந்திரங்களும் அவற்றின் பாகங்களும் மற்றவையும் ... | — | 0.02 | 0.42 | 0.13 | 0.46 | 1.12 | — | .. | 0.09 | 0.22 | 0.07 | 0.03 | 0.56 | 2.72 | 4.33 | 9.47 | 5.93 | 13.71 |
| புடவைகள் ... | — | — | 3.47 | — | — | — | — | ... | 6.69 | — | — | ... | — | — | — | ... | 10.16 | ... |
| தேயிலைப் பெட்டிகள் ... | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | — | 3.31 | 12.55 | 3.31 | 12.55 |
| இரும்பும், உருக்கும் அவற்றிலான பொருட்களும் மற்றவையும் ... | — | — | ... | 0.04 | 0.11 | 0.32 | — | — | 0.02 | ... | 0.01 | ... | 0.07 | 1.20 | 17.49 | 40.94 | 17.70 | 42.50 |
| பெற்ரோலியப் பொருட்கள் ... | — | — | — | — | ... | — | — | — | — | — | — | — | 0.12 | ... | ... | 0.12 | 0.12 | 0.12 |
| உரம ... | — | — | — | — | — | 5.15 | — | — | — | — | — | — | — | 41.10 | — | — | — | 46.25 |
| வர்த்தக நிலுவை ... | + 7.54 | - 34.56 | + 8.01 | - 15.89 | + 9.56 | - 14.18 | + 16.67 | + 18.86 | + 13.34 | + 29.59 | + 10.74 | + 16.03 | + 11.21 | - 19.82 | + 15.95 | - 46.24 | + 93.02 | - 66.19 |

மூலம்: இலங்கைச் சுங்கப் பகுதி.

## அட்டவணை II (ஓ) 26 (அ)

## பாக்கித்தானுடன் வர்த்தகம் — 1973 - 1974

பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில்

| பண்டம் | 1973 | 1974 | உண்மையான |
|---|---|---|---|
| **ஏற்றுமதிகள்:** | | | |
| தேயிலை ... | 165.3 | 202.2 | + 36.9 |
| இறப்பர் - தட்டையும் கிரேப்பும் ... | 27.6 | 39.0 | + 11.4 |
| கொப்பரா ... | 3.3 | 0.6 | — 2.7 |
| தேங்காய் எண்ணெய் ... | 2.7 | 1.2 | — 1.5 |
| பாக்கு ... | 2.5 | 2.7 | + 0.2 |
| வெற்றிலை ... | 1.1 | 7.2 | + 6.1 |
| பீடி இலை ... | 1.8 | 1 3 | — 0 5 |
| மிளகு, வட்டமான ... | 2.7 | 0.4 | — 2.3 |
| ஏனைய ... | 6.9 | 12 5 | + 5.6 |
| மொத்தம் ... | 213.9 | 267.1 | + 53.2 |
| **இறக்குமதிகள்:** | | | |
| அரிசி ... | 76.7 | 198.8 | + 122.1 |
| கருவாடு தகரங்களில், மாசி ... | 23.5 | 22.5 | — 1.0 |
| பருத்தி, திரிக்கப்படாத அல்லது கோதாத ... | 2.1 | 7.6 | + 5.5 |
| பருத்தி நூல் ... | 1.5 | 43.3 | + 41.8 |
| தையற் பொறிகள் ... | 1.2 | 1.8 | + 0.6 |
| ஏனைய | 3.9 | 4.9 | + 1.0 |
| மொத்தம் .. | 108.9 | 278.9 | + 170.0 |

மூலம்: இலங்கைச் சுங்கம்.

### பாக்கித்தானுடனான வர்த்தகம்

1974இல் பாக்கித்தானுக்கான மொத்த ஏற்றுமதிப் பெறுமதியும், பொக்கித்தானிலிருந்தான மொத்த இறக்குமதிப் பெறுமதியும் முறையே ரூ 2,671 இலட்சத்துக்கும், ரூ. 2,789 இலட்சத்துக்கும் வகைகூறின. இது முறையே ரூ. 532 இலட்சமும், ரூ 1,700 இலட்சமுங்கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. இறக்குமதியிலேற்பட்ட அதிகரிப்பின் விளைவாக. 1973இல் ரூ. 1,050 இலட்சம்கொண்ட வர்த்தக நிலுவையின் மிகையானது, 1974இல் ரூ. 118 இலட்சங்கொண்ட குறையாக மாறியது.

மொத்தத்தில் 76 சதவீதத்துக்கு வகைகூறிய பாக்கித்தானுக்கான தேயிலை ஏற்றுமதிப் பெறுமதி 1973இல் ரூ. 1 663 இலட்சத்திலிருந்து 1974இல் ரூ. 2,022 இலட்சமாக அதிகரித்தது. மொத்த இறக்குமதிகளில் ரூ. 1.988 இலட்சங்கொண்ட அரிசி இறக்குமதிப் பெறுமதி 71 சதவீதத்துக்கு வகைகூறியது. இது 1973ஆம் ஆண்டைவிட ரூ. 1,221 இலட்ச அதிகரிப்பினைக் காட்டியது. பாக்கித்துடனான 1973ஆம் 1974ஆம் ஆண்டுகளின் வர்த்தக விவரங்களை அட்டவணை II (ஓ) 26 (அ) தருகின்றது.

## 6 வர்த்தகக் கொடுப்பனவு உடன்படிக்கை

### (அ) உடன்படிக்கைகள்

1973 சனவரி 1இல் நடைமுறைக்குவந்த இலங்கைக்கும் மக்கட் சீனக் குடியரசுக்கும் இடையிலான ஐந்தாவது ஐந்து வருட வர்த்தகக் கொடுப்பனவு உடன்படிக்கையின் ஒழுங்குகளின்படி 1973 சனவரி 1இலிருந்து ஓராண்டு காலத்திற்குள் செல்லுபடியாகும் ஒரு வர்த்தக உடன்படிக்கையில் இரு நாடுகளும் கைச்சாத்திட்டன. இதன்விளைவாக சீனு ஏறக்குறைய ரூ 3,000 இலட்சம் பெறுமதியான 46,800 மெற்றிக் தொன்கள் றப்பரை வாங்குவதென ஒத்துக்கொண்டது. இது 23,400 தொன்கள் பழுவேற்றப்பட்டுப் புகையூட்டப்பட்ட தட்டை (ஆர் எஸ். எஸ்.) இல. 1 றப்பரையும், 14,040 தொன்கள் ஆர். எஸ். எஸ். 2 றப்பரையும் 9,360 தொன்கள் ஆர். எஸ். எஸ். 3 றப்பரையும் உள்ளடக்கும். இலங்கை ரூ. 3,000 இலட்சம் பெறுமதியான 130,090 மெற்றிக் தொன் அரிசியை வாங்குவதென உடன்பட்டது. சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1974இற்கு உடன்பட்ட இறப்பரின் அளவானது 10,200 மெற்றிக் தொன்களினுலும். அரிசியின் அளவு 70,000 தொன்களினுலும் குறைவடைந்துள்ளது. ஆனுல் 1974இல் இரு நாடுகளாலும் குறிக்கப்பட்ட அண்ணளவான பெறுமதி சென்றுண்டைவிட ரூ. 1,500 இலட்சம் கூடுதலாக விருந்தது.

மேலும், சீனு இலங்கையிடமிருந்து ரூ. 1,500 இலட்சம் பெறுமதியான பொருட்களை வாங்கும். இவற்றில் றப்பர், தெங்குப்பொருட்கள், தேயிலை, கொக்கோ, அருங்கற்கள், அருங்கற்கள் சார்ந்த கற்கள், மற்றும் சில மரபு வழியற்ற கைத்தொழிற் பொருட்கள் என்பன முக்கிய விடயங்களாகும். இலங்கையும் சீனுவிடமிருந்து இதேயளவு பெறுமதியான பண்டங்களை வாங்கும். அவையாவன ஏனையவற்றுடன் அரிசி, எண்ணெய், எண்ணெய் விதைகள், சில உணவுப் பொருட்கள், புடவைகள், றப்பர்த் தயாரிப்புக்கள், இரசாயனங்கள், மருந்துப் பொருட்கள், உருக்கு, சீமெந்து, கடதாசி, இயந்திரங்கள் என்பனவாகும்.

இலங்கையும் போலாந்தும் 1974 யூலேயில் ஐந்து வருட காலத்திற்கு ஒரு உடன்படிக்கையில் கைசாத்திட்டன. இது 1959 நவெம்பர் 29இல் கொழும்பில் கைச்சாத்திடப்பட்ட வர்த்தகக் கொடுப்பனவு உடன்படிக்கைக்கு மாற்றீடாகச் செய்யப்பட்டது, இதில் எந்த ஒரு கட்சியினரும் உடன்படிக்கையின் முடிவு திகதிக்கு முந்திய மூன்று மாதங்களிற்கு முன் அதனை இல்லாமல் செய்வதுபற்றி அல்லது மாற்றியமைப்பது பற்றி அறிவித்தல் கொடுக்காதவிடத்து, இவ்வுடன்படிக்கை ஒவ்வொரு முறையும் ஓராண்டுக்கு நீடிக்கப்படும். புதிய வர்த்தக உடன்படிக்கையின்கீழ் இரு நாடுகளுக்குமிடையிலான எல்லாக் கொடுப்பனவுகளும் இலவசமாக மாற்றக்கூடிய நாணயத்தில் வெளியிடப்பட அல்லது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

முன்னைய உடன்படிக்கை முற்றுப்பெற்றுலும் ஒவ்வொரு தீர்ப்பனவுக் கணக்கிலிருந்தும் பெறுகைகளும் கொடுப்பனவுகளும் செய்வதற்கு, தற்போதைய வர்த்தக உடன்படிக்கை ஒப்பமிடப்பட்ட நாளிலிருந்து ஆறு மாதங்கள்வரை விடப்பட்டது. அதன் பின்பு, கணக்குகளின் ஏதும் மீதிகளை மாற்றத்தக்க பவுண் ஸ்டேர்லிங் மூலமாக கடன்பட்டவர் தீர்க்கலாம். புதிய உடன்படிக்கை இரு நாடுகளும் மாற்றிக்கொள்ளக்கூடிய பண்டங்களின் பட்டியலை உள்ளடக்கியிருக்கவில்லை

இலங்கையும் வடகொரியாவும் 1970, செத்தெம்பர் 21இல் ஒப்பமிட்ட வர்த்தக உடன்படிக்கையின் 10ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகட்கமைய, 1975, ஓகத்து 1இலிருந்து 1975 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் இரு நாடுகளும் மாற்றிக்கொள்ளக்கூடிய பண்டங்களுக்கான ஒரு முதனிலை உடன்பாட்டைச் செய்துகொண்டன. மேலே கூறப்பட்ட உடன்படிக்கையி லுள்ளவாறு, வியாபாரம் செய்யப்பட்ட பண்டங்களின்மீது கொடுப்பனவு செய் வதற்கான மாற்றத்தக்க நாணயத்தின் பயன்படுத்துகை இன்றியமையாத வொரு சிறப்புக்கூறுகும். வர்த்தகம் செய்வதற்கான பண்டங்கள் வரையறை செய்யப்பட்ட வேளை, முதனிலை உடன்படிக்கை, வேறு பண்டங்களின் வர்த்த கத்தை நீக்கவில்லை. இலங்கையிலிருந்து ஏற்றுமதிக்கான பண்டங்களின் பட்டி யலில் றப்பர், தேங்காய் எண்ணெய், வேறு தெங்கு உற்பத்திகள், கிளிசரி னும், கொழுப்பு அமிலங்களும், தோல், சவர்க்காரம், டயரும் டியூப்புக்களும், வேறு றப்பர் உற்பத்திகளும் இடம்பெற்றன வடகொரியாவிலிருந்து ஏற்று மதிக்கான பண்டங்களின் பட்டியலில் இயந்திரக் கருவிகள், மின் உந்துகள், உருக்குக்கட்டைகள், வளமாக்கி, பருத்தி செயற்கை நூலிழைகளும் இரசாய னங்களும் இடம்பெற்றன இரண்டு நாடுகளும் ஒவ்வொன்றும் ஸ்டேர்லிங் 45 இலட்சம் பெறுமதிக்குப் பொருட்களை ஏற்றுமதிசெய்ய உடன்பட்டன்.

முதனிலை உடன்படிக்கையை ஒப்பமிட்டதற்கு மேலதிகமாக வடகொரிய அரசி, தீர்ப்பனவு கணக்குகளில் வெளிநின்ற நிலுவையான ஸ்டேர்லிங் 366,078.19ஐ இலங்கைக்குச் சார்பாக மாற்றத்தக்க நாணயத்தில் தீர்ப்ப தற்கு உடன் நடவடிக்கைகள் எடுப்பதற்கு இணங்கியது. ஆயினும், இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனத்திற்கு கொரிய உலோக ஏற்றுமதி இறக்குமதிக் கூட்டுத்தாபனத்திற்குமிடையிலான ஒப்பந்தத்தின்படி உருக்குக்கட்டைகள் ஏற்றுமதி செய்யப்பட்டால், இலங்கைக்குச் சார்பாக வெளிநிற்கும் நிலுவைக் கும் ஏற்றுமதிகளுக்கான கொடுப்பனவிற்கும் இடையிலான வேறுபாடான மீதி தொகையினை மட்டுமே மாற்றத்தக்க நாணயத்தில் தீர்க்கப்படுமென முதனிலை உடன்படிக்கையில் ஏற்பாடு செய்யப்பட்டது.

1974, யூலை 24இல் ஒப்பமிடப்பட்ட இலங்கைக்கும் அங்கேரிக்கும் இடை யிலான வர்த்தக உடன்படிக்கையும் இலங்கைக்கும் போலாந்துக்கும் இடை யிலான உடன்படிக்கையை ஒட்டியவாறே இருந்தது. இங்கும் வர்த்தக உடன் படிக்கை, ஒப்பமிடப்பட்ட நாளிலிருந்து ஐந்து ஆண்டுகள் காலப்பகுதிக்கு நடைமுறையில் இருக்கும் முன்பு 1956 யூன் 4இல் ஒப்பமிடப்பட்ட வர்த் தக ஒப்பந்தமும் 1961 செத்தெம்பர் 12இல் ஒப்பமிடப்பட்ட முதனிலை உடன்படிக்கையும், கொடுப்பனவுகள் ஒப்பந்தமும் ஒரே வேளையில் செயலற்ற தாகின. புதிய ஒப்பந்தத்தின்கீழ் கொடுப்பனவுகள் மாற்றத்தக்க நாணயத் தில் செய்யவேண்டிய நிலையில், 1974 யூலை 25இல் அலுவல் முடிந்தவேளையில், கடன்பட்டவர் தேறிய மீதியை (முன்னைய ஒப்பந்தத்தின்கீழ் பதிவு செய்யப் பட்ட) ஆறு மாதக் காலப்பிரிவிற்குள் பொருட்களைக் கொடுப்பதன் வாயி லாகத் தீர்க்கவேண்டியிருந்தது வேறு இன்னும் வெளிநின்ற, நிலுவைகள் மாற்றத்தக்க பவுண் ஸ்டேர்லிங்கினால் தீர்க்கவேண்டியிருந்தது,

இலங்கையும் பல்கேரியாவும் 1970 நவெம்பர் 27இல் ஒப்பமிட்ட வர்த்தக ஒப்பந்தத்தின் 4ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளின்படி 1974, 1975ஆம் ஆண்டுகளில் இரு நாடுகட்கிடையிலும் பொருட்களை மாற்றிக்கொள்வதற்கான முதனிலை உடன்படிக்கையினை 1974 யூலை 12இல் செய்துகொண்டன. ஒப்பந் தத்தினது 'அ' அட்டவணை பல்கேரியாவிலிருந்து இலங்கைக்கு இக்காலப்பிரி வில் ஸ்டேர்லிங் 30 இலட்சத்திற்கு பெறுமதியான ஏற்றுமதி செய்யப்படக்

கூடிய பொருட்களான பொறிகளும் உதிரிப்பாகங்களும் உருக்கு உற்பத்திகளும் உலோகங்களும் வளமாக்கிகள், இரசாயனங்கள், மருந்து வகைகள். நூலிழை, கோதுமை, கண்ணுடி, மதுசார் குடிபானங்கள், இலங்கையில் உற்பத்தி செய்யப்படாத புகையிலை என்பனவற்றைப் பட்டியலிற் கொண்டிருந்தன. அதே அளவான பெறுமதிக்கு இலங்கையிலிருந்து பல்கேரியாவிற்கான ஏற்றுமதிகள் அட்டவணை 'ஆ'வில் கொடுக்கப்பட்டிருந்தன. அது, தேயிலை, தெங்கு உற்பத்திகள், றப்பர், கொக்கோ சில நுகர்வோர் பொருட்கள், அருங்கற்களும் அவைசார்ந்த கற்களும், நறுமணப் பொருட்கள் என்பனவற்றை உள்ளடக்கி இருந்தது.

மேல் உள்ள ஒப்பந்தங்களைத் தவிர, இலங்கை அரசின் வர்த்தகப் பணிப்பாளருக்கும் சுவீடன், ஸ்டொக்லமின் அப் சுசாப்பிற்குமிடையில், 1974 ஒற்ரேபர் 28இல் ஒரு சிறப்பு வர்த்தக ஒப்பந்தமொன்று ஒப்பமிடப்பட்டது இவ்வொப்பந்தத்தில் செல்லுபடியாகும் காலம், உறுதிசெய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளாகும். இரண்டு பகுதியினரும் இணைந்து, ஐ. அ. டொலர் 1.2 இலட்சத்திற்குச் சமமான ஆண்டுப் பெறுமதிக்கு இலங்கையிலிருந்து ஏற்றுமதியும் இறக்குமதியும் ஒவ்வொரு வழியாலும் செய்யப்படும் என்பதை உறுதிசெய்தனர்.

இச்சமதொகை ஒப்பந்தத்தின் நோக்கமென்னவெனில் ஸ்கண்டினேவியா நாட்டுக்கு இலங்கையிலிருந்து ஏற்றுமதிகள் செய்வதும் அவற்ருல் எழும் வெளிநாட்டுச் செலாவணியை சுவீடனிலிருந்தும் சில குறிப்பிட்ட சூழ்நிலையில் பிற ஸ்கண்டினேவிய நாடுகளிலிருந்தும் இறக்குமதிகள் செய்வதற்குப் பயன்படுத்துவதாகும். பட்டியல் இலங்கையிலிருந்து ஏற்றுமதிகளாக கைத்தொழில் வேறு மரபுவழியற்ற பொருட்களையும் உள்ளடக்கும்வேளையில், இலங்கைக்கு பற்றுச்சீட்டுப் பொறிகள், எஃகு, தேயிலைப்பெட்டிச் சட்டங்கள், கட்டடவாக்கக் கருவிகளும் பொறிகளும். அச்சுத்தாள், மரக்கூழ் இணைந்து ஒத்துக்கொண்ட நிலையில் வேறு பொருட்களும் ஏற்றுமதிககளாக அமைந்தன.

**(ஆ) கொடுப்பனவினது தன்மை**

மத்திய வங்கி நாட்டின் இருபுடை வர்த்தகக் கணக்குகளது முகாமை பற்றிய தனது ஆழ்ந்த கவனத்தைப் பலவேளைகளில் காட்டியுள்ளது. நாட்டின் இறக்குமதி ஆற்றல் பெருமளவு பாதிக்கப்பட்ட நிலையில் இலங்கைக்குச் சார்பாக நிலுவைகள் இருந்தனவென்பது ஒவ்வாததென வலியுறுத்தப்பட்டுள்ளது. ஒருபுறத்தில் இலங்கை கொடுப்பனவு ஒப்பந்தங்களை வைத்திருந்த மரபு வழிச் சந்தைகளை விடுத்து ஏனைய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தமை மதிப்பு வாய்ந்த நாணய இழப்பிற்கு விளைவாயிற்று. இவ்விழப்பு ஏற்பட்டிராதுவிடின் இன்றியமையாத பண்டங்களை இறக்குமதி செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். மறுபுறத்தில், இருபுடை வர்த்தகத்தின் கீழ் நல்ல விலைகளில் வாங்கி விற்பதற்கான வாய்ப்பு கட்டுப்படுத்தப்படுகிறது எல்லாக் காரணிகளையொட்டியும் நன்கு கவனம் செலுத்தாமல், இருபுடை ஒப்பந்தங்களுக்கு இலங்கை இசைவுபடக்கூடாதென ஆலோசனை கூறும்வேளையில் இந்நாடு இவ்வொப்பந்தங்களிலிருந்து பெருமளவு நன்மை பெறும்முறையில் இருபுடைக் கணக்குகளை நன்முறையில் முகாமைப்படுத்தல் வேண்டுமென மத்திய வங்கி வேண்டிக்கொண்டது.

இம் முடிபுகளைப் பெறுவதற்கு 1974ல் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பது இங்கு மகிழ்ச்சியுடன் குறிப்பிடத்தக்கது. இருபுடை வர்த்தக ஒப்பந்தங்களின் முகாமையில் ஒரு வகையான நெகிழ்ச்சித் தன்மையை ஏற்படுத்தும் முறையில் திறைசேரி 1974 மே 24ல் அனுப்பிய சுற்றறிக்கையில் ஓரளவு இன்றியமையாத விடயங்கள் போன்ற வள மாக்கி, எரிசோடா, அச்சுத்தாள், உருக்குக் கட்டைகள் என்பனவற்றை பெறுவதற்கு கேள்விப்பத்திரங்களைக் கோராமல், தேவையானல், இறக்குமதி முகவர் நிலையங்கள் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவது விரும்பத்தக்கது எனக்கூறப்பட்டது. மேலும் சிறப்பான சந்தை அளவைகள் நடைமுறைவிலை அறிக்கைகள் போன்ற கிடைக்கப்பெற்ற தரவுகளிலிருந்து வெளிநாட்டுச் செலாவணிப் பண்பை உள்ளடக்கிய இறுதிச் சந்தை அறிக்கைகளும் வர்த்தகப் பணிப்பாளரால் தயாரிக்கப்படும் என குறிப்பிடப்பட்டது.

1974ல் இருபுடை ஒப்பந்தங்களின் முகாமையில் திருப்திகரமான மாற்றமென்னவெனில், அவ்வொப்பந்தங்களுக்குப் பதிலாக மாற்றத்தக்க நாணயத்தில் கொடுப்பதற்கான வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்தியமையாகும். இது நாட்டின் வர்த்தகத் தன்மையைப் பல்புடைப்படுத்துவதற்கான வலுவூட்டும் நடவடிக்கை என்பதில் ஐயமில்லை. சமவுடமை நாடுகளான போலாந்து, கங்கேரி, பல்கேரியா, வடகொரியா, என்பனவற்றுடன் ஒப்பமிடப்பட்ட வர்த்தக ஒப்பந்தங்கள் இவற்றிற்குச் சான்ருக அமையும். நடைமுறையில் இருக்கும் இருபுடை ஒப்பந்தங்களின் மீளப்பார்வையிடலும் மற்ற சமவுடைமை நாடுகளுடன் இது போன்ற வர்த்தக ஒப்பந்தங்களையொட்டிப் பேச்சு வார்த்தைகள் நடாத்துவதும் நல்லதென விதந்துரைக்கப்பட்டுள்ளது.

### (இ) இருபுடை தீர்ப்பனவுக் கணக்குகள்

மற்ற நாடுகளுடன் இலங்கையின் இருபுடை ஒப்பந்தங்களின் தீர்ப்பனவுகள் கணக்குகளது ஆய்வு, 1973ன் இலங்கைக்குச் சார்பான ரூ. 548 இலட்ச நிறுவைவானது 1974ல் ரூ. 1828 இலட்சம் கொண்டதொரு சார்பற்ற நிலுவையாக மாறியது என்பதைக் காட்டுகிறது.

**அட்டவணை II (ஓ) 27**

**இருபுடைத் தீர்ப்பனவுக் கணக்குகள்***

**1973, 1974ஆம் ஆண்டுக் கணக்குகளின் தேறிய கூட்டு மொத்தத்தின் காலாண்டுகளின்படியான நிலை**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| காலமுடிவிலுள்ள தேறிய நிலை | வரவு | பற்று |
|---|---|---|
| 1973 மாச்சு ... ... | — | 47.6 |
| யூன் ... ... | — | 64.0 |
| செத்தெம்பர் ... ... | — | 7.0 |
| திசெம்பர் ... ... | — | 54.8 |
| 1974 மாச்சு ... ... | 69.1 | — |
| யூன் ... ... | 24.4 | — |
| செத்தெம்பர் .. .. | 154.6 | — |
| திசெம்பர் ... | 182.8 | — |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* சீன, கொறியா, சிரியா, ஐ. அ. கு., ஐ. சோ. ச. கு., பல்கேரியா, செக்கோசெலவாசியா, சேர்மன் சனநாயகக் குடியரசு, கங்கேரி, போலாந்து, ரூமேனியா, யூகோசிலவாகியா.
வரவு: இலங்கை கொடுக்கவேண்டியது.
பற்று: இலங்கைக்குக் கொடுக்க வேண்டியது.

இது, சார்பான நிலுவைகளின் மட்டத்தைக் குறைக்கும் முறையில் இந்த நாடுகளிலிருந்து பெறும் இறக்குமதிகளின் அளவினைக் கூட்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதைக் காட்டுகிறது. இலங்கையைப் பொறுத்தவரையில் வெளிநாட்டுச் செலாவணி குறைவாக இருந்த பெருமளவு நீண்டகாலமாக இருபுடை வர்த்தகம் சார்பான நிலுவைகளை ஏற்படுத்திய நிலைக்கு மாருக இது உள்ளது.

இருபுடைத் தீர்ப்பனவு கணக்குகள் வைத்திருந்த நாடுகளுடன் செய்த இலங்கை ஏற்றுமதிகளின் பெறுமதி 1974இல் ரூ. 6,412 இலட்சமாக அமைய 1973ன் பெறுமதி ரூ. 5,286 இலட்சமாகும். இந்நாடுகளிலிருந்து 1974ல் பெற்ற இறக்குமதிகள் ரூ. 8788 இலட்சமாகும். இது முன்னைய ஆண்டைவிட ரூ. 2,900 இலட்சம் கொண்ட ஒரு உயர்ச்சியைக் கொண்டுள்ளது. இதன் விளைவால் இந்நாடுகளுடனை இலங்கையின் வர்த்தக நிலுவையின் குறை 1973இல் ரூ 586 இலட்சத்திலிருந்து 1974ல் 2,376 இலட்சமாக உயர்ந்தது. 1974ல் இந்நாடுகளின் ஏற்றுமதிகள் 18.5 சதவீதமாக அமைய இறக்குமதிகளது பங்கு 19.3 சதவீதமாகும்.

அட்டவணை 11 (ஒ) 29 1974இன் தீர்ப்பனவு கணக்குகளின் பெறுகைகளினதும் பகுப்பினைக் கொடுக்க, அட்டவணை 11 (ஒ) 29 இலங்கையின் மரபுவழி ஏற்றுமதிகளை, ஏற்றுமதிகளின் சதவீதமாகக் காட்டுகிறது.

### அட்டவணை II (ஒ) 28
### இலங்கையின் இருபுடை உடன்பாட்டு பாரம்பரிய ஏற்றுமதிகள் 1974இன் மொத்த ஏற்றுமதிகளின் சதவீத அடிப்படையில்

பெறுமதி ரூபாய்களில்

| | | வழமையான ஏற்றுமதிகள் (அ) | | மொத்த ஏற்றுமதி | | மொத்த ஏற்றுமதிகளின் சதவீதமாக வழமையான ஏற்றுமதிகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 1973 | 1974 | 1973 | 1974 | 1973 | 1974 |
| 1. | பல்கேரியா ... | 1.5 | 20.3 | 2.0 | 20.9 | 74.0 | 97.1 |
| 2. | சீனு . | 180.3 | 285.2 | 302.0 | 340.5 | 59.7 | 83.8 |
| 3. | செக்கோசிலவாகியா ... | 20 2 | 26.4 | 21.0 | 29.8 | 96.0 | 88.6 |
| 4. | சே. ச. கு. ... | 15.6 | 21.4 | 16.8 | 23.0 | 93.2 | 93.0 |
| 5. | கங்கேரி ... | 14.3 | 19.5 | 15.2 | 20.6 | 93.8 | 94.7 |
| 6. | போலந்து . | 36.4 | 43.5 | 41.5 | 52.4 | 87.9 | 83.0 |
| 7. | றூமேனியா ... | 9.2 | — | 10.9 | 0.7 | 84.7 | — |
| 8. | சிரியா ... | 0.03 | — | 0.5 | 0.1 | 6.5 | — |
| 9. | கொறியா ... | — | — | — | — | — | — |
| 10. | ஐ. அ. கு. ... | 42.3 | 24.8 | 42.3 | 25.5 | 100.0 | 97.3 |
| 11. | ஐ. சோ. ச. கு. ... | 58.8 | 99.8 | 76.3 | 127.7 | 77.1 | 78.2 |
| 12. | யூகோசிலேவியா ... | — | — | — | — | — | — |
| | மொத்தம் ... | 378.6 | 540.9 | 528.5 | 641.2 | 71.6 | 84.4 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) தேயிலை, இறப்பர், தெங்கு உற்பத்திகள்.

இவ்வெல்லா நாடுகளேயும் ஒன்ருக சேர்க்குமிடத்து இருபுடை கணக்குகள் மூலமான மரபுவழி ஏற்றுமதிகளான தேயிலே (8.2 சதவீதம்) இறப்பர் (71.7 சதவீதம்) தேங்காய் எண்ணெய் (1.9 சதவீதம்) தேங்காய்த்துருவல் (2.6 சதவீதம்) என்பன இருபுடை ஒழுங்குகளின்கீழ் இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் 84.4 சதவீதத்தைப் பெறுகின்றன. ஏனைய தெங்கு உற்பத்திகள் 1.3 சதவீதத்தையும் ஏனைய ஏற்றுமதிகள் 14.3 சதவீதத்திற்கும் வகை கூறுகின்றன, இறக்குமதிகளேப் பொறுத்தவரையில், இருபுடை ஒப்பந்தங்களின் கீழ் அரிசியின் இறக்குமதிகள் ரூ. 3660 இலட்சத்தில் 41.6 சதவீதத்திற்கு வகைகூறுகின்றன. மா இறக்குமதிகளின் பங்கு 8.1 சதவீதத்திற்கு வகைகூறிற்று. ஏனைய இறக்குமதிகளில் மிக முக்கியத்துவம் வாய்ந்த இறக்குமதிகளாக பருத்தி ஆடைகள் (பதனிடப்படாத, நூலிழை) இரும்பும் உருக்கும், பொறிகள், போக்குவரத்துக் கருவிகள், தாளும், மட்டையும், வளமாக்கி என்பன அமைகின்றன.

### அட்டவணை II (ஓ) 29

**1974 தீர்ப்பனவுக் கணக்குகள் வாயிலாகப் பெற்ற பெறுகைகள் கொடுப்பனவுகள் பற்றிய பகுப்பாய்வு**

(பெறுமதி இலட்சம் ரூபாய்களில்)

| | |
|---|---|
| **1. ஏற்றுமதிகள்** | |
| தேயிலே | 52.5 |
| இறப்பர் | 459.8 |
| தேங்காய் எண்ணெய் | 12.2 |
| தேங்காய்த் துருவல் | 16.4 |
| ஏனைய தெங்கு உற்பத்திகள் | 8.4 |
| ஏனைய ஏற்றுமதிகளும் வரவுகளும் | 91.9 |
| மொத்தம் | 641.2 |
| **2. இறக்குமதிகள்:** | |
| அரிசி | 366.0 |
| மா | 71.5 |
| கறி வகைகள் | 13.3 |
| பதனிடப்படாத பருத்தி | 87.4 |
| பருத்தி நூல் | 0.8 |
| மருத்துவ, மருந்தக உற்பத்திகள் | 7.2 |
| ஏனைய இரசாயனப் பொருட்கள் | 17.0 |
| இரும்பும், உருக்கும் | 47.3 |
| இயந்திரம் | 13.1 |
| போக்குவரத்துக் கருவி | 1.1 |
| தாளும், மட்டையும் | 18.0 |
| உர வகைகள் | 11.5 |
| புடவைகள் | 20.9 |
| ஏனைய இறக்குமதிகளும் கொடுப்பனவுகளும் | 203.7 |
| மொத்தம் | 878.8 |
| **3.** பெறுகைகளுக்கு மேற்பட்ட கொடுப்பனவுகள் | 237.6 |
| **4.** 1973 முடியும் வரையுமுள்ள தேறிய நிலுவை – பற்று | 54.8 |
| **5.** 1974 முடியும் வரையுமுள்ள தேறிய நிலுவை – வரவு | 182.8 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## 7. கப்பற் கூலியும் மிகைக் கட்டணங்களும்

### (அ) பொதுவான கப்பற் செலவு உயர்வுகள்

1974ல் இலங்கை எதிர்நோக்கிய முக்கிய முக்கிய சிக்கல்கள் பொதுவான கப்பற் கட்டணங்களின் ஏற்றங்கள், எரிபொருள், துறைமுக நெருக்கடி மிகைக்கட்டணங்கள், நாணயச் சீராக்கல் காரணி ஒட்டிய கட்டணங்கள் என்பனவாகும். கப்பற் கட்டணங்களின் ஏற்றங்கள் 1974ல் உலகின் பண்டங்களினது விலைகளின் உயர்வினல் இலங்கைக்குச் சேர்ந்திருக்க வேண்டிய எவ்வித வெளிநாட்டுச் செலாவணிப் பெறுகைகளைப் பாதித்ததுடன் தொடர்ந்து கீழிறங்குகின்ற சென்மதி நிலுவையின்மீது மேலும் ஒரு பளுவை ஏற்படுததியுள்ளது எடுத்துக்காட்டாக, இலங்கையின் ஏற்றுமதிகளுக்கான மத்திய வங்கியின் கப்பற்சட் ணக்குறிகாட்டி (1961 = 100) 60ம் ஆண்டுகளின் பெரும் பகுதிக்கு எல்லையளவான உயர்ச்சிகளை மட்டுமே காட்ட 1970 முதல் எல்லாப் பெரும்பாலான ஏற்றுமதிப் பண்டங்களுக்கான தனியான குறிகாட்டிகள் குறிப்பிடத்தக்களவு உயர்ச்சிகளை எடுத்துக்காட்டுகின்றன. இப்பண்டங்களுக்கான முழுமையான கப்பற் கட்டண குறிகாட்டி 1973ன் 217.2 சதவீதத் வீதத்திலிருந்து 1974ல் 234.9 வீதமாக உயர்வடைந்தது*.

1974ல் 10 சதவீதத்திலிருந்து 37 சதவீத வரையிலான பொது கப்பற் கட்டண வீத உயர்வை 11 கப்பற்கூட்டுநிலையங்கள் அல்லது கப்பல் லைன்கள் ஏற்படுத்தின. 1973ம் ஆண்டில் இரண்டு கப்பற் கூட்டு நிலையங்களும் நான்கு கப்பல் லைன்கள் மட்டுமே 10 சதவீதம் முதல் 20 சதம் வரை கொண்ட கப்பற் கட்டண வீத உயர்வுகளை ஏற்படுத்தின. இலங்கையின் மத்திய கப்பற் கட்டண பணியகம் கப்பற் கட்டணம் தொடர்பாக கப்பற்கூட்டு நிலையங்களாலும், கப்பற் சொந்தக்காரர்களாலும் கொடுக்கப்பட்ட தரவுகளை ஆராய்ந்ததின் பின்பு குறைந்த கப்பற்கட்டணங்களை ஏற்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளை நடாத்தியது. கப்பற் கட்டணங்களில் அதிகரிப்பை ஏற்படுத்துவதற்கு குறைந்தளவு 90 நாட்களைக்கொண்ட முன்னறிவிப்பு கொடுக்கப்படவேண்டுமெனப் பணியகம் கேட்டுள்ளது தொழிற்பாட்டில் ஏற்பட்ட செலவுகளின் உயர்வும், அதன்காரணமாக ஏற்படும் இழப்புக்களைத் தாங்கமுடியாத நிலையுமே கப்பற்கட்டண வீதங்களை உயர்த்துவதற்கு காரணமெனக்கூட்டு நிலையங்கள் கூறியுள்ளன.

### (ஆ) எரிபொருள் மிகைக் கட்டணங்கள்

எண்ணெ விலை உயர்வின் விளைவுகளில் ஒன்று கூட்டுநிலையங்கள் எல்லை கடந்த செலவினைச் செலவிடவேண்டிபிருந்தது இது கூட்டுநிலையங்களால் அடைந்த இழப்புக்களை மீளப்பெற எரிபொருள் மிகைக்கட்டணமொன்றை புகுத்த வேண்டிய தேவையை ஏற்படுத்தியதுடன் பல கூட்டு நிலையங்கள் தங்கள் ஏற்றுமதி ஒப்பந்தச் சீட்டுகளில் எரிபொருள் விதிகளையும் ஏற்படுத்தின. 1974ல் ஒன்பது கூட்டு நிலையங்கள் அல்லது லைன்கள் புதிய எரிபொருள் மிகைக் கட்டணங்களைக் கொண்டுவர ஆறு லைன்கள் எரிபொருள் மிகைக்கட்டணங்களை உயர்த்தின. பல கூட்டுநிலையங்கள் பெருமளவில் உயர்ச்சினை ஏற்படுத்தின. இது பொதுவாக 3 54 சதவீதத்திற்கும் 56 சதவீதத்திற்கு மிடையில் இருந்ததுடன் உயர்வாகவும் இருந்தது. எரிபொருள் விலைகளில் குறைப்பாலும் இலங்கை மத்திய கப்பற் கட்டணப் பணியகத்தின் வேண்டுகோளினலும் சில எரிபொருள் மிகைக் கட்டணங்களில் குறைப்புக்கள் ஏற்பட்டன.

---

* இலங்கையின் அண்மைய கப்பற்கட்டணவீதங்களின் அபிவிருத்திக்கு இலங்கை மத்திய வங்கி 1974 ஒற்றோபர் செய்தித்திரட்டைப்பார்க்க பக்கம்.

### (இ) துறைமுக நெருக்கடி மிகைக்கட்டணங்கள்

துறைமுக நெருக்கடியினாலும் துறைமுகங்களின் சீரற்ற தன்மைகளினாலும் ஏற்பட்ட தாமதங்களால் மேலதிக தொழிற்பாட்டுச் செலவுகளைத் தாங்க முடியாத நிலையில் கூட்டு நிலையங்கள் இருக்கும்போது உரிய துறைமுக நெருக்கடிக் கட்டணங்கள் புகுத்தப்பட்டன. 1974ல் மிகைக்கட்டண விதிப்பில் குறிப்பிடத்தக்க உயர்வுகள் காணப்பட்டன. எடுத்துக் காட்டாக 1974ல் பத்து கூட்டுநிலையங்கள் அல்லது லைன்கள் 7.5 சதவீதத்திலிருந்து 50 சதவீதம் வரையிலான நெருக்கடி மிகைக் கட்டணங்களைப் புகுத்தியமை உலகின் 28 வேறு துறைமுகங்களினைப் பாதிக்கும் அதேவேளையில் 1973ல் இத்தகைய கட்டணங்களை ஐந்து துறைமுகங்களையொட்டி இரண்டு கூட்டு நிலையங்கள் விகித்தன. இத் துறைமுகங்களின் தன்மையொட்டி பின்னர் இம் மிகைக்கட்டணங்கள் ஒன்றில் மேல்நோக்கி அல்லது கீழ்நோக்கித் திருத்தப்பட்டன அல்லது நீக்கப்பட்டன.

### (ஈ) நாணயச்சீராக்கக் காரணி (அல்லது மதிப்பிறக்க மிகைக்கட்டணம்)

இம்மிகைக் கட்டணம், தீர்வை நாணயத்துடன், அதாவது, கப்பற் கட்டண வீதங்கள் நிர்ணயிக்கப்பட்ட நாணயங்களுடன் தொடர்புள்ளதாகும். தீர்வை நாணயத்தின் மதிப்பிறக்கத்தை ஈடுசெய்வதன் பொருட்டுமிகைக் கட்டணம் விதிக்கப்படுகின்தது. இம்மாதிரியான மதிப்பிறக்க மிகைக் கட்டணம் அல்லது நாணயச் சீராக்கக் காரணி அண்மைக் காலங்களிற் பரந்தளவில் பயன்படுத்தப் பட்டுள்ளது.

1974இல் ஒரு கூட்டு நிலையமே நா சீ. கா. யைப் படிப்படியாக உயர்த்தியது. இவ் நா. சீ. கா. உயர்ச்சியின் மட்டமானது, 1974இல் கூடியதாக இருந்தது மூன்று வேறு கூட்டுநிலையங்கள் பல தடவைகளில் ஒன்றில் வழங்கல் நாணயங்களின் (அவையாவன அவுத்திரேலியா டொலரும் நியூசீலாந்து டொலரும்) மதிப்பிறக்கத்தினால் அல்லது முதன்மைத் தீர்வை நாணயமான ஐ. அ. டொலரின் ஏற்றவிறக்கத்தினால் நா. சீ. கா யை மாற்றின. மத்திய கப்பற் கட்டணப் பணியகத்தின் வேண்டுகோளிற்கமைய பின்கூறப்பட்ட கூட்டு நிலையங்கள் முழுமையாக நா. சீ. கா. வை மீளப்பெற இன்னொரு கூட்டு நிலையம் உயர்வைத் தற்காலிகமாகத் தடைசெய்தது. நா. சீ. கா. யில் உள்ள ஒரு இடர்ப்பாடு யர்தெனில் அது தனி விடயமாக இனங்காணுவதில் ஏற்பட்டுள்ள சிக்கலேயாகும்; ஏனெனில் நா. சீ. கா இல் உள்ள சில மிகைக் கட்டணங்கள் பொதுக் கப்பற் கட்டணங்களுடன் இணைக்கப்பட்டதேயாகும்.

கப்பல்களிற் பண்டங்கட்கான இடங்களை ஒதுக்குதல், பொருட்கள் ஒன்று சேர்ப்பதை உறுதிப்படுத்தல், கப்பல் கூட்டுநிலையங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தி மரபு வழியற்ற பொருட்களுக்கு ஊக்குவிப்பு வீதங்களைப் பெறுதல் போன்ற இலங்கை மத்திய கப்பற் கட்டணப் பணியகத்தின் வெற்றிகரமான தொழிற்பாடுகளை விரிவாக மீளாய்வு செய்வதும், பயனுடையதாகும்.

1974இல் இதன் பணி விரிவாக்கப்பட்டமையின் விளைவால், எல்லாச் சேர்விடங்களுக்கும் இலங்கையிலிருந்து எல்லா ஏற்றுமதிகளும் பணியகத்தினூடாக செய்யப்பட்டது. எனவே, இலங்கையின் துறைமுகங்களில் பொருட்களை ஏற்றத் தொடங்கவிருக்கும் கப்பல்களில் 1974 பெப்புருவரி 1ஆந் திகதியன்று அல்லது பின்னர், எல்லாச் சேர்விடங்களுக்கான இடவசதித் தேவைகளை உறுதிப்படுத்திக் கொள்ள, பணியகத்திற்கு முன்னறிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். கப்பல்க்ளின் அவைக்கான முறையிலுள்ள நேரத்தைக்

கூடியஅளவில் குறைப்பதற்கு கப்பற் சரக்குக் கூட்டுத்தாபனம், துறைமுக சரிபார்த்தல், பாதுகாப்புப் பணி கூட்டுத்தாபனம், இலங்கைச் சுங்கம், என்பனவற்றின் ஒத்துழைப்புக்களுடன் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பண்டங்கள் ஏற்றியிறக்கலை ஒருங்கிணைப்பது, கொழும்புத் துறைமுகத்தின் உற்பத்தித் திறனை உயர்த்த உதவிசெய்தது.

இலங்கை ஏற்றுமதி சரக்குகளைத் தூக்கிச்செல்வதற்கான நியதிகள் விதிகளையொட்டி விடயங்கள் மீது, தனிப்பட்ட கப்பலாளர் அல்லது வேறு நிலையங்களை விடப் பணியகத்தியிடம் மிகவும் வன்மையான பேரம் பேசும் தன்மை இருந்தது. இலங்கைக் கப்பற் கூட்டுத்தபனம் தலையாய நாடுகளுக்கு, சரக்குச் சேவையை நடாத்தியதால், பேரம் பேசும் ஆற்றலை மேலும் வலுவாக்கியது. மேலே கூறப்பட்ட நோக்கங்களை அடைவதற்கு இலங்கையின் கப்பலாளர் சபை தொடர்ந்தளித்த நல்ல ஒத்துழைப்பைக் குறிப்பிடவேண்டும்.

**துறைமுகங்களிற் கையாளப்பட்ட சரக்குகள்**

இலங்கையின் துறைமுகங்களால் கையாளப்பட்ட சரக்குகளின் அளவானது கடந்த சில்வாண்டுகளில் மற்றைய நாடுகளுடன் படிப்படியாகப் பண்ட வர்த்தகத்தில் ஏற்பட்ட சுருக்கத்தைக் காட்டுகின்றது. கொழும்பு, காலி, திருகோணமலை ஆகிய துறைமுகங்களாற் கையாளாப்பட்ட சரக்குகளின் மொத்த அளவானது, 1973இன் 2,543,283 ஏற்றுமதித் தொன்களிலிருந்து 1974இல் 2,448,947 ஏற்றுமதித் தொன்களிற்கு வீழ்ச்சியுற்றது. எதிர்மாறாக, 1968இல் கொழும்புத் துறைமுகம் தனியாகக் கையாண்ட சரக்கு, 3074,747 தொன்களாகும். 1974இல் திருகோணமலை, காலி, ஆகிய துறைமுகங்களினாற் கையாளப்பட்ட சரக்கின் அளவு முறையே 29 சதவீதத்தாலும், 25 சதவீதத் தாலும் வீழ்ச்யுற, 1973உடன் ஒப்பிடுகையில் கொழும்புத் துறைமுகத்தாற் கையாளப்பட்ட சரக்கு 1.27 சதவீதத்தால் மாத்திரம் வீழ்ச்சியுற்றது.

1974இல் கொழும்புத் துறைமுகத்தால் காலாண்டு அடிப்படையில் ஏற்றியிறக்கப்பட்ட சரக்கின் அளவு 1973இன் தொடர்பான காலாண்டுடன் ஒப்பிடப்பட்டு அட்டவணை II (ஓ) 30 தருகின்றது.

அட்டவணை II (ஓ) 30

**கொழும்புத் துறைமுகத்திற் கையாளப்பட்ட ஏற்றுமதி, இறக்குமதிச் சரக்குகள்**

கப்பலிடல் தொன்கள்

| காலாண்டு | கையாளப்பட்ட சரக்கு | | மாற்றம் | |
|---|---|---|---|---|
| | 1973 | 1974 | முழுவதும் | % |
| 1 ஆம் ... | 636,478 | 567,218 | — 69,260 | — 10.9 |
| 2 ஆம் ... | 560,802 | 659,595 | + 98,793 | + 17.6 |
| 3 ஆம் ... | 569,161 | 576,088 | + 6,927 | + 1.2 |
| 4 ஆம் ... | 585,796 | 519,409 | — 66,387 | — 11.3 |
| ஆண்டு ... | **2,352,237** | **2,322,310** | — **29,927** | — 1.3 |

மூலம்: துறைமுக (சரக்கு)க் கூட்டுத்தாபனம்.

8. பண்ட உதவி

*1974*இல் வெளிநாடுகளால் வழங்கப்பட்ட பண்ட உதவியின் மொத்தப் பெறும்தித் தொகையானது, ரூ. *5,862* இலட்சமாக அமைவதுடன் *1973*ஆம் ஆண்டைவிட ரூ. *3,047* இலட்சமான உயர்வைக் காட்டுகிறது.

பண்ட உதவியின் மொத்தப் பெறுமதியில் ரூ. *3,475* இலட்சம் அல்லது *59* சதவீதம் நுகர்வோர் பொருளுக்கு வகை கூற, ரூ. *2,387* இலட்சம் அல்லது மீதி, *41* சத வீதம் ஏனைய பொருட்களை அடக்கியிருந்தது.

வழங்கல் நாடுகளிலிருந்து உதவிகள், உணவாகவும், ஏனைய உதவிகளாகவும் வகைப்படுத்தி அட்டவணை II (ஓ) *31*இல் தரப்பட்டுள்ளன.

அட்டவணை II (ஓ) 31

பண்ட உதவி

பெறுமதி – பத்து இலட்சம் ரூபாய்களில்

| நாடு | 1<br>உணவு உதவி | 2<br>ஏனைய உதவி | 3<br>1 + 2இன் மொத்தம் |
|---|---|---|---|
| அவுத்திரேலியா ... ... ... | 27.5 | — | 27.5 |
| கனடா ... ... ... | 25.9 | 8.1 | 34.0 |
| மக்கள் சீனக் குடியரசு ... ... ... | 175.6 | — | 175.6 |
| டென்மார்க்கு ... ... ... | — | 4.6 | 4.6 |
| பிரான்சு ... ... ... | — | 21.0 | 21.0 |
| சேர்மன் மக்களாட்சிக் குடியரசு ... ... | — | 1.0 | 1.0 |
| சேர்மன் சமஷ்டிக் குடியரசு ... ... ... | 37.4 | 92.7 | 130.1 |
| ஹங்கேரி ... ... ... | — | 0.7 | 0.7 |
| இந்தியா ... ... ... | — | 25.7 | 25.7 |
| இத்தாலி ... ... ... | — | 2.2 | 2.2 |
| யப்பான் ... ... ... | — | 54.6 | 54.6 |
| ஐக்கிய இராச்சியம் ... ... ... | — | 14.0 | 14.0 |
| சுவீடன் ... ... ... | 10.4 | 8.1 | 18.5 |
| அமெரிக்க ஐக்கிய நாடுகள் ... ... ... | 34.4 | 3.5 | 37.9 |
| ஐ. சோ. ச. கு. ... ... ... | — | 2.5 | 2.5 |
| கெயர் . ... ... | 21.4 | — | 21.4 |
| ஐ. பொ. ச. ... ... ... | 14.9 | — | 14.9 |
| மொத்தம் ... | 347.5 | 238.7 | 586.2 |

மூலம்: திட்டமிடல், பொருளாதார அலுவல்கள் அமைச்சு.